Free Website :
for Matrialmonial Website

micheaijulian@facebook.com
www.indianadarmurasu.com

பிப்ரவரி-2024
நாடார் :14
முரசு :2



# இந்தியன் நாடார் முரசு

INDIAN NADAR MURASU

விலை ரூ.15/-

# டைரி உலக சக்கரவர்த்தி

## M.J.பிரதாப்சிங்

20.11.1931 - 18.01.2024



**Fondly Remembered By:**
P. Rajah Sunder Singh & Mrs. Suseela Rajah
Dr. (Mrs.) Sheila Sathiakumar & Dr. D. B. D. Sathiakumar
P. Sam Prasad & Mrs. Ponmani Prasad
R. Arul Prathan Singh & Family
R. Asir Ratan Singh & Family
Dr. (Mrs.) Cynthia Kirubakaran & Family
Dr. S. Immanuel Arunkumar & Family
P. Joseph Abhishek Rajendar Singh
P. Ashish Pradip Singh

உழைப்பின் சரித்திரம் புதிய தொடர் ஆரம்பம்

சென்னை வாழ் நாடார் சங்க பொதுச்செயலாளர்

T.தங்கமுத்து - T.சாந்தி தங்கமுத்து அவர்களின் இல்ல திருமணவிழா







மணமக்கள்: Dr.T.அசோக், MBBS.,MD.,(Dermat)

Dr.T.ரேணுகா, MBBS.,M.S.,(OG)

வரவேற்ப்பு: 05.01.2024

வரவேற்ப்பு:M.P. திருமண மண்டபம்

புழல், சென்னை-66.



வருகை தந்து வாழ்த்திய நல் இதயங்களுக்கு

நன்றி! நன்றி!! நன்றி!!!

அகில உலக நாடார்களின் செய்திக்களஞ்சியம்

R.Dis.NO.1434/09

# இந்திய நாடார் முரசு

சமுதாய பல்சுவை மாத இதழ்



கௌரவ ஆசிரியர்: **விஜய்வசந்தகுமார்.**

பேராசிரியர்: **திரு.ஜூலியன் நாடார்**

ஆசிரியர்: டாக்டர்.J.*அர்னால்ட் அரசு ஜூலியன்*

துணை ஆசிரியர்:திருமதி.எல்மாமதி.,எம்.ஏ.பி.எட்

இணை ஆசிரியர்:ரேஷ்மாமதி M.Sc.,(U.S.A)

இலக்கிய ஆலோசகர்: கலைமாமணி திரு.தாமரை செந்தூர்பாண்டியன்

சட்ட ஆலோசகர்:

Dr.தே.தேவ் ஆனந்த். MBA.,M.Com.,MHRM.,MSW., ML., Ph.D.,

செயலாளர்,அன்னைவேளாங்கண்ணி கல்வி நிறுவனங்கள், சென்னை-15.

ஆலோசனைக் குழு:

திருமதி.ராணிவெங்கடேசன் முன்னாள் MLA.,

டாக்டர்.S.தேவராஜ் Chairman

Annai Veilankanni's Group of Educational Institutions

R.K.காளிதாஸ் தலைவர்.தெட்சணமாற நாடார் சங்கம், மாவட்டதலைவர்: தென்காசி, திருநெல்வேலி மாவட்ட வர்த்தக கழகம், தலைவர், பெருந்தலைவர் காமராஜர் தினசரி மார்கெட் பாவூர்சத்திரம்., அமைப்பாளர்: தென்காசி மாவட்ட அனைத்து சமுதாய ஆலோசனை கமிட்டி.

திரு.பி.சின்னமணி நாடார்

தலைவர், சென்னைவாழ் நாடார் சங்கம்

டாக்டர் வி.ஜி.சந்தோஷம்

டாக்டர்.குமரேசன்

போரூர் ஆனந்தராஜ்

தலைவர் நெ.தூ.நா.மகமை பரிபாலன சங்கம்.



தலைமை அலுவலகம்:

**புதிய எண்:1, ப.எண்:21, கிருஷ்ணப்ப நாயக்கன் தெரு, மேட்டுப்பாளையம்,மேற்கு மாம்பலம், சென்னை-600 033.**

**போன்:044-23810610 (வீடு)**

**E-mail:nadar10_2000@yahoo.com, indianadarmurasu@yahoo.com**

தலைமை வியாபார அலுவலகம்:

**30, தேரடி தெரு, சைதாப்பேட்டை, சென்னை-600 015.**

**போன்: 044-23811087,**

**அலுவலக நேரம்:10.00am to 9.00pm**

இந்திய நாடார் முரசுக்காக அச்சிட்டு வெளியிடுபவர் டாக்டர்.திரு.K.M.J.A.அரசு, ஜூலியன்.

அலுவலக நிர்வாகம், கம்ப்யூட்டர்: திருமதி.G.சத்தியாபுரூஷோத்தமன்,M.A.,B.Ed



ALL RIGHTS RESERVED LEGAL JURISDICTION CHENNAI CITY COURTS ONLY. NOTHING INDIA NADAR MURASU IS INTENED TO DEFAME ANY PERSON. BUT EXPRESSED IN GOOD FAITH, PURSUIT OF TRUTH AND PUBLIC GOOD.

எந்த வகையிலும் மறுபதிப்பு செய்தல் தடை செய்யப்படுகிறது. கதைகளில் வரும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே. கதை, கட்டுரை முதலியன எதையும் தபால் அல்லது மின் அஞ்சல் மூலமாக அனுப்பவும். அவற்றை திருத்தி அமைக்கவும், சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு. வெளியூர் சந்தாதாரர்கள் தபால் மூலமாகவோ, காசோலையாகவோ அனுப்பி வைக்கவும். அறிமுகம் இல்லாதவர்களிடம் சந்தா மற்றும் விளம்பரத் தொகையை கொடுத்து ஏமாற வேண்டாம்.



விளம்பர கட்டண விபரம்

| | | |
|---|---|---|
| வெளி முன் அட்டை | (17X24 CMS) | ரூ. 25,000 |
| வெளி பின் அட்டை | (17X24 CMS) | ரூ. 15,000 |
| உள் அட்டை | (17X24 CMS) | ரூ. 10,000 |
| முழுப்பக்கம் | (17X24 CMS) | ரூ. 5,000 |
| அரைப்பக்கம் | (17X12 CMS) | ரூ. 2,500 |
| கால்பக்கம் | ($8^{1/2}$X12 CMS) | ரூ. 1,500 |
| அரைக்கால்பக்கம் | ($8^{1/2}$X6 CMS) | ரூ. 900 |

ஆண்டு சந்தா- ரூ.550, 2ஆண்டு சந்தா-ரூ.1100

ஆயுள் சந்தா ரூ.15,000, 5 ஆண்டு சந்தா- ரூ.5000.

மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, கனடா,

தென் ஆப்பிரிக்கா மற்றும் அயல் நாடுகளுக்கு

ஆண்டு சந்தா/ ரூ.3000 அல்லது அமெரிக்கா டாலர்,$100

ஆயுள் சந்தா/ரூ.20,000 அல்லது அமெரிக்கா டாலர் $600

சந்தா அனுப்ப வேண்டிய வங்கி கணக்கு எண்:

The Karur Vysys Bank Saidapet Branch: MR.K.M.Julian

IFSC Code: KVBL0001651.

A/c **No: 1651173000000900**

**Google Pay : 9382172884 paytm 9382172884**


# ஆசிரியர் உரை

**சேர, சோழ, பாண்டியர் மற்றும் காமராஜர் வழி வந்த நாடார்களே!!!**



புத்தாண்டு பிறந்து இந்த ஆண்டும் மற்ற ஆண்டுகளை போல் நடைமுறைக்கு வந்துவிட்டது. ஆனால் உலக அளவில் பார்த்தால் கூட எந்த மாற்றமும் இல்லை. மக்கள் எல்லோருமே ஒருவருக்கொருவர் குறைகளை கூறி கொண்டு பாமர மக்களை திணரடித்துக் கொண்டிருக்கிறார்கள். அனைவருமே பொது மக்களின் நலனில் அக்கரை காட்டுவது போல் ஒரு சிலருக்குத்தான் தனது திறமையை செலுத்துகிறார்கள். இவர் நல்லது செய்ய மாட்டாரா? அவர் நல்லது செய்ய மாட்டாரா? என்று அலையும் மக்களை தலைவர்கள் அணி அணிகளாக பிரித்து அவர்களுக்கு வேண்டிய சிறிய சலுகைகளை செய்து விட்டு தனது செல்வத்தையும் செல்வாக்கையும் உயர்த்திக் கொண்டே போகிறார்கள். இந்த செயல் உலக அளவில் இருந்தாலும் நமது நாடார்கள் மத்தியிலும் பரவி வருகிறது. தமிழகத்தில் நாடார்களுக்கென்று முப்பெரும் நாடார் சங்கங்கள் உள்ளன. அவர்கள் நாடார்களை சரியான வழியில் நடத்தி வந்தனர். அப்போது ஆளுமை மிக்க தலைவர்களும் இருந்தார்கள். தற்போதைய தலைவர்கள் எவ்வளவு திறமையானவர்களோ அத்தனைக்கும் நாடார்கள் அவர்களுக்கு குடைச்சல் கொடுப்பதால் அவர்களுக்கு அந்த பிரச்சனையை சமாளிக்கவே நேரம் போதவில்லை இதற்கிடையில் நம் இளைஞர்கள் வாட்சப் மூலம் இளைஞர்களை சேர்த்துக் கொண்டு பல ஆயிரக்கணக்கான அமைப்புகளை ஏற்படுத்தியுள்ளனர். அந்த ஆயிரக்கணக்கான சங்கங்களும் எதற்காக ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்று அவர்களுக்கே தெரியவில்லை. சுமார் 100 இளைஞர்களை தொடர்பு கொண்டு அவர்களிடம் சில கருத்துகளை கேட்டபோது அவனைவரும் ஒரே பதிலை தான் கூறுகிறார்கள். உங்கள் அமைப்பின் நோக்கம் என்ன? என்ற போது நாடார்களின் ஒற்றுமையை ஏற்படுத்தவும், நம் சரித்திரத்தை மீட்டெடுக்கவும், காமராஜர் பெயரை மேம்படுத்தவும் பாதிக்கப்பட்டவர்களுக்காக போராடவும், அரசியலில் அங்கீகாரம் பெறவும் அதிக பதவிகளையும் எம்.எல்.ஏ., எம்.பி. இடங்களை தரும் கட்சிகளை ஆதரிக்கவும் என்று ஏக மனதாக கூறினார்கள். ஒற்றுமை ஒற்றுமை என்று கூவும் இளைஞர்களுக்கு இத்தனை ஆயிரம் அமைப்புகளையும் அந்த அமைப்பின் தலைவர்களையும் ஒன்றிணைக்க முடியுமா? என்று புரியவில்லை அந்த அமைப்பின் தலைவர்களை மறைமுகமாகவும், நேரடியாகவும் பல அரசியல் கட்சிகளுக்கும் மத அமைப்புகளுக்கும் ஒரு சில செல்வந்தர்களுக்கும் அடிமையாக இருப்பது இளைஞர்களுக்கு தெரியவில்லை. அவர்களுக்கு பெரியவர்கள் கூறும் அறிவுரைகளை அவர்களை ஏற்றுகொள்ளும் மனநிலையிலும் இல்லை இந்த நிலையை காலம் தான் மாற்றவேண்டும் அந்த காலத்திற்காக காத்திருப்போம்!!

## ஈகிள் எம்.ஜே.பிரதாப்சிங் அவர்களின் மறைவுக்கு இரங்கல்



- (டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன்). ஆளுநர் பாண்டிசேரி, தெலுங்கானா)

ஈகிள் குழுமத்தின் தலைவர்.எம்.ஜே.பிரதாப்சிங், வயது முதிர்வு காரணமாக இயற்கை எய்தினார் என்ற செய்தி வருத்தத்தை அளிக்கிறது.

அவரைப் பிரிந்து வாடும் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் என்னுடைய ஆழ்ந்த இரங்கலையும் வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவரது ஆன்மா அமைதிபெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

## "ஈகிள் பிரஸ்" என்றால் பிரதாப் சிங்"
## பிரதாப் சிங் என்றால் "ஈகிள் பிரஸ்"

(டாக்டர் வி.ஜி.சந்தோசம்)



அருமைச் சகோதரர் ஈகிள் பிரஸ் பிரதாப்சிங் அவர்கள் நெல்லை மாவட்டம், வடக்கன்குளத்தில் பிறந்தவர். அவருக்கும், விஜிபி சகோதரர்களாகிய எங்களுக்கும் ஏறக்குறைய 60 ஆண்டுகளாக நட்பு உண்டு. அவர், முதன்முதலில் சென்னை, பிராட்வேயில் பயோரியா பல்பொடியை வியாபாரம் செய்தனர். அப்போது நாங்கள் பிராட்வேயில் இருந்து ஸ்ரீமகள் காலண்டரை வாங்கி விற்பனை செய்தோம். அவ்வேளையில் நான் பயோரியா கம்பெனிக்குச் சென்று, பிரதாப்சிங் அவர்களிடம், வியாபார நுணுக்கத்தை கலந்து ஆலோசிப்பேன்.

அதன்பிறகு, சென்னை ராயபுரத்தில் அச்சகத் தொழிலை மேற்கொண்டு அதனை மிகவும் சிறப்பாக நடத்தி வந்தார். "ஈகிள் பிரஸ்" என்றால் டைரி, டைரி என்றால் "ஈகிள் பிரஸ்" என்ற காலம் அது! நாளடைவில், இறையருளால் எங்கள் இரு குடும்பமும் வளர்ச்சியடைந்து, சமுதாய மக்கள் யாவரும் அறியும் வண்ணம் விளங்கினோம்!

அவரும், அவர் துணைவியார் பாப்பி, மகன்கள், ராஜா, பிரசாத் மற்றும் அருமை மகள் டாக்டர் ஷீலா இவர்கள் எல்லோரும் இணைந்து அச்சகத் தொழிலை சிறப்பாக நடத்தி வந்தார்கள். டாக்டர் ஷீலா அவர்கள் வடசென்னை, பல்லாவரம் பகுதியில் சுகம் மருத்துவமனையை நடத்தி வருகிறார். பிரதாப்சிங் அவர்கள் பதிப்பகத்துறையில் கால்பதித்தவர், இறைபக்தியோடு, இறையருள் பெற்ற இறைசீலராக வாழ்ந்து வந்தவர். தமிழ் ஆளுமைகளின் நூல்களை வெளியிட்டுப் பூம்புகார் பதிப்பகத்தைத் தமிழ்க் கருவூலமாக நடத்தியவர் பிரதாப் சிங் அவர்கள். தமது 93ஆம் அகவை வரை இப்பூவுலகில் வாழ்ந்து இறைவனிடம் சேர்ந்துவிட்டார். அவரது இழப்பு மிகவும் வேதனை தருகிறது. அவரது பிரிவால் வாடும், குடும்பத்தினர் உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று அவர் இவ்வுலகில் இல்லை என்றாலும், அவர் புதல்வர்கள் அப்பணியைச் சிறப்பாகச் செய்துவருகின்றனர். அவர் புகழ் என்றும் நிலைத்து நிற்க இறைவனை வேண்டுகிறேன்!


## ஸ்ரீ முருகன் ஜோதிட நிலையம்



வாக்கிய பஞ்சாங்கப்படி கம்ப்யூட்டர் ஜாதகம் கணித்து தரப்படும். உங்கள் எதிர்காலம், படிப்பு, உத்தியோகம், தொழில், திருமணம் எப்போது என்ற நிலை அறிய உடனே அணுகவும். ஜாதக ரீதியாக தோஷ நிவர்த்தி பரிகாரங்கள் சொல்லப்படும். மனையடி வாஸ்து சாஸ்திரமும் பார்க்கப்படும். உங்கள் மகளுக்கோ, மகனுக்கோ உடனே திருமணம் நடைபெற எங்களை நாடுங்கள். R.C, CSI மற்றும் இந்து நாடார், படித்த படிக்காத VIP பட்டதாரிகள், விதவைகள், ஜாதகங்கள் ஏராளமாக உள்ளன. இது அனைத்து நாடார் சமூகத்துக்கு மட்டும். ஆலோசகர் P.R.ராஜகோபல் நாடார், சேவைக் கட்டணம் நேரில்.

## ஸ்ரீ முருகன் திருமண தகவல் நிலையம்

25/1, புதிய எண்:16, கிரி தெரு, மேற்கு மாம்பலம், சென்னை-600 033. செல்:9841239324.

## தோல்வியை ருசியுங்கள்! வெற்றியை ரசியுங்கள்!! Aachi

## தொழில் மேதை.ஏ.டி.பத்மசிங் ஐசக் வெற்றிப் படிகள்

### எளிமையும் வலிமை தரும்!

வாழ்க்கையில் மிக எளிமையாக இருங்கள் என்று காஞ்சி மகாப் பெரியவர் சொல்லியிருக்கிறார். ஆடம்பரமான வாழ்க்கை, ஆடம்பரமான உணவு, ஆடம்பரமான உடைகள் இவையெல்லாம் ஒரு கட்டத்தில் அத்தியாவசியமாகும் பொழுது மனிதனின் நிதி நிலை நெருக்கடியாகிறது. எளிமையாக இருக்கும் மனிதன் இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழத் தன்னைப் பழக்கிக் கொள்வான்.

தன்னைப் போல் பிறரையும் மதிக்கும் எண்ணம் இருந்தால், மற்றவர்களின் சிரமங்களை, கஷ்டங்களை உணர்ந்து செயல்பட்டால் சமுதாயத்தில் அந்த மனிதனின் மதிப்பு உயரும். மனதில் எழும்புகிற பலதரப்பட்ட ஆசைகளுக்கு அடிமையானால் வீண் செலவு. நிறைய வருமானம் இருந்தால் முடியும். இல்லாத போது கஷ்டப்பட வேண்டும். எதற்காக இப்படி ஒரு நிலை, மனதைக் கட்டுப்படுத்தி எளிமையாக வாழ்ந்தால், இருந்தாலும் இல்லாவிட்டாலும் கஷ்டம் வராது. விலைவாசி ஏற்றத்தைப்பற்றிக் கூடக் கவலைப்படாமல் வாழலாம் என்று காஞ்சி மகாப் பெரியவர் தமது ஆன்மிக அருளுரையில் கூறியுள்ளார்.

காஞ்சி மகான் கூறியதைப் போல் நடைமுறைப்படுத்தி எளிமைக்கு முக்கியத்துவம் கொடுத்தவர் நமது மகாத்மா காந்தி. ஆசிரம வாழ்க்கையில் தொண்டர்களை எளிமையாக வாழ வழிநடத்தினார். வாழ்க்கையில் மற்றவர் ஆடம்பரமாக வாழ்வதை அண்ணாந்து பார்த்து ஏக்கப்பெருமூச்சு விடுவதை விடக் கவிஞர் கண்ணதாசனின் பாடலில் குறிப்பிட்டது போல

"உனக்கும் கீழே
உள்ளவர் கோடி
நினைத்துப் பார்த்து
நிம்மதி நாடு" - என்று அற்புதமாக எழுதியுள்ளார்.

இப்படித்தான் 1951ஆம் ஆண்டு தெலுங்கானாப் பகுதியில் விவசாயத் தொழிலாளர்களுக்கும், நிலச்சுவான்தார்கள் மற்றும் பண்ணையார்களுக்கும் இடையே பயங்கரமான கலவரம் நடந்து கொண்டிருந்தது. உழுபவனுக்கே நிலங்கள் சொந்தம் என்பதுதான் தொழிலாளர்கள் போராட்டம். ஏழை விவசாயத் தொழிலாளிகள் பெரியளவில் பாதிக்கப்பட்டனர். அப்போது வினோபாஜி அவர்கள் தெலுங்கானாப் பகுதியில் நடைப்பயணம் மேற்கொண்டார். சமுதாய நல்லிணக்கத்திற்காக அவர் இந்த நடைபயணம் செய்தார். தெலுங்கானாக் கலவரத்திற்கு முக்கியக் காரணமே விவசாயத் தொழிலாளர்களுக்கு நிலம் கிடைக்காததுதான். போச்சம்பள்ளி என்ற கிராமத்தில் வினோபாஜி தங்கி இருந்தபோது பிரார்த்தனைக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டார். அப்பொழுது சில விவசாயத் தொழிலாளர்கள் மேடையிலிருந்த வினோபாஜியிடம் வந்து "நாங்கள் விவசாயத் தொழிலை நம்பி வாழ்பவர்கள். கலவரம் காரணமாக பண்ணைகளில் கூலி வேலை பார்க்க முடியவில்லை. உழைத்துப் பிழைக்கத் தங்களுக்குச் சொந்தமாக சிறிதளவு நிலம் கூட இல்லை என்று கூறி வருத்தப்பட்டார்கள்.



வினோபாஜி அவர்கள் உடனே கூட்டத்தில் இருந்த மக்களைப் பார்த்து "இந்த ஏழை விவசாயத் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் இப்படி கேள்விக்குறியாகிவிட்டதே? உங்களில் யாராவது இவர்களுக்கு வழி சொல்லக்கூடியவர்கள் இருக்கிறீர்களா?" என்று கேட்டார்.

உடனே ஒரு நில உரிமையாளர் எழுந்து நின்று, "எனக்குச் சொந்தமான ஏராளமான நிலங்கள் இருக்கின்றன. அதில் 100 ஏக்கர் நிலத்தை உடனடியாகத் தானமாக வழங்கத் தயார்" என்று சொன்னார். வினோபாஜிக்கு மிகுந்த சந்தோஷமாகிவிட்டது. உடனடியாக அவரிடமிருந்து நிலங்களைப் பிரித்துத் தந்தார்.

வினோபாஜியின் இந்த திடீர் யோசனை பெரிய அளவில் கைகொடுத்தது. விவசாயத் தொழிலாளர்கள் தங்களுக்கு வாழ்வாதாரம் கிடைத்த மகிழ்ச்சியில் திளைப்பதைப் பார்த்தார் வினோபாஜி அன்று அவர் மனதில் உதித்த திட்டம் தான். "பூமிதான இயக்கம்" அது உருவாகி நாடெங்கும் பரவியது. இருப்பவரிடம் இருந்து வாங்கி இல்லாத மக்களுக்கு வழங்கும் இந்த பூமிதானத் திட்டம், இந்தியா முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. வினோபாஜியின் திட்டம் வெற்றி பெற்றது. எனவே வாழ்வது என்பது முக்கியம். அதில் அத்தியாவசியமா? ஆடம்பரமா? என்பதைச் செயல்படுத்துவதில் சிறப்பான வாழ்க்கை அமைகிறது. (தொடரும்)



நாடார் பேரவையின் மாநில தலைவர் திரு.எர்ணாவூர் ஏ.நாராயணன் Ex.M.L.A அவர்களை மாநில துணைதலைவர் திரு.எம்.முருகேசன் அவர்கள் தலைமையில் தென்சென்னை மாவட்ட தலைவர் திரு.ஆர்.சிவசாந்தானம், மாவட்ட செயலாளர் திரு.ஏ.தேவேந்திரன், மாவட்ட ஆலோசகர் திரு.எம்.அந்தோணிஜவஹர், மாவட்ட கொள்கை பரப்பு செயலாளர் திரு.எஸ்.ரஞ்சித், மாவட்ட துணைசெயலாளர் திரு.எஸ்.ஆதிலிங்கம் ஆகியோர்கள் சந்தித்து தென் சென்னை மாவட்டத்தின் வளர்ச்சிகள் குறித்து ஆலோசனை செய்தனர்.




உங்கள் தொழிலை ஆன்லைன் மூலம் விளம்பரப்படுத்த/ சந்தைப்படுத்த வேண்டுமா?

- Website Designing & Development
- Social Media Marketing (Facebook, Instagram, Twitter, Linkedin)
- Youtube Channel (Video Creation & Marketing)
- Online Advertising (Google & OTT Apps)
- SEO
- Personal Branding

Call/Whatsapp
+91 8248 325 234



எப்போதும் வென்றான் ஸ்ரீ சோலையப்ப சுவாமி துணை

## அடையார் ஆனந்த விநாயகர் காய்கனி & பழங்கள் அங்காடி

(எங்களிடம் தரமான காய்கனி அனைத்தும் கிடைக்கும்)

## அடையார் முருகன் டிராவல்ஸ்

நெ. 69/14, 2வது குறுக்கு தெரு, கஸ்தூரிபாய் நகர், அடையார்,
சென்னை-20 செல்: 9840038140, போன்: 24416633, 42116663,



உரிமையாளர்:
த.பரமசிவன்

24 மணி நேர சேவை

---



உரிமை:T.DURAI, T.KUMAR. Cell:9444316813

## பேபி. புரோட்டீன்ஸ்

**WHOLESALE & RETAIL**

**2/37, 4th Lane, 1st Street Main Road, Shasthri Nagar, Adyar, Chennai-20. Ph:24465921. FREE HOME DELIVERY.**

---



Prop.S.Balakrishnan

**(FOR HIRE CENTRING SHEET, COLUMN BOX, SPAN, PROPS ETC.,)**

## SELVAM TRADERS

**New No : 7, Old No : 6, Medavakkam Main Road, Madippakkam, Chennai- 600 091**
**Ph: 9841193884, 044-22242096**



---



R.S.SANTHANAM

**Sri Brammasakthi Amman Thunai Sri Sudalaimadaswami Thunai**

**R.S.SANTHANAM**

## ரேவதி ஹார்டுவேர்ஸ்

Dealers in: Cement, Steel Quality Bricks, Sand, Blue Metal and Building Material Suppliers.

Stockist : Coramandel, ultra Tech, Zuari / Priya Cement

38/24-A, Poonamallee Road, Ekkattuthangal, Chennai-32. Ph:22252948, 22250015 Cell: 9840042948.

---



## SVS நாடார் திருமண தகவல் நிலையம்

(அரசு அங்கீகாரம் பெற்றது.பதிவுஎண் 1004/2013)

No.105, நல்ல தம்பி சாலை அண்ணாநகர், பம்மல், சென்னை-75.

எங்களிடம் இந்து சி.எஸ்.ஐ, ஆர்.சி நாடார் ஆண்/பெண் வரன்கள் (டாக்டர், இன்ஜினியர், வியாபாரிகள் மற்றும் உள் நாடு, வெளிநாட்டில் பணிபுரிபவர்களின்) விவரங்கள் நிறைய உள்ளன. உங்கள் மகன், மகள் திருமணத்திற்கு

**தொடர்புகொள்ளவும்.ஆலோசகர்:D.சுந்தர்சிங் நாடார்B.A அரசு இணைச் செயலாளர் (ஓய்வு) செல்:9840093000, 9445093000 9698793000, 8248707424**

**E.mail:sundarsinghnmb@gmail.com / website: www.svsnadarmatrimony.com**




# ஆர்.சித்தர்ராஜ் நாடார்
## குட்வில் ரியல் எஸ்டேட்
136, ஆநீகாடு ரோடு, வளசரவாக்கம்,
சென்னை-87. செல்:9444083769



T.Bernet Johnson M.E.,MBA., Managing Director. 72009 06699 / 90032 86677
7200506699.



# JEHOVAH
## GROUP OF COMPANIES

- Lab Ezuipments Manufacturing
- Industrial Lunricant Distributor
- Automotive Lubricant Distributor
- Industrial Equipments & Spares

E-jehovahjirehengineering@gmail.com / W: www.jehovahengg.com
No:60. 4th Main Road, L&T Colony, CRR Puram, Manapakkam, Chennai-125



C.மதியழகன்
செல்:9789095625.

வாழ்க வளமுடன்

# ஸ்ரீ கணேஷ் பவன்

SGB



எண்:6, முத்துலிங்க ரெட்டி தெரு, (எம்.ஆர்.தியேட்டர் பில்டிங்) மேற்கு தாம்பரம், சென்னை-45. போன்:M.சுரேஷ். செல்:9840945243.

எண்:1, வள்ளலார். தெரு, சேலையூர், கேம்ப்ரோடு, சென்னை-73.




SUGAM HOSPITALS
Symbol of Health
THIRUVOTTIYUR & CHROMPET
MULTI SPECIALITY HOSPITAL
* WORLD CLASS INTENSIVE CARE UNIT
* 24 HOURS TRAUMA AND EMERGENCY CARE
* HITECH OPERATION THEATRES
THIRUVOTTIYUR 40 50 60 70
#349, T.H.Road, Thiruvottiyur, Chennai - 19.
CHROMPET 85 85 85 85 50
#1/7A, G.S.T. Road, Chrompet, Chennai - 44
Dr.D.B.D.Sathiakumar M.D., Dr.Sheila Sathiakumar M.B.B.S., D.H.M
OUR GROUP DIAGNOSTIC CENTERS
HIBEAM SCANS TOTAL IMAGING
ROYAPURAM 25 95 17 57 PONNERI 27 97 34 44




கண்ணீர் அஞ்சலி. ஈகிள்.பிரதாப்சிங். 20.11.1931-18.1.2024

**-திருமதி.விஜிசௌந்தர்யா. வடக்கன்குளம்.**

வடவையில் பிறந்து, வானளாவிய புகழ் பெற்ற வடவை மண்ணின் மைந்தர், டைரிகள் உலகில் பேரரசன், நமது கிராமத்து இளைஞர்களின் குடும்பங்களில் விளக்கேற்றிய விடிவெள்ளி, குறிப்பாக நமது பள்ளிகளுக்கும் ஆலயத்திற்கும் வாரி வழங்கிய வள்ளல் அவர் மறைவுக்கு நாம் அஞ்சலியை காணிக்கையாக்குவோம்!

1954ல் ஈகிள் பிரஸ்-ஐ ஆரம்பித்து புகழ்பெற்ற ஈகிள் டைரியை வெளியிட்டார், ஆசிய கண்டத்திலேயே மிகப்பெரிய அச்சகத்தை நடத்தி வந்தார், கழுகு டைரி, வங்கிக் காசோலைகள் அவரது அச்சகத்தில் தயார் செய்யப்பட்டுள்ளன. பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர், கலைஞர் உள்ளிட்ட தமிழ் ஆளுமைகளின் நூல்களை வெளியிட்டு, பூம்புகார் பதிப்பகத்தை தமிழ் கருவூலமாக நடத்திவந்தவர் பிரதாப் சிங், அவர்கள் வானுக்கு சென்றதை, நாம் கண்ணீருடன் விடை கொடுப்போம். -திருமதி.விஜிசௌந்தர்யா. வடக்கன்குளம்.

**திரு.பாரி வடக்கன்குளம்-.**தமிழக முன்னாள் முதல்வர் கருணாநிதி அவர்களுக்கு நெருக்கமானவர் மற்றும் அவரை எந்நேரத்திலும் சந்திக்கும் அளவுக்கு செல்வாக்கு மிக்கவராக திகழ்ந்தவர், கலைஞரின் படைப்புகளை அவரது தாயாரின் பெயரிலான அஞ்சுகம் பதிப்பகம் என்ற பெயரில் தனது நிறுவனத்தின் சார்பாக தொடர்ந்து வெளியிட்டு வந்தவர், உலக நாடுகளின் முக்கிய கோப்புகளான விசா போன்ற அரசு ஆவணங்களை அச்சிடும் அளவிற்கு நம்பிக்கைக்குரிய சர்வதேச அங்கீகாரம் பெற்ற நிறுவனமாக தனது நிறுவனத்தை உயர்த்தி காட்டியவர். அன்னாரின் மறைவிற்கு ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்துக் கொள்கிறோம் இவரைப் போன்ற சர்வதேச அளவிலான சாதனையாளர்களை வடவைத்தாய் வரும் காலங்களிலும் ஈன்றெடுப்பாள் என்ற நம்பிக்கையோடு. - திரு.பாரி வடக்கன்குளம்.

# என் தந்தை திரு.எம்.ஜே.ஈகிள் பிரதாப் சிங் அவர்கள்.

Sheila Sathiakumar, Director, Sugam Hospitals & HIBAM Scans Chennai.



என்னுடைய தந்தை திரு. M.J.Prathap Singh 1931 ஆம் ஆண்டு நவம்பர் 20ஆம் தேதி திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள வடக்கன்குளம் என்னும் ஊரில் திரு.மரியஅந்தோணி நாடார் அவர்களுக்கும், திருமதி.ஏசுமரியாள் அம்மையாருக்கும், 2வது பிறப்பாக பிறந்தார்.

அவர் வடக்கன்குளத்தில் பத்தாம் வகுப்பு வரை படித்துவிட்டு அங்கு ஓரிரு ஆண்டுகள் அவர் படித்த சென்.தெரசாள் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வந்தார்.

பின்பு தொழில் ஆரம்பித்து, வளர வேண்டும் என்ற பெரிய நோக்கோடு சென்னை வந்தார். இங்கு ஓரிரு ஆண்டுகள் ஒரு அச்சகத்தில் வேலை பார்த்தார். பின்பு. அதன் தொழில் நுட்பத்தை கற்றுக் கொண்டு, சொந்தமாக ஈகிள் பிரஸ் ஐ 1954ஆண்டு ஆரம்பித்தார்.

1959ஆம் ஆண்டு திருமதி.பாப்பி அவர்களை மணமுடித்தார். என் உடன் பிறந்தவர்கள் அண்ணன் ராஜா சுந்தர் சிங் மற்றும் தம்பி சாம்பிரசாத் உள்ளார்கள்.

சொந்தமாக ஒரு Treadle Printing Machine வாங்கி, முதலில் ஹோட்டல்களுக்கு இரசீது புத்தகம் அச்சடித்து அடுத்த நாள் போய் டெலிவரி கொடுப்பார். இவ்வாறு ஒரு நாளைக்கு குறைந்தது 16மணி நேரம் வேலை செய்தார். அவருடைய அயராத உழைப்பினாலும், கடவுளுடைய அனுகிரகத்தாலும் வாழ்க்கையில் வெற்றியை பார்த்தார்.

நாங்கள் சிறுவர்களாக இருக்கும் போது எங்களுக்கு உழைப்பின் நேர்மையையும், அதன் முக்கியத்துவத்தையும் எங்களுக்கு அடிக்கடி போதிப்பார்.

என் தந்தை என்னிடம் முதன்முதலில் பெரிய ஆர்டர் கிடைத்ததை, அடிக்கடி கூறுவார். பெரிய ஆர்டருக்காக அப்பாவும், இன்னொரு Printer ம் அந்த வேலைக்கு quote கொடுக்க சென்றிருக்கிறார்கள். அந்த பிரிண்டர் பிரபலமிக்கவர், ஆனால் என்னுடைய தகப்பனாருக்கு இது முதல் பெரிய ஆர்டர் அந்த Printer quote ஐ அழகாக டைப் செய்து கொடுத்தார். ஆனால் அப்பா quote உடன் ஒரு Sample ஐ தயார் செய்து, அழகாக கொடுத்திருக்கிறார். இந்த பெரிய வேலை என் தந்தைக்கு கிடைத்தது, அவர் எப்பொழுதும் கூறுவார், நம்மிடம் யாராவது வேலை மற்றும் பொறுப்பு கொடுத்தால் அவருக்கு நம்மேல் நம்பிக்கையும், நல்லெண்ணமும் வரவேண்டும். இதை பிள்ளைகளான எங்களுக்கு அடிக்கடி கூறுவார்.

என் தகப்பனாரிடம் நாங்கள் பார்த்து வியந்தது. அவருடைய ஒழுக்கம். அவருடைய 88 வயது வரைக்கும், அதிகாலையில் எழுந்து முதல் ஆளாக வீட்டில் இருந்து காலை 8.30க்கு கிளம்பிவிடுவார். அவருக்கு எப்போதும். Forward Planning உண்டு அதை இப்பொழுதும் எழுதி வைப்பார். அவருடைய இந்த பழக்கம் தான் அவர் முதன்முதலில் டைரி தயாரிக்க ஒரு அடிப்படையாக அமைந்தது. இந்த டைரி பிரிண்டில் தான் என் தந்தைக்கு ஒரு பெரிய பெயரையும் செல்வாக்கையும் பெற்று தந்தது. இந்த வருடம் ஜனவரி 1ஆம் தேதி கூட எங்கள் அனைவருக்கும் அவர் கைப்பட டைரி கொடுத்தார்.

என் தந்தைக்கு, தமிழ் மொழி மீது இருந்த பற்றுதலால் பூம்புகார் பதிப்பகம் என்ற பதிப்பகத்தையும் துவங்கினார்.. அதில் அறிஞர் அண்ணா, காமராஜர், பெரியார், மு.கருணாநிதி மற்றும் ஸ்டாலின் அவர்களுடைய பதிப்புகளையும், அச்சிட்டு வெளியிட்டார் ஏறக்குறைய 1400 கவிதை மற்றும் கட்டுரைகளை அச்சிட்டு வெளியிட்டு உள்ளார். என் அப்பாவின் மறைவுக்கு, திரு.மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தி அனுப்பினது மட்டுமல்லாமல் என் அண்ணனிடம் பேசியும் உள்ளார்.

என் தந்தைக்கு திரு.எம்.ஜி.ஆர் மற்றும் திரு.மு.கருணாநிதி அவர்கள் நல்ல பழக்கம். திரு.எம்.ஜி.ஆர்.முதல் மந்திரியாய் இருந்தபோது புனித ஜார்ஜ் கத்தீடிரல், இருக்கும் சாலைக்கு கத்தீட்ரல் ரோடு என்ற பெயரை அமைத்து கொடுத்தார்.

என் தந்தைக்கு ஊழியர்களின் மேல் அளவுகடந்த கரிசனையும், அக்கறையும் உண்டு ஈகிள் பிரஸ் ல் ஊழியர்கள் தங்கியிருந்த விடுதி ஒன்று உண்டு மதியம் நேரம் சரியாக 1மணியளவில் நாங்கள் சிறுபிள்ளைகளாக இருந்தபோது எங்களையும் அழைத்துக் கொண்டு அங்கு சென்று, ஒன்றாக அமர்ந்து, உணவு அருந்துவோம். இது அவருடைய தன்மையை காண்பிக்கிறது.

மற்றும் ஊழியர்களின், வீட்டு விஷேசங்களுக்கு என் தயாருடன் சென்று வாழ்த்திவருவார். எந்த ஒரு விஷயமாக இருந்தாலும் கண்டிப்பாக இருவரும் சென்று, அன்பாக பழகுவார்கள்.

எப்போதும் பல புத்தகங்களை வாசித்து கொண்டிருப்பார். யாருக்கும் ஏதேனும். கஷ்டம் இருந்தால், கலந்து ஆலோசனை செய்து அதற்கு உதவிகளையும் செய்வார். இது அவருடைய தனி சிறப்பு.

எவ்வளவு வேலை பளு இருந்தாலும் அதை வீட்டிற்கு கொண்டு வரமாட்டார். வீட்டில் எங்களுடன் அன்பாகவும் பாசமாகவும் இருப்பார். எங்களுக்கு தேவையானதை, நாங்கள் கேட்காமலே கொடுப்பார். பண்டிகை காலங்களில் என் தயாருக்கும் நிறைய உதவிகளை செய்வார்.

நான் மருத்துவ கல்லூரியில் படிக்கின்ற காலத்தில், படிப்பு அதிகமாக உள்ளதை நினைத்து வருந்துவார். இரவு நேரங்களில் நான் கண்விழித்து படிக்கின்ற காலத்தில் என்னுடன் உட்கார்ந்து இருப்பார். எனக்கு இரவு நேரங்களில் கூடவே இருந்து காபி, டீ என்று போட்டு கொடுப்பார். இவ்வாறு ஒவ்வொரு காலத்தில் எனக்கு துணையாக இருந்திருக்கிறார்.

நாங்கள் சிறுவர்களாக இருந்தபோது எங்களை அச்சகத்திற்கு கூட்டி செல்லுவார். ஒவ்வொரு வேலை முறையையும் சொல்லி கொடுப்பார். அது மட்டுமல்லாமல் டிசம்பர் விடுமுறையில் எங்களை கூட்டி சென்று, டைரிகளுக்கு கவர் போடும் வேலை காண்பித்து போட சொல்லுவார். இதை பின்னோக்கி யோசிக்கும் போது நாங்கள் கடந்து வந்த பாதை எங்கள் கண்முன்னால் நிற்கிறது. கடின உழைப்பு, நாம் செய்யும் வேலைக்கு கொடுக்கும் தன்னம்பிக்கை முக்கியம் என்பதை உணர்த்துகிறது. எங்கள் சந்ததியர்களுக்கும் அதை மறக்கக் கூடாது என்பதற்காக அவர் முதன் முதல் வாங்கின, Treadle printing Machine இன்னும் ஈகிள் பிரஸ்சில் உள்ளது.

எங்களை கண்டிப்பாக வருடத்திற்கு இரண்டு முறை விடுமுறை நாட்களில் வெளியே கூப்பிட்டு செல்வார். வருடம் ஒருமுறை வடக்கன்குளம் சென்று பிறந்த சகோதர, சகோதரிகளிடம் தங்கி விட்டு வருவோம்.

என் தயாருடன் சேர்ந்து ஆலயம் விரிவாக்குதல் மற்றும் IMS, NMS, SCRIPTURE UNION, FMPB மற்றும் VISHVAWANI ஊழியங்களுக்கு நிறைய உதவி செய்வார். பள்ளிகளுக்கும் நிறைய உதவி நிதி கொடுத்து உதவுவார்.

இல்லை என்று யார் வந்தாலும் என் பெற்றோர், அவர்களால் ஆன உதவியை செய்யாமல் அவர்களை வெறுமையாக திரும்ப அனுப்ப மாட்டார்கள்.

அவர்கள் நிச்சயமாக கர்த்தரின் பாதத்தில் நித்திய இளைப்பாறுதல் பெற்று வருகிறார்கள். அவர்கள் எங்களுக்கு கொடுத்த எல்லா நன்மைகளுக்கும், பெரிய வாழ்க்கைக்கும் கடவுளுக்கும் எங்கள் பெற்றோருக்கும் நன்றி செலுத்துகிறோம்.

# இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி

## திருமதி உஷா பன்னீர்தாஸ்

(D/o. Late **V G Panneerdas**)



அன்பினால் அனைவரையும் அரவணைத்து!
அருள் உள்ளத்தோடு பசுமையை நேசித்து!
இன்முகத்தோடு இறைவனை என்றும் வணங்கிய
இறவாப்புகழ் பெற்ற **உஷா பன்னீர்தாஸ்**
இதயங்கள் மறவாது என்றும் உம்மையே!

**வி ஜி பி குடும்பத்தினர்கள்**

# நாடார் திருமணச் சடங்குகள்

--எஸ்.ஏ.இராம சந்திரடோகோ....

**மாங்கல்ய தாரனம் எனும் திருப்பூட்டுதல்**

திருமாங்கல்யத்துக்கு தாலி அல்லது திரு என்றும் பெயர். முற்காலங்களில் நாம் முன்னர் தெரிவித்தபடி தாலியை மஞ்சள் நூலில் கட்டி பின்னர் ஒரு குறித்த நாளில் தங்கச்சங்கிலி அல்லது தங்கக்கொடியில் தாலியை இணைத்து வந்தார்கள். ஆனால் கொடி செய்யும் பொறுப்பு நாளாவட்டத்தில் மண மகனுடையதாக இருப்பதால் நூலில் கோர்த்துக் கட்டுவது பொருளாதார முறையில் கௌரவமானதாகக் கொள்ளப் படவில்லை. எனவே பெண்ணை நிச்சயம் செய்யும் போதே திருமாங்கல்யமும் தாலிக்கொடியும் இத்தனை பவுன் எடையில் செய்து போட வேண்டுமென்று பேசி முடிக்கும் வழக்கம் வந்து விட்டது. இதனால் திருமணத்தின் போதே திருமாங்கல்யத்தை தங்கச் சங்கிலியில் இணைக்கும் வழக்கமும் தொடர்ந்தது எனலாம். இதனால் தாலிக்கு வரன் மூன்று முடிச்சுப் போடும் வழக்கம் மாறி திருமாங்கல்யச் சங்கிலியில் திருகாணிப் பொருத்தி அந்த திருகாணியை வரனது சகோதரி முடிக்கி வைக்கும் பணியைச் செய்து வருகிறாள்.

சமீப காலத்தில் சில இடங்களில் திருமாங்கல்யத்தை மாலை போடுவது போல் சூடும் வழக்கமும், சம்பிரதாயமும் அண்மையில் வந்திருக்கின்றது. வரன் திரிகரண சுத்தியாக ஒரு பெண்ணை ஏற்று அவளுக்கு தாலி கட்டுதலும், அப்பெண் அவ்வாறே திரிகரண சுத்தியாய் அதற்குக் கட்டுப்படுதலும்மாகிய மாண்புள்ள நோக்கத்திற்கு இம்முறை பொருத்த முள்ளதன்று. இச்செயல் மாலை போட்டு கழாறுவது போன்ற கருத்தைக் கொடுக்கும். இதனை ஏற்க முடியாதெனப் பெரியோர்கள் கூறுகிறார்கள்.

திருமாங்கல்யம் கட்டுவது இரண்டு வகைப்படும். ஒன்று கழுத்தில் நாடித்துடிப்புள்ள இடத்தில் திருமாங்கல்யம் பட்டுக் கொண்டிருக்கும்படியாகக் கட்டுவதாகும். மற்றொன்று பெண்ணின் இருதயத் துடிப்பின் மேல்படும்படி நீளமுள்ளதாக கட்டுவதாகும். இதில் நாடார்கள் பிந்திய முறையையே பின்பற்றுகிறார்கள். இதனால் திருமாங்கல்யம் பிறரது கண்களில் படாமல் இருக்கும். இவ்வாறு அரிச்சந்திரன் தன் மனைவியாகிய சந்திரமதிக்கு கட்டியிருந்தான் என்றும் அது அவன் கண்களுக்கு மட்டுமே தெரியக் கூடியதாய் இருந்ததென்றும் வர்ணிக்கப்படுகிறதை கவனிக்கத் தக்கது நிற்க.

கன்னிகாதானத்தின் பின் மணமகன் மணமகளை தனது பத்தினியாக ஏற்று மாங்கல்யம் சூடுவதாக சங்கற்பம் செய்கிறான். இதன் பின் அழகியதோர் தாம்பாளத்தில் வெற்றிலை, மஞ்சள், குங்குமம், சந்தனம், புஷ்பம் முதலிய மங்கலப் பொருட்களுக்கு மத்தியில் திருமாங்கல்யத்தை வந்திருப்போர் கண்களுக்கு தெரியும் படியாக எடுத்துக் காட்டி, மீண்டும் வைத்து பெரியோர்களும், சுமங்கலிப் பெண்டிரும், உற்றார் உறவினரும் பந்துமித்திரரும் நல்லாசி பகர்ந்து வாழ்த்து வழங்கிய பின்னர் புரோகிதர் திருமாங்கல்யத்தை மணமகன் கைகளில் கொடுக்கிறார். உடனே உமா மகேஸ்வர மந்திரத்தை ஓதுகிறார்.

கெட்டி மேளம் என்று பெரியோர்கள் கூற மங்கல வாத்தியங்கள் ஓம் ஓம் என்று ஒலிக்கின்றன. எல்லா தோஷங்களும் நீங்கி குறித்த நல்ல முகூர்த்தம் வந்ததென புரோகிதர் அறிவிக்கிறார். பெண்கள் குரவை ஒலிக்கின்றார்கள்.

கன்னியரும் காளையரும் காணவந்த பெரியோரும் புஷ்பமாரி பொழிகிறார்கள். இரட்டைச் சங்கநாதம் இடைவிடாது ஒலிக்கின்றது. மகிழ்ச்சி ததும்பி மங்கலம் விளங்கும் இந்த சுபவேளையில் வரன் பெண்ணின் நல்லாளுக்கு தனது மாங்கல்யத்தை அவளுடைய கழுத்தில் கட்டுகிறான். அத்தருணத்திற்காக காத்திருந்த அவனது சகோதரி அப்பணியை பூர்த்தி செய்கிறாள். உடன் குருக்கள் திருகாணி மீது விபூதி சாத்துகிறார். எனவே தெய்வீக அந்தஸ்து அந்த மூன்று முடிச்சுக்கு சாசுவதமாகிறது. இவ்வாறு நடைபெறும் சடங்குகளின் ஒவ்வொரு சிறுபகுதியையும் இடைவிடாது கட்டியம் கூறிவரும் குடிமகன் இப்போது மீண்டும் "ஐயா சொக்காரர் அனந்தரம் செய்ய வாருங்கள்-வாருங்கள்" என்று கட்டியம் கூறி அழைக்கிறான். உடன் வரனின் தந்தை வழித்தோன்றல்களான தாயாதிகள் எழுந்து ஒவ்வொருவராக வந்து அம்மங்கை நல்லாள் அப்போதே தம் குடும்பத்தலைவளாகி விட்டதாக ஏற்று இம்முறை வரனுக்கும் மணப்பெண்ணுக்கும் சேர்த்து அரசிலை கொண்டு மும்முறை ஆரத்திச் சுற்றுகிறார்கள்.

இதற்குள்ளாக "மாவிளக்கு" ஏற்றி தாம்பாளத்தில் வைத்து வரனின் தம்பி கையில் அல்லது மணப்பெண்ணின் தம்பி கையில் கொடுக்கப்படுகிறது.

**மாவிளக்கம் என்னும் மா விளக்கு:**

மாவிளக்கைப் பற்றி இங்கு விவரிப்பது மிகவும் அவசியம். உலர்ந்தப் புதுத்துணியில் அரிசி மாவை கிளிக்கட்டுகிறார்கள். பின்னர் கிளிகட்டிய துணியின் நுனியை இரண்டு திரிகளாகச் சேர்த்துப் பின்னி இத்திரியை நெய்யில் நனைத்து நுனியில் விளக்கேற்றப்படுகிறது

மா என்பது சிறந்த பெரிய ஒப்பற்ற என்ற பொருளைக் கொடுக்கும். அதனைப் போன்று சொல்லும் செயலும் ஒத்துவருவதற்காக அரிசிமாவில் கிளிக்கட்டுகிறார்கள். அதன் மேலுள்ள இரண்டு திரிகளும் பின்னிப்படுவதால் இருவரும் மனமிணைந்து "கண்ணிரண்டும் ஒன்றாக காண்பது போலும்" என்ற தத்துவ பொருள் போல் மணமக்கள் இருவராயினும் அவர்கள் வேற்றுமையற்ற ஒருவரே என்பதைக் காட்டுவதாகும். திரியின் நுனியில் விளக்கு ஏற்றுவதால் இரண்டு திரிகளும் ஒரே சுடராய் ஒளி விடுவதைக் குறிக்கும். தம்பதிகள் இவ்வாறே தமது குடும்ப வாழ்கையை மாவிளக்காய் நடத்திக் கொள்ள வேண்டும். நடத்திக் கொள்வார்கள் என்ற உறுதியை எடுத்துக் காட்டுவதற்கும் மாவிளக்கு ஏற்றப்படுகிறது. தம்பதிகள் திருப்பூட்டியதும் ஒருவருக்கொருவர் மாலை மாற்றிக் கொள்வார்கள் உடனே பக்கத்தில் நிற்கும் புரோகிதர் அல்லது குடிமகன் மங்கலப்பாட்டு இசைப்பார். இதைக் கல்யாணப்பாட்டு என்றழைப்பதும் உண்டு. இது சில ஊர்களில் விரிந்தும் திரிந்தும் காணப்படும். கீழேக் காண்பது அக்கல்யாணப்பாட்டின் பிற்பகுதியாகும். -

தொடரும்........

வாழ்க வளர்க !

உ

வீடு, மனை வாங்கவும், விற்பனை செய்யவும் அனுகலாம் வாங்க !!

ஸ்ரீ அருள் ஏஜென்ஸீஸ்

ரியல் எஸ்டேட்


M.L. சுவாமி

No. 59, 1st Floor, Arcot Road, Valasai to Porur, Chennai - 116.

Cell : 98410 74090 [94443 42707] RE - Invesments - Joint Ventures

# உழைப்பின் சரித்திரம் எம்.ஜே.ஈகிள் பிரதாப்சிங்



மனித ஜென்மம் என்பது கடவுளின் ஒரு அரிய நன்கொடை பிறப்பு என்று ஒன்று இருக்கும் போது இறப்பு என்பதும் குறிப்பிடப்பட்டு விட்டது. ஒரு மனிதன் பிறப்பில் ஏழ்மையும் இயலாமையும் எது வேண்டுமானாலும் இருக்கலாம், ஆனால் அவனது இறப்பில் ஒரு உன்னத சரித்திரம் இருக்கவேண்டும் இந்த உழைப்பின் சரித்திரம் என்ற எம்.ஜோசப் பிரதாப்சிங் அவர்களின் சரித்திரம் இதை வாசிப்பவர்களுக்கு ஒரு பிரமிப்பாகவும் நாமும் ஏன் உழைத்து முன்னேற கூடாது அல்லது முடியாது? என்ற முயற்சி எண்ணங்களும் தோன்றும் முக்கியமாக இளைஞர்களுக்கு இது ஒரு முன் உதாரணமாகவும் புது சக்தியாகவும் இருக்கும். நம்மால் இது முடியுமா? என்று சந்தேக வாழ்க்கை வாழும் இளைஞர்களுக்கு ஈகிள் பிரதாப் சிங் அவர்களுடைய விடா முயற்சியால் தன் வாழ்வில் உயர்ந்து உயர்ந்து இமய வளர்ச்சி கண்டார் ஆகவே தான் முயற்சியால் முன்னேற துடிக்கும் இளைஞர்கள் இந்த உழைப்பின் சரித்திரம் என்ற தொடரை படிக்கும் போது நாமும் ஏன் முன்னேற முடியாது என்ற எண்ணம் தோன்றி தனது வாழ் நாளை வீண் விவகாரங்களில் செலுத்தாது அவர்களுக்கு கொடுக்கப்பட்ட கடமையில் கண்ணும் கருத்துமாக இருந்து முன்னேற வேண்டும் என்ற எண்ணம் தோன்றும். ஆகவே இந்த சரித்திரம் இளைஞர்களுக்காகவே எழுதப்படுகிறது. தன் முயற்சியில் தோற்றவர்களும் இந்த சரித்திரத்தை பார்த்து தன் முயற்சியில் செய்த தவறுகளை திருத்தி முன்னேறலாம் தன் வாழ்க்கையை சீரோவில் ஆரம்பித்து உலகமே பிரம்மிக்கும் வண்ணம் ஹீரோவாக உயர்ந்த எம்.பிரதாப்சிங் அவர்களது சரித்திரம் இதை வாசிப்பவர்களுக்கு ஒரு உந்து சக்தியாக விளங்கும் இந்த சரித்திரம் ஒரு வாழ்க்கை பாடமாக இருக்கும் நீங்களும் வாசித்து உங்கள் வாழ்க்கையில் பல மாற்றங்களையும், முன்னேற்றங்களையும் காணுங்கள். (ஆசிரியர் நாடார் முரசு)

அது ஒரு முழு நிலா காலம் 20 நவம்பர் 1931 ஒரு ஆண் குழந்தை இந்த உலகத்தில் பிறந்தது என்ற அறிவிப்பு குரலோடு பிறந்தது. தமிழக தென்கோடி மாவட்டம் திருநெல்வேலியில் தென் பகுதியில் அமைந்துள்ள பணகுடி என்ற ஊர் சமீபம் காவல்கிணறு விளக்கு வழியில் ராதாபுரம் ரோட்டில் அமைந்துள்ளது வடக்கன்குளம் என்ற சிறப்பு மிக்க கிராமம் வடக்கன்குளம் அங்கு தான் இந்த ஆச்சரியமான குழந்தை பிறந்தது. அன்று இரவு முழுநிலா பௌர்ணமி இரவும் பகல் போல் நிலா பிரகாசித்துக் கொண்டிருந்து. இளம் பெண்களும் ஆண்களும் அந்த இரவை பகலாக நினைத்து தெருவில் கபடி ஒளித்து விளையாட்டு விளையாடி கொண்டிருந்தார்கள் இளம் பெண் கும்மியாட்டம் பூபறிக்க வருகிறோம் வருகிறோம் என்ற கிராம விளையாட்டுகளை விளையாடி கொண்டிருந்தார்கள். மாதம் மாதம் முழு நிலா தோன்றும் ஆனால் ஆச்சரியமாக பல ஆண்டுகளுக்கு ஒரு முறை மேகத்தில் பல மாற்றங்கள் ஏற்படும் சமயங்களில் மேகம் சிவந்த நிறத்தில் தோன்றும் சமயங்களில் நிலா மிகவும் பெரியதாக காணப்படும் இப்படி பல விந்தைகள் காட்டி தோன்றும் நிலா அன்று நிலாவை சுற்றி ஒரு பெரிய வட்டம் சுற்றியிருந்தது. அது நிலா தனக்காகவே கோட்டையை கட்டும் என்று கூறுவார்கள் அப்பேர்பட்ட முழுநிலா கோட்டை கட்டி தெரிந்த அந்நாளில் அந்த அற்புத குழந்தை பிறந்தது. வடக்கன்குளத்தில் பரிசுத்த பரலோக மாதா கோவில் மண அடித்தது. ஆம் அன்றை நிலா காலம் ஒரு பகலாகவே இருந்ததால் இளம் வாலிபர்கள் தனது விளையாட்டுகளை முடித்துக்கொண்டு காலை கோவில் திருப்பலிக்காக செல்ல ஆயத்தமானார்கள். அந்த அதிகாலை பக்தர்களில் முதன்மையாக வடவை சன்னதி தெருவில் தூய ஆடை அணிந்து சுறுசுறுப்பாக கோவில் நோக்கி சென்றார் அந்த கிராமணியார் ஆம் அவர் அந்த குழந்தையின் தந்தை கினா மூனா மரியந்தோணி நாடார் அவர் முகத்தில் ஒரு ஆண் மகனை பெற்ற ஒரு பெருமிதம் இருந்தது. அவர் பலவற்றில் மிகவும் எடுத்துக்காட்டானவர் அதிகாலை கோழி கூவும் முன் எழுந்து குளித்து சுத்தமான ஆடை அணிந்து தினம் கோவிலுக்கு சென்று பக்தியாக கோவிலுக்கு சென்று பக்தியோடு வாழ்ந்த ஒரு சிறந்த பக்திமான் அந்த பக்தியால் அவருக்கு நல்ல புலமை கிடைத்தது அவர் ஒரு சிறந்த அறிவாளி புலமைமிக்கவர் அதே சமயத்தில் பிடிவாதக்காரர் அவரோடு யாராவது வீண் விவாதங்களில் ஈடுபட்டால் இவர் தான் வெற்றி பெறுவார் அத்தனை திறமைசாலி அதுமட்டுமல்லாது அவரிடம் பல கொள்கைகள் இருந்தது. அந்த கொள்கையை விட்டு அவர் விலகியதே கிடையாது.




மரந்தலை மாடசாமி துணை

**செல்:9840685266, 9380879313.**

**MARS**



**மார்ஸ் திருமண தகவல் மையம்**

சென்னையில் 30 வருடமாக பெரும் தொழில் அதிபர்கள், டாக்டர்கள், இஞ்சினியர்கள், அனைவருக்கும் நிறைய திருமணங்கள் நடத்தி கொடுத்தவர் இந்து நாடார், கிறிஸ்துவ நாடார் சமுதாயத்தின் கைராசியான திருமண தகவல் மையம் அனைத்து மாவட்ட நாடார்கள் தொடர்புகொள்ளவும்.

**வேம்பார் கனகராஜ் நாடார்.**

**வீடு, மனை, தோட்டம் வாங்க விற்க அணுகவும்.**

நெ.25, நேதாஜி தெரு, அன்னை இந்திரா நகர், மூலச்சத்திரம், சென்னை-51,

# அந்தமான் தீவுகள் சுற்றுலா

**கப்பல் | விமானம் | படகு | சுற்றுலா**

பாஸ்போர்ட் தேவையில்லை
பள்ளிக்கூடத்தில் ஜாதி சான்றிதழ் தேவை இல்லை.




**சி.பாபு**
9884607657
8939888585.

அந்தமான் எக்ஸ்பிரஸ் டிராவல்ஸ் J.K.A.காம்ளக்ஸ், எண்:195/96, தம்புசெட்டி தெரு, காளிகாம்பாள் கோவில் அருகில், சென்னை-600 001.

Email:
andamanstours@gmail.com





S.ராஜையா நாடார்

## சக்தி டிப்போ & சக்தி ஹார்டுவேர்ஸ்

எங்களிடம் சிமெண்ட், மணல், ஜல்லி,செங்கல்,கட்டுமானத்திற்கு தேவையான அனைத்து பொருட்களும் கிடைக்கும்
168,புதியஎண்,123,எம்.எம்.காலனி, அண்ணாநகர், 3வது அவென்யு, (அமைந்தகரை காவல்நிலையம் அருகில்), அமைந்தகரை, சென்னை-29
போன்:9840036745, 9841085745, Ph:26214852, 26267101.



## D.J.P திருமண தகவல் நிலையம்



திருமண தகவல் பணியில் 25 ஆண்டுகள் இமய சாதனை படைத்து C.S.I. R.C இந்து நாடார்களுக்கும் பல கோடீஸ்வர குடும்பங்களை இணைத்த **திருமதி. புஷ்பாதேவராஜ்.**
அண்ணாநகர் மேற்கு, செல்: 9840697436, 9840736513.
E-Mail : jai_son93@yahoo.com



**உங்கள் இல்லத்தில் உடனே திருமணம் நடைபெற வேண்டுமா?**

Prop.K.A.Raman Nadar

## Sri.R.M.T.திருமண தகவல் மையம்



கைராசியான ஸ்தாபனம் மற்றும் இந்து, R.C, C.S.I. நாடார் வரன்கள் அமைத்து தரப்படும். MD, MBBS, M.E, M.SC, M.C.A மற்றும் IAS, IPS, VIP வரன்களுக்கு மில் தொழில் அதிபர் வரன்களுக்கு அணுகவும்.
106, ஆற்காடு ரோடு, வடபழனி, சென்னை-26.போன்:45588957, செல்:9380791999, 9841329471. E-mail:ramannadar2004@yahoo.co.in Web:www.srirmt.com



INVEST IN A DOUBLE RENT
READY TO MOVE IN HOMES!

RUBY
# Landmark

On Vandalur-Padappai Main Road
Mannivakkam

₹49 lacs Onwards

2 & 3 BHK
Luxury Apartments

1101 - 1518 sq.ft.



RUBY
ELITE
life style redefined

On Velachery Main Road, Santhoshapuram

READY TO MOVE IN

₹91 lacs Onwards

Luxury Forest-View Apartments

3 BHK 1330 - 1418 sq.ft.
Penthouse - 2231 sq. ft.

ruby | 3009 3009 | www.rubybuilders.in




RUBY REGENCY — New Agaram Road, Selaiyur

RUBY Gateway — Off - Mudichur Road, Tambaram

RUBY STAR CITY — 1km from Perungalathur Rly. Station

UNDER CONSTRUCTION



city connect — Rajeswari — Crest

Prices are all inclusive Prices

FOR UNBELIEVABLE OFFERS VISIT / CALL

ruby | 3009 3009

---

GP

# கோபால் பிளாஸ்டிக்



S.இராஜகோபால்

**Dealers in :** எல்லாவகையான பிளாஸ்டிக் மெட்டிரியல் கிடைக்கும்
9, அரங்கப்பன்தெரு, (ஸ்ரீனிவாஸ்தியேட்டர்அருகில்), மேற்கு மாம்பலம்,சென்னை-33

# RS பிளாஸ்டிக்

உரிமையாளர்:S.ராஜகோபால், S.ஜெயராஜ்

நெ.16, உப்பாலிஅம்மன்கோயில்தெரு,திருநீர்மலை,சென்னை-44.
Cell:9444037465, 9840446688 Ph: 24891192. 24748148.



S.ஜெயராஜ்

---

நல்லதே நினைப்போம்! நல்லதே செய்வோம்! நல்லதே நடக்கும்!

# நியூ நிதில் & கோ

தரமான கட்டில், பீரோ, மெத்தை, இதர பர்னிச்சர்கள் வாங்க சிறந்த இடம்..
போன்:044-25962323, 044-42165485







# NEW NITHIL & CO







**Whole Sale & Retail**
**Steel & Wood Furniture Show Room**
**No:1171, T.H.Road, Old Washermanpet, Chennai-600 021**

# தமிழக நாடார் மேட்ரிமொனி

சென்னை, தமிழகமெங்கும் மற்றும் வெளிநாடு வரன்கள்

SINCE 2007

தாங்களின் வீட்டிலுள்ள வரன்களுக்கு மணமகன், மணமகள் விபரங்கள், ஜாதகத்துடன் தாங்கள் வீட்டிலிருந்து எங்களின் வெப்சைட் மூலமாக நேரில் பார்க்கலாம். **வரன் பதிவு இலவசம்.**

Visit Our Website

**www.tamilaganadarmatrimony.com**

நம்ம தமிழகத்தின் சென்னை, நெல்லை, தூத்துக்குடி, குமரி, விருதுநகர் உட்பட அனைத்து மாவட்டம். இந்தியாவின் சென்னை, மும்பை, கர்நாடகா, ஆந்திரா மற்றும் அனைத்து மாநில நாடார்கள். USA, UK, Canada, Singapore, Malaysia, Australia, Germany, Dubai போன்ற வெளிநாடுகளிலுள்ள இந்து நாடார், கிறிஸ்தவ நாடார் (RC, CSI, Pentecost) BE, ME, M.Tech, MCA, MBA, IT, CA, Govt, VIP தொழில் அதிபர்கள் சிறிய, பெரிய வியாபாரிகள் முதல் மணம் / மறுமணம், 17 வருட அனுபவமுள்ள நாங்கள், எங்களிடம் ஏராளமான திருமணங்கள் நடைபெற்று வருகிறது.

## தமிழக டாக்டர்ஸ் மேட்ரிமொனி

MBBS, MD, MS, DGO, MDS, ORTHO, ANESTHESIA, SIDDHA, HOMEO, NURSE

**Open our Website : www.tamilagadoctorsmatrimony.com**

எங்களுக்கென்று தனி வெப்சைட் இருப்பதால் எங்களிடம் மிக சுலபமாக திருமணம் முடிகிறது. திருமணத்திற்காக காத்திருக்காதீர்கள். உங்கள் வரன்களுக்காக பேசும்

# நெல்லை T. ராஜன் நாடார்

கேம்ப்ரோடு ஜங்சன், கிழக்கு தாம்பரம், சென்னை - 600 073

**Cell : 73388 12126, 73977 76595**

E-mail : tamilagamatrimony2005@gmail.com

## 4.என் தந்தையின் தொலைநோக்குப் பார்வை

**விஜிபி ராஜாதாஸ்**

அருமைத் தந்தையார் அவர்கள் ஏழ்மையின் காரணமாக அதிகம் படிக்க முடியவில்லை. என்றாலும், அவருடைய கடினமான உழைப்பும் தன்னம்பிக்கையும், விடாமுயற்சியும், அனுபவ அறிவும், தொழில் துறையில் மிகப்பெரிய உச்சத்தை எட்ட முடிந்தது.

என் தந்தை அவர்கள் ஏதாவது புதியதாகச் செய்யவேண்டும் என்ற எண்ணத்துடன், எப்போதும் யோசித்துக்கொண்டே இருப்பார்கள். மேலும், பலமுறை அவர்கள் பழைய புத்தகக்கடைக்குச் சென்று ஆங்கிலப் புத்தகங்கள் குறிப்பாக வீடுகட்டும் முறைகளைக் கூறும் புத்தகங்கள் மற்றும் அந்தக்காலத்தில் மேலை நாடுகளில் புதுமாதிரியான தொழில்கள் நடைபெற்று வருவதை அறிந்துகொள்ள, அதுபோன்ற பல புத்தகங்களையும் வாங்கி வருவார்கள்.

இரவு உணவு அருந்திய பின்பு, அவர் வாங்கிய வந்த புத்தகங்களையெல்லாம் புரட்டிப்பார்த்துக் கொண்டிருப்பார் அவருக்கு ஆங்கிலத்தை விரைவில் புரிந்து கொள்ள முடியாது நிலையில், என்னையோ அல்லது மூத்த சகோதரர் விஜிபி ரவிதாஸ் அவர்களையோ அழைத்துப் படிக்கச் சொல்வர். எங்களுக்கு அதில் முழு ஈடுபாடு இல்லை என்றாலும், எங்கள் தந்தைக்காக புத்தகங்களைப்படித்துக் காட்டி, விளக்கிச் சொல்வோம்.

மேலும் அவர் அந்தப் புத்தகங்களைப் புரட்டிப் பார்த்துக் கொண்டே இருப்பார். திடீரென்று சில பக்கங்களை முழுவதுமாக கிழித்து எடுப்பார். எனக்கு அவர் செயல் என்னவென்று புரியாத நிலையில் பார்த்துக்கொண்டே இருப்பேன். அவர்கள் மறுநாள் அலுவலகத்திற்குச் செல்லும் போது, கிழித்து அந்தப் பக்கங்களையெல்லாம் நன்கு மடித்து, தன்னுடைய கால்சட்டைபைக்குள் வைத்து கொள்வார்.

இதுவே அவரது, தொழிற் தொடர்பான உதவிக்கரமாக இருக்கும். அதாவது, இன்றைய நாளில் நாம் செல்போன், லேப்டாப் எடுத்துச் செல்வதுபோல அவற்றை எடுத்துச்செல்வார். மேலும், அவர் தினமும் சேகரிக்கும் பத்திரிக்கைப் பக்கங்களை தன் கால்சட்டை பையில் வைத்துக் கொள்வார். அதனால், ஒரு கனமானப் பொருளை வைத்தது போல் காணப்படும்.

அவ்வாறு அவர் கிழித்த பக்கங்கங்களில் உள்ள செய்திகள் மூலமாக, அதாவது, கட்டிடம் பற்றியோ, புதிய தொழில்கள் பற்றியோ அல்லது வேறு ஏதாவது புதுமையான சிந்தனைகளைக் கொண்டு அவர் செய்வதற்கு முயற்சி எடுப்பார்கள். இவ்வாறு, அவர் எடுத்த முயற்சிகளின் வடிவமைப்புகள் தான், விஜிபி கட்டிடங்கள், விஜிபி தங்ககடற்கரை கட்டிடங்கள் மற்றும் தங்கும் விடுதிகள், பசுமை நிறைந்த தோட்டங்கள் ஆகும். இந்த தருணத்தில் நான் முக்கியமாகச் சொல்ல வேண்டியதொன்று இருக்கிறது.

அதாவது, 1985இல் விஜிபி விற்பனைக் கூடங்களின் விற்பனைத் துறையை நான் நிர்வகித்துக் கொண்டிருந்தேன். அப்போது, என் தந்தையார் கோப்பு ஒன்றை என்னிடம் கொடுத்து,

"அதைப் படித்துப் பார்த்து, அந்த தொழிலைச் செய்வதற்கு முயற்சி செய்" - என்று சொன்னார்கள். அந்தக் கோப்பை நான் வாங்கிக் கொண்டு, "அதை முழுவதுமாகப் படித்து, என் கருத்தைச் சொல்கிறேன்" என்று அவரிடம் கூறினேன். ஆனால், நான் அதைப்பற்றியே சிந்திக்காமல் அலட்சியமாக இருந்து விடுவேன்.

பின்பு, சில மாதங்கள் கழித்து, மீண்டும் என்னை என் தந்தையார் அழைத்து அந்தக் கோப்பைப்பற்றி விசாரிப்பார் பின் என்னுடைய முடிவைக் கேட்பார்.

இங்கே ஒரு உண்மையைச் சொல்கிறேன்! என் தந்தை அளித்த கோப்பை முழுவதுமாகப் படித்தாலும், தந்தையின் அறிவுரையின்படி அந்தத் தொழில் தொடங்குவதற்கும் அல்லது அந்தத் தொழில் மூலமாக வருமானம் கிடைக்குமா என்ற நம்பிக்கை எனக்கு சிறிதுமில்லை. என் தந்தை எப்படி இவ்வாறெல்லாம் சிந்திக்கின்றார் என்ற சிந்தனையே எனக்குள் சுற்றி சுற்றி வந்தது.

என்னுடைய மனதில் அவர் கூறிய, அந்தத் தொழில் நடைமுறைக்கு நிச்சயமாக நன்றாக இருக்காது என்று ஆணித்தரமாக நினைத்துக் கொண்டிருந்தேன். அப்படி என்ன தொழில்தான் செய்யச் சொன்னார்கள் என்ற கேள்வி, இதைப் படித்துக் கொண்டிருக்கும் உங்களுக்குள் எழும் என்பது நிச்சயமே.

என் தந்தையிடம் நேரடியாக, இந்தத் தொழிலைச் செய்ய விருப்பம் இல்லை என்று சொல்லாமல், "நான் நிர்வகித்துவரும் வீட்டு விற்பனைப் பொருள் வணிகத்திற்கே மேலும் நிதிவேண்டும். இந்நிலையில் புதிய தொழில் தொடங்குவது எவ்வகையில் சாத்தியமாகும் என்று சொன்னேன். மேலும், என் தந்தையாரிடம், "அதை பின்பு பார்த்துக் கொள்ளலாம் அந்த திட்டத்தை சற்று தள்ளிப் போடலாம்" என்று கூறினேன்.

என் தந்தை எனக்குச் சொன்ன அந்த தொழில் என்னவென்றால், நல்ல சுத்தமான, ஆரோக்கியமான குடிநீர் (மினரல் வாட்டர்) விற்பனையை செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். மேலும், அதற்குரிய நிலமும், நீர்வளம் நிறைந்த இடமும் பார்த்து, அந்த இடத்தில் இந்தத் தொழிலைச் செய்யலாம் என்று சொன்னார்கள்.

அது மட்டுமல்லாமல், "விஜிபி பன்னீர்தண்ணீர்" என்று பெயர் வைத்துக்கொள்ளலாம் என்று என் தந்தை சொன்னார்கள். என் உள்மனதில் அவருடைய பெயர் இன்னும் பிரபலமாக வரவேண்டும் என்று நினைக்கிறார்களோ என்று தவறாக நினைத்துக் கொண்டிருந்தேனே தவிர, என் தந்தையார் சொன்ன அந்தத் தொழிலைச் செய்ய எந்தவித முயற்சியும் எடுக்கவில்லை. ஆனால், அவரது தொலைநோக்குப் பார்வையில் உதித்த மிகப்பெரிய தொழில்வளம் மிக்க திட்டம், இன்று நாடு, நகரம், ஊர், தெருக்களில், என் தந்தையாரின் தொலைநோக்குப் பார்வையில் தோன்றியதுதான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

1985ஆம் ஆண்டு என் தந்தையார் சொன்னபடி நான் அந்தத் தண்ணீர் விற்பனையை ஆரம்பித்திருந்தால், தமிழ்நாடு மட்டுமல்ல, அகில இந்தியா அளவில் விற்பனையைப் பெருக்கி, "விஜிபி பன்னீர்த் தண்ணீர்" எல்லோருடைய கைகளிலும், வீடுகளிலும், ஏன் அவர்களுடைய இதயங்களிலும் பாய்ந்தோடிக் கொண்டிருக்கும்.

இதிலிருந்து, எவரும் சிந்திக்க முடியாத என் தந்தையின் தொலைநோக்குப் பார்வை எப்படி என்று அறிந்து கொள்ளவும் உணர்ந்து கொள்ளவும் முடியும் அல்லவா?




Prop.S.Vijayan, Cell: 98403 53031. (0)044/ 26623031.

SRI LAKSHMI ENTERPRISES

Scaffollding & Shed contractor / School, College, Church & Construction Company / All Type Shed Works

28/54, Cooks Road, P.B. Chennai, Chennai-12.

சேர்ந்து பயனடைவீர் ! வாய்ப்பை பயன்படுத்துவீர் !!

# இக்கல்வி ஆண்டிலேயே மருத்துவ படிப்பு பயில மிக குறைந்த இடங்களே உள்ளன.

## Counselling Apply செய்யாத மாணவர்களுக்கும் அரிய வாய்ப்பு

**அத்தி இயற்கை மருத்துவ கல்லூரி** குடியாத்தம் (வேலூர் மாவட்டம்)

(இயற்கை மருத்துவம் & யோகா)

அரசு அங்கீகாரம் பெற்றது. நீட் தேர்வு விலக்கு பெற்றது.

**BNYS (NATUROPATHY & YOGA) (5½ வருடம்)**

**COUNSELLING CODE: 852**

**04171-229108, 8754959066**




வேலூர் மாவட்டம் குடியாத்தம் நகரின் அருகில் 4கிலோமீட்டர் தொலைவில் காக்கா தோப்பு கிராமத்தில் எங்களுடைய அத்தி இயற்கை மற்றும் யோகா மருத்துவ கல்லூரி அமைந்துள்ளது.

எங்களுடைய கல்லூரியானது இயற்கை சூழலில் தேசிய நெடுஞ்சாலை, இரயில் நிலையம் மற்றும் நகர பேருந்து நிலையத்திற்கு அருகாமையில் அமைந்துள்ளது.

கிராமப்புற மாணவர்களையும் மருத்துவராக்க வேண்டும் என்ற நோக்கில் பேராசிரியர் சிறுநீரகவியல் நிபுணர் டாக்டர் பி.சௌந்தரராஜன் அவர்களால் துவங்கப்பட்ட கல்லூரி.

பெயர்:-ம.அரவிந்த், சொந்தஊர்:காயாமொழி, தூத்துக்குடி மாவட்டம்., இருப்பிடம்-சென்னை, கூடுவாஞ்சேரி, பிறந்ததேதி-19.9.1995, நிறம்-மாநிறம், உயரம்-5.8அடி, ராசி-மிதுனம், நட்சத்திரம்-புனர்பூசம், படிப்பு-DME., BCA., Executive., மாதவருமானம்-25,000/- பெறும் இந்த மணமகனுக்கு, படித்த நல்ல வேலையிலுள்ள இருப்பிடம் சென்னையை சேர்ந்த மணமகள் தேவை. தொடர்புக்கு:9789962179, 9677270078, File No:

| | | | |
|---|---|---|---|
| | கேது | | சந் |
| | இராசி | | |
| சனி | | | |
| லக் | வியா | செவ் ரா | சூரிபுத சுக் |

| | | | |
|---|---|---|---|
| சுக் சனி | கேது லக் | | சந் |
| செவ் புத | அம்சம் | | |
| சூ | | | |
| வியா | | ராகு | |

## இந்து நாடார் மணமகள் தேவை

பெயர்:தனமுத்து(எ)தனராஜன், சொந்தஊர்: ஸ்ரீவைகுண்டம், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-20.10.1991, நிறம்-மாநிறம், உயரம்-168செ.மீ, ராசி-கும்பம், நட்சத்திரம்-சதயம் , படிப்பு-B.Com., CS., Salaried (Private Company), இந்த மணமகனுக்கு, படித்த நல்ல குணமுள்ள மணமகள் தேவை. தொடர்புக்கு: 9841922690, 7358317784 File No:JL-756-B.

| | | | |
|---|---|---|---|
| | | | கேது |
| சந் | இராசி | | |
| | | | வியா லசுக் |
| சனி ராகு | | சூரிசெ புத | |

| | | | |
|---|---|---|---|
| புதகே சந் | | | |
| | அம்சம் | | |
| | | | லக் வியா |
| செ சனி | | சூரி | சுக் ரா |

## R.C. கிறிஸ்துவ நாடார் மணமகள் தேவை.

பெயர்:ஜே.அந்தோனி ஜெரால்டு, சொந்தஊர்:திருநெல்வேலி, இருப்பிடம்-சென்னை, வளசரவாக்கம், சொந்தவீடு, வாடகைவருமானம்-4,00,000, நிறம்-மாநிறம், உயரம்-183செ.மீ, பிறந்ததேதி-13.7.1992, படிப்பு-B.A., B.L., Legal Advisor ., மாதவருமானம்-1,00,000 பெறும் இந்த மணமகனுக்கு, படித்த நல்ல குணமுள்ள மணமகள் தேவை. File No: RC-489-B. தொடர்புக்கு:9962129962.

## R.C. கிறிஸ்துவ நாடார் மணமகள் தேவை.

பெயர்: Dr.I.Prince VijayRaj, சொந்தஊர்:வேம்பார், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-கூடுவாஞ்சேரி, பிறந்ததேதி-14.2.1998, உயரம்-6.2, நிறம்-மாநிறம், படிப்பு-MBBS., M.D., IIyear General Medicine., டாக்டர், இந்த மணமகனுக்கு, MBBS., படித்த அழகான மணமகள் தேவை. தொடர்புக்கு: 8072411192, 9840811846, File No:Rc.-516-B. www.indianadarmurasu: INM-1172.

## இந்து நாடார் மணமகள் தேவை

சொந்தஊர்:கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-16.9.1994, நிறம்-சிவப்பு, உயரம்-170செ.மீ, ராசி-மகரம், நட்சத்திரம்-திருவோணம், படிப்பு-B.E., Computer Science., (samsung)., Bangalore., வேலை-மாதவருமானம்-1,20,000/- பெறும் இந்த மணமகனுக்கு, பி.இ நன்கு படித்த நல்ல வேலையிலுள்ள மணமகள் தேவை.9884491277, 7550183701 File No:JL-770-B.

| | | | |
|---|---|---|---|
| | கேது | லக் | செவ் குளி |
| சனி | இராசி | | |
| சந் | | | சூரி |
| | | வியாரா சுக் | புத |

| | | | |
|---|---|---|---|
| | லக்வி ராகு | குளி | |
| சுக் | அம்சம் | | சந் |
| | | | புத |
| சூரி | சனி | கேது | |

## இந்து நாடார் மணமகள் தேவை

பெயர்:சுகுமார்,சொந்தஊர்:ஆறுமுகநேரி, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-19.6.1989, நிறம்-மாநிறம், உயரம்-5.6அடி, ராசி-தனுசு, நட்சத்திரம்-மூலம், படிப்பு-DCE., வேலை-Perfect Builders Pvt., Site Engineer., மாதவருமானம்-35,000/- பெறும் இந்த மணமகனுக்கு, நல்ல குணமுள்ள பெண் தேவை. 7550142057, 7200065070, File No:JL-771-B.

| | | | |
|---|---|---|---|
| | | புத வியா | சூ சுக் |
| ராகு | இராசி | | செவ் |
| | | | லக் கேது |
| சந் சனி | | | |

| | | | |
|---|---|---|---|
| | சந் சுக் | கே | லக் புத |
| | அம்சம் | | சனி |
| | | | |
| | சூரி ராகு | | செவ் வியா |

## இந்து நாடார் மணமகள் தேவை

பெயர்:R.விக்னேஷ் ஆனந்த், சொந்தஊர்:குட்டம் தூத்துக்கடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-30.9.1992, நிறம்-மாநிறம், ராசி-விருச்சிகம், நட்சத்திரம்-அனுஷம், படிப்பு-M.C.A., வேலை-Creative Manager, Private Sector, மாதவருமானம்-75,000/- பெறும் இந்த மணமகனுக்கு, படித்த நல்ல குடும்பபாங்கான மணமகள் தேவை. தொடர்புக்கு:9444561944,8754448529.

| | | | |
|---|---|---|---|
| | | லக் | செவ் கேது |
| | இராசி | | |
| சனி வ | | | |
| ராகு | சந் | சுக் புத | சூரி குரு |

| | | | |
|---|---|---|---|
| | ராகு | சூரி | |
| லக்குரு செவ் | அம்சம் | | |
| சுக் | | | |
| சனி | | புத கேது | சந் |

# நாடார் சமூகத்தின் போராட்ட வரலாறு

## 8.நாடார்களின் பிரிவுகள்

தொகுப்பு ஆசிரியர்:சு.செந்தமிழ்ச் செல்வன்
செல்:98412 26856.



கல்வெட்டு செப்பேடு:

1.சாலிவாகன சகாப்தம் 1561ல் (கி.பி.1639) குதிரை மொழித்தேறி, முத்துகிருஷ்ணாபுரம் (தூத்துக்குடி மாவட்டம்) பொறிக்கப்பட்ட கல்வெட்டில்:

1.ஆதிச்ச நாடன்,
2.கோவிந்த பணிக்க நாடன்,
3.வீரப்ப நாடன்,
4.தீத்தியப்பன் நாடன்,
5.பிச்ச நாடன்,
6.அய்யக்குட்டி நாடன்,
7.திக்கெல்லாம் கட்டி நாடான்,
8.நினைத்தது முடித்த நாடன்.
9.அவத்தைக்குவி நாடன்.
10.குதியுண்டா நாடான் ஆகிய நாடாதி நாடாக்கள்.. என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

2).கொல்லம் 760 (கி.பி.1584) தை மாதம் 14ஆம் தேதி வரையப்பெற்ற திருச்செந்தூர் சாசனம் சிவந்தி ஆதித்த நாடன், குமாரசாமி ஆதித்த நாடன் உள்ளிட்டோரால் வழங்கப்பட்ட நன்கொடையால் மண்டபம் கட்டப் பெற்றதாகக் கூறுகிறது.

3). ராதாபுரம் வட்டம், அச்சம்பாடு கல்வெட்டு (கி.பி) குட்டம் சந்திராதிச்ச நாடானும், கொம்மடிக் கோட்டை திருப்பாப்பு நாடானும், படுகைபற்று அருதக்குட்டி ஆதிச்ச நாடனும் என பல்வேறு நாடான் என்ற பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

4).கி.பி.1662ஆம் ஆண்டு வெட்டப்பெற்ற விக்கிரமசிங்கபுரம் கல்வெட்டு "முள்ளிநாட்டில் விக்கிரமசிங்கபுரம் வலங்கை உய்யக் கொண்டார்களில் பெரும்பற்றுச் செவ்வந்தி நாடான் மற்றுண்டான பேர்கள்" எனக் கூறுகிறது.

5). பூண்டிச் செப்பேடு 14.6.1670இல் எழுதப்பட்டது. இதில் நாடார்களில் அடக்கமுடையார், போர்முடையார் என்ற பிரிவினரும், இவ் இரு பிரிவுகளில் நாடாதி, நாடான், நட்டாத்தி, மதுரையான் ஆகியோர் அடக்கமுடையார் பிரிவிலும், கோநாடான், சங்கனி, கொங்கன் போர்முடையார் பிரிவும் இருந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

6). அவினாசி வட்டம் திருமுருகன்பூண்டி நாடார் பட்டயம் (கி.பி.1770) "நாடாதி நாடான், புட்டவரத்தாளாகிய நாடாத்தியம்மை, மதுரைவள நாடான்.." என பதினோரு நாடான் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளது.

7).ஈரோடு வட்டம் அவல்பூந்துறை நாடார் செப்பேடு (17ஆம் நூற்றாண்டு) "காளி நாடன், ராக்கி நாடான், யிருள நாடான்..." என பதினைந்து பெயர்கள் "நாடன்" மற்றும் "நாடான்" என பொறிக்கப்பட்டுள்ளன.

8). திருவாவடுதுறை ஆதீனத்தால் பொறிக்கப்பட்டுள்ள சிவகாசி செப்புப்பட்டயத்தில் (கி.பி.1769) எண்ணற்ற பெயர்கள் நாடான் என்றே பொறிக்கப்பட்டுள்ளன.

9).குலசேகர பட்டிணம் கல்வெட்டு (கி.பி.1752) - குட்டம் சந்திர மார்த்தாண்ட பணிக்க நாடான், குமார வீரமார்த்தாண்ட நாடான் முதலாகிய நாடார் நாடாக்களும் சகலருமோம்" எனக் கூறுகிறது.

10).சேரன் வஞ்சி மார்த்தாண்ட தம்பிரான் வண்ண குலசேகரப் பெருமாள், கொல்லம் 941 வைகாசி13 (கி.பி.1765) வெளியிட்ட கொடுங்கோலூர் செப்புப்பட்டயத்தில் காணப்படுவது - "சத்திரிய குலத்தில் உதித்தார்... சான்றார் என்று பெயர் இட்டதும், உலகமெங்கும் நாடாண்டதினால் நாடார் என்றும்..."

11). கருமாபுரம் நாடார் செப்பேடு (கி.பி.17ஆம் நூற்றாண்டு) "திராவிர தேசத்தில் சௌந்தரபாண்டியன் தனது மண்டலத்தில் நாடாளுவாரென்றும் நாடாழ்வாரென்றும் பேர் பெற்றவரான சான்றோர் குலத்தில்..." எனக் கூறுகிறது.

12.தேவகோட்டை 13 ஆம் நூற்றாண்டு கல்வெட்டு. "வடவகை நாடார்" என்று குறிப்பிடுகிறது.

13.அகஸ்தீசுவரம் வட்டம் மயிலாடி குலசேகரபுரம் சுமைதாங்கிக் கல்லில் பொறிக்கப்பட்டது. - கொல்லம் 903 ஆம் ஆண்டு (கி.பி.1727) கூறுவது ஐப்பசி மாசம் 21 தேதி செவ்வாய்க் கிழமை. ராமசாமி நாடார் மகள் பார்வதி நாடாச்சி வ(கை)க கன்னங்குளம். இது போன்ற எண்ணற்ற கல்வெட்டுகள், செப்பேடுகள், கிராமியப் பாடல்கள், வில்லிசை பாடல்கள், சான்றோர் சமூகத்திற்கு மட்டுமே "நாடன்", "நாடான், "நாடாள்வான்," "நாடாவார்" நாடார் என்ற பட்டப் பெயர்கள் இருந்ததைத் தெரிவிக்கின்றன.

11): வலங்கை உய்யக் கொண்டார்:

தமிழகத்திலும், கர்நாடகத்திலும் வலங்கையர்- இடங்கையர் என்ற சாதிப் பிரிவினர் சுமார் பத்து நூற்றாண்டுகளாக இருந்து உள்ளனர். இதில் அனைத்து பிரிவினரும் ஏதாவது ஒரு பிரிவில் இணைந்து உள்ளனர். இதில் நாடார்கள் வலங்கையருள் ஆரம்பம் முதலே இணைத்துக் கொண்டுள்ளனர்.

கி.பி.1043-44 சுந்தர சோழ பாண்டியன் கழுகுமலைக் கல்வெட்டுகளில் இருந்து உய்யக் கொண்டார் அரச பரம்பரையினர் எனவும் நிலங்களின் மேல் உரிமை உள்ளவர்களாக இருந்தார்கள் எனவும் குறிப்பிட்டுள்ளதாக அறிய முடிகிறது.

திருவிதாங்கூர் திவான் விநாகம்மையா, நாடார்கள் "வலங்கை உய்யக்கொண்டர்" என்ற பட்டத்தை உடையவர்கள் என்றும், அவர்கள் சோழர் வழி வந்தவர்கள் என்றும், திருவிதாங்கூர் ஸ்டேட் மேனுவலில் குறிப்பிட்டு உள்ளார். - தொடரும்..



AB

Dr.M.Sundaralingam B.SC.,B.VSC.,
PH:24895266 CELL: 9444015277

ஆர்த்தி பிராய்லர்ஸ்

77, Nedunchezhian Street, (opp. M.G.R. Nagar Market)
M.G.R.Nagar, Chennai-78.

SSS

Cell:9884687675, 9488491671.

அய்யா துணை

திருமண தகவல் மையம்



அமைப்பாளர்: P.சக்திவேல் நாடார்.

பூர்வீகம் நாடார் உவரி எண்:42, அன்னை கமலா நகர், வீராபுரம் மெயின் ரோடு, நியூ காலனி பஸ் ஸ்டாப், ஆவடி, சென்னை-600 055.

# சிவந்தி ஆதித்தனார் சாதனை சரித்திரம்

**அய்யாவின் அன்புப் பரிசு**

**-ஐ.சண்முகநாதன்**

**நேரு வியப்பு**

"புத்தகத்தின் அட்டை, ஆர்ட் காகிதம் ஆகியவற்றை, விலை கட்டுபடி ஆகக்கூடிய விதத்தில் மாற்றலாமா?" என்று சிலர் கேட்டபோது, "புத்தகத்தின் தரத்தை எந்தவிதத்திலும் குறைக்கக் கூடாது. அப்படியே இருக்க வேண்டும்" என்று ஐயா அவர்கள் திட்டவட்டமாகக் கூறிவிட்டார்கள்.

வாசகர்களிடம் ஐயா அவர்கள் காட்டிய அன்புக்கு, வாசகர்கள் மிகச் சரியானபடியே நன்றி செலுத்தினார்கள். "வரலாற்றுச் சுவடுகள்" மிகக்குறுகிய காலத்தில் 80 ஆயிரம் பிரதிகள் விற்பனை ஆகி, பதிப்புத்துறையில் புரட்சியே செய்தது. புத்தகக் காட்சியில், இந்தப் புத்தகத்தை வாங்க நீண்ட 'கியூ' வரிசை நின்றது!

**வழிகாட்டி**

பிராந்திய மொழிப் பத்திரிகையான "தினத்தந்தி", தினமும் 16 லட்சம் பிரதிகளுக்கு மேல் விற்பனை ஆவதும், ஒரு கோடிக்கு மேற்பட்ட வாசகர்களைப் பெற்றிருப்பதும் பெரிய அதிசயமாகும்.

இதன் மூலம், பத்திரிகையை எப்படி நடத்த வேண்டும் என்று, இந்தியாவுக்கே ஐயா அவர்கள் வழிகாட்டி இருக்கிறார்கள் என்று கூறினால் அது மிகையல்ல.

பத்திரிகைத் துறையின் முடிசூடா மன்னராகத் திகழ்ந்த சின்ன ஐயா டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் அவர்கள் கல்வி, விளையாட்டு, ஆன்மிகம் ஆகிய துறைகளிலும் ஆர்வம் கொண்டவர்கள்; சாதனை படைத்தவர்கள்.

எனினும், அவர்கள் இதயத்தில் முதலிடம் பெற்றது பத்திரிகைத் துறைதான். தினமும் அவர்கள் அமர்ந்து வேலை பார்த்தது "தினத்தந்தி" அலுவலகத்தில்தான்.

ஐயா அவர்களை "இதய தெய்வம்", "நடமாடும் தெய்வம்" என்றெல்லாம் அழைத்து வந்தோம். இப்போது, தெய்வத்தோடு இரண்டறக் கலந்து விட்டார்கள். அவர்கள் கூறிய அறிவுரைகளைப் பின்பற்றி, அவர்கள் காட்டிய வழியில் நடப்பதே நாம் அவர்களுக்கு செலுத்தும் உளமார்ந்த அஞ்சலியாகும். அவர்கள் இறுதியாகக் கூறிய அறிவுரை: "உழைப்போம்! உயர்வோம்!"

**விமானம் கடத்தல்**

புகழ் பூத்த சிவந்தி ஆதித்தனாரின் வாழ்க்கையில், பூகம்பம் ஏற்பட்டது போல, மிகமிக அதிர்ச்சியான ஒரு நிகழ்ச்சி நடந்தது!

1993 மார்ச்சு 27-ந்தேதி டெல்லியிலிருந்து சென்னைக்கு அவர் பயணம் செய்த விமானம் கடத்தப்பட்டது! இந்தச் செய்தி தமிழ்நாடு முழுவதும் மிகுந்த பரபரப்பையும், பயத்தையும் ஏற்படுத்திவிட்டது.

இந்தச் செய்தி 28-03-1993 அன்று "தினத்தந்தி"யில் முதல் பக்கத்தில் கொட்டை எழுத்துகளில் தலைப்புச் செய்தியாக வெளிவந்தது.

"சென்னை வந்த விமானத்தை அமிர்தசரசுக்குக் கடத்திய கடத்தல்காரன் சரண்! பா.சிவந்தி ஆதித்தன் உள்படப் பயணிகள் பத்திரமாகத் திரும்பினர்" என்ற தலைப்பில் அந்தச் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. அந்தச் செய்தியை அப்படியே தருகிறேன்-

டெல்லியில் இருந்து ஐதராபாத் வழியாக சென்னை வரும் இந்தியன் ஏர்லைன்ஸ் "ஏர் பஸ்" விமானம் நேற்று காலை 6.15 மணிக்கு டெல்லியில் இருந்து புறப்பட்டது.

போபாலுக்கும், நாகபுரிக்கும் இடையில் விமானம் பறந்து கொண்டிருந்த போது கடத்தப்பட்டது.

அப்போது நேரம் காலை 7.45.

**மிரட்டல்**

விமானம் பறந்து கொண்டிருந்தபோது, ஒரு மர்ம மனிதன் விமானிகள் அறைக்குள் புகுந்தான். "இடுப்பைச் சுற்றி வெடிகுண்டு வைத்து இருக்கிறேன். விமானத்தை பாகிஸ்தானுக்கு திருப்புங்கள். இல்லாவிட்டால் வெடிகுண்டை வெடிக்க வைத்து விடுவேன்" என்று அவன் மிரட்டினான்.

உடனே விமானிகள் விமானத்தை பாகிஸ்தானில் உள்ள லாகூர் விமான நிலையத்துக்கு கொண்டு சென்றனர். அங்கு இறங்க அனுமதி கேட்டு விமான நிலையம் மீது அந்த விமானம் 20 நிமிட நேரம் வட்டமிட்டுப் பறந்து கொண்டு இருந்தது. (தொடரும்)



# காதலர்தின சிறப்புச் சிரிப்புகள்!!!

## வழங்குபவர்: - திருமதி.லீலாஸ்டீபன், மும்பை-78, செல்:022-40142398

திருமதி.லீலா ஸ்டீபன்., மும்பை-78

காதலன்:சீக்கிரம் கோடீஸ்வரனாகி, செட்டில் ஆக ஒரு தொழில் சொல்லேன்.

காதலி:- இன்று (பிப்ரவரி14) காதலர் தினமாச்சே. ரோஜாப்பூ வியாபாரம் செய்தால், தக்காளி வியாபாரி கோடீஸ்வரர் ஆனது போல நாமும் ஆகிடலாம்.

2.ரதி:- ஏன் மதன், நாம் இருவரும் உங்க அப்பா காலில் போய் விழுந்தால் என்ன?

மதன்:- அவர் போலீஸ் இன்ஸ் பெக்டர் ஆச்சே பேசமாட்டார் . பூட்ஸ் காலால் எட்டி உதைப்பார். சரியா?

3.சுரேஷ்:- நான் உனக்கு எழுதிய "லவ் லட்டரை பக்கத்து வீட்டு சிறுமியிடம் கொடுத்து உன்னிடம் தரச் சொன்னது தப்பாப் போச்சி!

மீனா:- ஏன் என்னாச்சி?

சுரேஷ்:- உன் அக்கா கையில கொண்டு போய் கொடுத்திட்டா!

4.நண்பன்:- அவன் மூன்றடி உயரம் தான் இருக்கிறான். காதலியோ ஆறடிக்கு மேல் இவர்களுக்குள் எப்படி காதல் மலர்ந்தது?

ராஜு:- "காதலுக்குக் கண் இல்லை" என்பதை நீ கேட்ட தில்லையோ?

5.அனு:- (காதலனிடம்) உனக்குக் கல்யாணமாகி ஒரு குழந்தை இருப்பதை ஏன் மறைத்தாய்?

கணேஷ்:- எனக்குக் கூச்ச சுபாவம். அதான்.

அனு:- கூச்சலிடுவேன். ஓடிப் போய் விடு.

6.காதலி:- காதலிப்போர் எல்லோருமே கல்யாணம் பண்ணிக்கிட்டா எப்படி இருக்கும்?

காதலன்:- ரோமியோ ஜூலியட், அம்பிகாபதி, அமராவதி, சலீம், அனார்கலி காதல் கதை தெரியாமலே போயிருக்கும்.



7.தோழி:- ஜெனி, நான் வக்கீல் பையனைக் காதலித்தது தப்பாப் போச்சு,,,

ஜெனி:- ஏன், என்னாச்சி?

தோழி:- "விதி" சினிமாவில் வரும் ராதாவின் நிலைமை தான் எனக்கும்.

8.மலர்விழி:- ஆண்டி, உங்க பையன் மதன் இருக்காரா? இன்ற காதலர் தினமாச்சே அதான் அவரைப் பார்க்க வந்தேன்.

ஆண்டி:- அவன் கட்டிக்கப் போற மாமன் மகளைப் பார்க்க தரமணிவரைப் போயிருக்கான்.

மலர்விழி: அட துரோகி!

9.செந்தில்:- டேய் மணி, லிவ் டுகேதர்" என்றால் என்ன?

மணி:- சட்டை மாதிரிடா. போட்டுக்கணும் பழசானால் மாத்திக்கலையா, அது போல தான் லிவ்டுகெதர்" காதல் வாழ்வும்.

10.கலா:- உங்க அப்பா என்னை மருமகனா ஏத்துப்பாரா?

தருண்:- கக்கூஸ் கழுவுறதா சொல்லாதே. ஐ.டி. கம்பெனியில் 5லட்சம் சம்பளம் என்று சொல் ஆரத்தி எடுத்து ஏத்துப்பார்.

11.காதலன்:- அன்பே, நாம் இருவரும் ஓடிபோகலாமடி

காதலி:- செருப்பு பிஞ்சிடும்.

காதலன்:- அப்போ நடந்தே போகலாமா, டியர்.

12.மாதவன்:- இன்று உனக்குப் பரிசளிக்க ஒரு "வாட்ச்" வாங்கி வந்தேன். வழியில் ரேவதி பிடுங்கிக் கொண்டாள்.

சரசு:- யார் அந்த ரேவதி?

மாதவன்:- முன்னாள் காதலி,

சரசு:- துரோகி, என்னைத் தேடி வராதே!!

# நாடார் முரசு பிறந்த கதை

அந்த காலத்து குடும்பங்கள் மிகவும் பெரிதாகவும், கூட்டு குடும்பமாகவும் இருக்கும் ஒவ்வொரு வீட்டிலும் குறைந்தது 10 குழந்தைகளாவது இருப்பார்கள். அதுபோல தான் எங்கள் வீட்டிலும் 9பேர் மிகவும் மகிழ்ச்சியாக வாழ்ந்தோம். நானும் எனது வயதுக்கு 2-வயது அதிமான அன்னக்கிளியும் 2-வயது குறைவான செசிலியும் மிகவும் அதிகமான நேரங்களில் சேர்ந்து தான் பல விளையாட்டுகளையும், குடும்ப சண்டைகளையும் போட்டு சமாதானமாகிவிடுவோம். அன்னக்கிளி எப்படியோ அது போல்தான் எனது தங்கை செசிலியும். எனது தங்கை மட்டுமல்லாமல் எனது தோழியும் ஆவார். தோழி என்பதை விட எனது சேவகி என்று கூட கூறலாம். எனக்கு அத்தனை வேலைகளையும் அவளே செய்வாள். பெரிய பிடிவாதக்காரியாக இருந்தாலும் நான் எங்கு சென்றாலும் கூடவே அலைவாள் நாங்கள் தெரசாள் உயர்நிலை பள்ளியில் படித்த போது என் புத்தகப் பையை அவளே சுமந்து வருவாள் பள்ளி முடிந்ததும் நான் எனது நண்பர்ளோடு சென்றாலும் எனது புத்தகப் பைகளை பத்திரமாக அவளே சுமந்து வீடு வந்து சேர்த்து விடுவாள். என்னை சின்ன அண்ணாச்சி என்றுதான் அன்போடு அழைப்பாள் எனது நண்பர்ளோடு விளையாட செல்லும் போது இவளும் எங்களோடேயே எங்களுக்கு சமமாக விளையாடுவாள். கம்பு எறியும் விளையாட்டு, கில்லி தண்டா, கிளியாந்தட்டு, ஒளித்து விளையாட்டு போன்ற எந்த விளையாட்டிலும் கலந்து கொள்வாள். பெண்களுக்கான பயம் சிறிதளவு கூட இல்லாத வீராங்கனை சிறுவயதில் அவள் எதிரிகள் யாராக இருந்தாலும் பந்தாடி விடுவாள்.

நான் விமான படையில் சேர்ந்த காலத்தில் நான் சேர்ந்த என் அனுமதி கடிதத்தை அவள்தான் முதலில் என்னிடம் வந்து கொடுத்தாள். அப்படி நாங்கள் எங்கள் சிறுவயது காலத்தை கடந்தோம். பிற்காலத்தில் Y.M.C.A.யில் பயிற்சி P.ET-ஆசிரியராக பணியாற்றி அவள் திருமணம் ஆனபின் அவளது கணவர் ஸ்டீபன் அந்தமானில் இருந்ததால் கணவனோடு சென்று அங்கேயே பணியாற்றி பலருக்கும் பல உதவிகளை செய்து அந்த தீவிலேயே பெயரும் பெற்றாள். அவளது பிள்ளைகளையும் உயர்ந்த கல்வி கொடுத்து அனைவருமே உயர் பதவியில் இருக்கிறார்கள். தற்போது தனது டாக்டர் மகளோடு வசித்து வந்தாலும் தனது ஊர் விவசாயிகளை காண அடிக்கடி சொந்த ஊர் சென்று வருவாள் பனைமரம், தேனீக்கள் போன்ற இயற்கை செய்திகளை ஆராய்ச்சி செய்து புத்தகம் எழுதி சிறு எழுத்தாளராகவும் இருக்கிறாள்.

## தமிழ்நாடு அரசின் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மிகச்சிறந்த செயல்பாடுகள்

**-வி.ஞானசேகர், தொழில் ஆலோசகர், 9566253929.**

**சாராஸ்:**

சாராஸ் என்பது அனைத்து மாநிலங்களைச் சேர்ந்த ஊரக கண்காட்சி ஆகும். வருடந்தோறும் பல்வேறு மாநிலங்களில் நடைபெறும் இக்கண்காட்சியில் நாடு முழுவதிலிருந்தும் சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த கைவினைஞர்கள் உற்பத்தி செய்த கைவினைப் பொருட்கள் பார்வைக்கும், விற்பனைக்கும் வைக்கப்படுகிறது. சாராஸ் கண்காட்சிகளில் தமிழ்நாட்டைச் சார்ந்த மகளிர் சுய உதவிக்குழுக்கள் கலந்து கொண்டு தங்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்து பயன் அடைந்து வருகின்றனர். நல்ல முறையில் விற்பனை ஆகின்றது

**கல்லூரிச் சந்தைகள்:**

மகளிர் சுய உதவிக்குழு உற்பத்திப்பொருட்களை இளைஞர்களிடையே பிரபலப்படுத்துவதற்கு கல்லூரிச் சந்தைகள் மிக முக்கியமான சந்தை வாய்ப்புகளில் ஒன்றாக உள்ளது. கல்லூரிச் சந்தைகளில் மகளிர் சுய உதவிக்குழுக்கள் பங்கு கொண்டு தங்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்து பயன் அடைகின்றனர். அனைத்து கல்லூரிகளிலும் சந்தைகள் அமைக்க அனுமதி வழங்கப்படுகிறது. கிராமப்புற பெண்களுக்கு இந்தச் சந்தைகள் நன்கு பயன்படுகின்றன.

**ஒத்தத் தொழில் குழுக்கள்:**

வேளாண்மை சார்ந்த மற்றும் வேளாண் சாராத ஒத்தத் தொழில் புரியும் ஒரே பகுதியைச் சார்ந்த சுய உதவிக்குழு உறுப்பினர்களை ஒருங்கிணைத்து ஒத்த தொழில் குழுக்கள் உருவாக்கப்படுகின்றன. ஒவ்வொருதொழில் குழுவிற்கும் வடிவமைக்கப்பட்ட காரணிகளின் அடிப்படையில் பொதுவான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தவும், மூலப்பொருட்கள் வாங்குவதற்கும், சந்தை இணைப்புகள் ஏற்படுத்துவதற்கும் உறுப்பினர்களுக்கு நிர்வாகம் மற்றும் தொழில் முனைவோர் குறித்த பயிற்சிகள் வழங்கவும் தொகுப்பு நிதி வழங்கப்படுகிறது. இந்த நடவடிக்கை அவர்களின் உற்பத்தித் திறனை அதிகரித்து வருவாயை பெருக்க வழிவகை செய்கிறது.

**பண்ணைத் தொழில் முதன்மை உற்பத்தியாளர்கள் குழுக்கள்:**

விவசாயத்தில் ஒரே வகையான பயிர் சாகுபடி செய்யும் மகளிரை ஒருங்கிணைத்து முதன்மை உற்பத்தியாளர் குழுக்கள் அமைக்கப்படுகிறது. உற்பத்தி செய்யப்படும் பயிர் மற்றும் பிற தொழில்களுக்கு ஏற்றவாறு திறன் பயிற்சி மற்றும் “நவீன தொழில்நுட்ப பயிற்சி” விவசாயத்துறை மற்றும் பிற துறை மூலம் இணைந்து உற்பத்தியாளர்குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிறது.

விவசாய உற்பத்தியாளர் குழுக்களைப் போலவே பண்ணை சார்ந்த ஆடு மற்றும் மாடு வளர்ப்பு உற்பத்தியாளர் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. ஒவ்வொரு குழுவிற்கும் தேவையான பொது வசதிகளான விவசாயக் கருவிகள், இடு பொருட்கள் கொள்முதல் செய்தல் மற்றும் சந்தை வாய்ப்பு உருவாக்கம் ஆகியவற்றிற்காக நிதி உதவி அளிக்கப்படுகிறது. மேலும் கூடுதலாக கிராம ஊராட்சிகளில் பண்ணை சார்ந்த தொழில் விரிவாக்கம் செய்ய திட்டமிடப்பட்டு ஒரு ஊராட்சிக்கு ஒரு விவசாய உற்பத்தியாளர் குழு என்ற அடிப்படையில் விவசாய உற்பத்தியாளர்களின் குழுக்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

**பெண் விவசாயிகள் மேம்பாட்டு திட்டம்**

**மகிளா கிசான் சசக்திகரன் பரியோஜனா:**

தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் ஒரு துணைக் கூறாக பெண் விவசாயிகள் மேம்பாட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் மகளிரின் பங்கேற்பினை விவசாயத் தொழிலில் அதிகப்படுத்துவதும், உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரித்து அவர்களின் வருமானத்தை பெருக்குவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் காஞ்சிபுரம் திருவள்ளூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களைச் சார்ந்த 10 வட்டாரங்களில் உள்ள 166 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்படுகிறது. இதன் தொடர்ச்சியாக மூன்று வருடங்களில் 12000 பெண் விவசாயிகள் பயனடையும் விதமாக கரூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள 4 வட்டாரங்களில் 2வது கட்டமாக இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனத் திட்டம்:**

உழைக்கும் மகளிரின் அன்றாட செயல்பாட்டை எளிதாக்கும் நோக்கத்துடன் அவர்கள் தங்களின் தொழிலை மேற்கொள்வதற்கும் பணியிடங்கள், வங்கிகள் மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளில் பணிகளை மேற்கொள்வதற்கும் எளிதில் சென்று வர ஏதுவாக இரு சக்கர வாகனங்களை மானியத்துடன் வாங்குவதற்காக இத்திட்டம் உருவாக்கப்பட்டது.

தன்னுடைய ஊதியமே குடும்பத்தின் பிரதான வருமானம் என்ற நிலையில் வாழ்வாதார செயல்பாட்டிற்காக / வேலை வாய்ப்புக்காக தனியாகவோ அல்லது கூட்டாகவோ தொலைத் தூரத்திற்குச் சென்று பணிபுரியும் பெண்களே திட்டத்தின் நோக்கத்திற்கான பயனாளிகள் ஆவர். இத்திட்டத்தின் கீழ் பயனாளிகள் கியர் இல்லாத / ஆட்டோ கியரில் இயங்கும் வசதியுடன் கூடிய 125சிசி க்கு மிகாமல் தரமான புதிய இருசக்கர வாகனம் வாங்கி கொள்ள அதிகபட்ச மானியமாக வாகன விலையில் 50 சதவீதமோ அல்லது ரூ.25000 இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படும்.

மகளிர் மேம்பாட்டிற்காக அயராது செயல்பட்டு வரும் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் ஆகியவற்றின் ஆக்கப்பூர்வமான பணிகளால் சுய உதவிக்குழு மகளிர் அனைத்துத் துறைகளிலும் முன்னிலைப் பெற்று வருகின்றனர் என்பது நம் அனைவருக்கும் பெருமை அளிக்கும் செயலாகும்.

தமிழ்நாட்டில் உள்ள படித்த / படிக்காத பெண்கள் பயிற்சி, கடன், மானியம், மார்க்கெட் உதவி பெற்று, தொழில் முனைவோராகி, தாங்களும் முன்னேறி நாட்டையும் வல்லரசாக்கிட வேண்டுகிறேன்.




S.ATHISAYARAJ.B.A.,B.L.,P.G.DL.A
Correspondent
Koilpillai Mat.Hr.sec.School
65. Rayala Nagar, 2nd Main Road, Ramapuram, Chennai-89.
Ph:044-22492489. 22492286, Cell:9840715246.
Email:samuelathisayaraj@gmail.com

# இலக்கியச் செல்வர் குமரி அனந்தனின் பயணங்கள்
## தமிழ்க் காவியமாய் குமரி அனந்தன்

வை.ஜவஹர் ஆறுமுகம்
9442949655

2019-ல் 40 ஆண்டுகளுக்குப் பிறகு பாராளுமன்றத்தில் எல்லா பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழ் மொழியில் பதவி ஏற்றது மகிழ்ச்சி அளிக்கிறது என்றார் குமரி அனந்தன். கட்சி எல்லைகளைக் கடந்து எல்லோரும் கன்னித் தமிழ் வளர்க்க வேண்டும். பாராளுமன்றத்தில் இனிமேலும் தொடர்ந்து தமிழிலேயே கேள்விகள் கேட்டு பதிலையும் பெற வேண்டும் என வேண்டுகிறார் குமரி அனந்தன்.

ஒரு முறை நாடாளுமன்ற உறுப்பினராகவும், 4 முறை சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்த குமரி அனந்தன், பணம், சொத்து எதுவும் சேர்க்கவில்லை. இன்றும் அரசு ஒதுக்கிய சிறிய காலனி வீட்டில் வாழும் குமரி அனந்தன் ஏழையாகவே வாழுகிறார். நான் முதலில் குறிப்பிட்டது போல 16 கார்கள் இருந்த ஸ்ரீ மகள் கம்பெனி செல்வந்தர் வீட்டின் மருமகன் இன்று வரை ஏழையாக.

காந்தி -காமராஜ் தேசிய காங்கிரஸ் என்று ஒரு புதிய கட்சியைத் துவங்கியது ஒரு ஆச்சரிய அனுபவம். ஜனதா கட்சியில் இருந்த குமரி அனந்தனை தனிக்கட்சி துவங்கும்படி தூண்டியவர்கள் தொண்டர்களே. இதில் முன்னிலையில் இருந்தது திருச்சி. திருச்சி சரஸ்வதி கபே மோகன் ஆதரவுடன் என்.கிருஷ்ணன், மா.முருகேசன், எடத்தெரு கோபால கிருஷ்ணன், மலைக்கோட்டை சுப்பையா, அயிலை கருப்பையா என்று ஒரு பெரிய பட்டாளம் குமரி அனந்தனுக்கு ஆதரவாக களத்தில் இறங்கியது. தென்னூர் கிருஷ்ணன் மக்கள் தொண்டர் என்று போற்றப்பட்டவர்.

கா.கா.தே.க கட்சிக்கு சுடர் கொடியை வடிவமைத்தது திருச்சி தான். 1991ல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் அதிமுக கூட்டணியில் குமரி அனந்தனின் கா.கா.தே.க இடம் பெற்று 7 சட்டமன்ற உறுப்பினர்களைப் பெற்றது. ஒரு மேல் சபை உறுப்பினர் பதவியும் கிடைத்தது.

காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சி எர்னஸ்ட் பால், நாஞ்சில் ராஜேந்திரன் போன்ற இளைஞர்களை வளர்த்துவிட்டது. கட்சிக்காக "விடிவெள்ளி" எனும் பத்திரிகையை நடத்தி சொத்துக்களை இழந்த தெள்ளூர் தருமராசன் போன்ற நல்லவர்களை நினைவில் கொள்ளவேண்டும்.

இதற்கு முன்பு 1990-ம் ஆண்டு கோவை மாவட்டத்தைப் பிரித்து ஈரோடு பெரியார் மாவட்டத்தை உருவாக்கினார் எம்.ஜி.ஆர்.இதற்காக ஈரோட்டில் ஒரு பிரம்மாண்ட மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் எம்.கல்யாணசுந்தரம், மா.பொ.சி.கருப்பையா மூப்பனார் போன்ற முக்கிய தலைவர்கள் பங்கேற்றனர். எம்.ஜி.ஆர் மேடையில் இருந்தார். இந்த மாநாட்டுக்கு சற்று தாமதமாகக் குமரி அனந்தன் வந்து சேர்ந்தார். குமரி அனந்தன் மேடையில் ஏறியதும் எம்.ஜி.ஆர் எழுந்து வந்து கை கொடுத்து குமரி அனந்தனை வரவேற்றார். அழைத்துச் சென்று தன் அருகில் அமர வைத்துக் கொண்டார். வேறு எவருக்கும் கிடைக்காத முக்கியத்துவம் குமரி அனந்தனுக்கு. அடுத்து நடந்தது இன்னொரு வியப்பு.

பெரியார் நூற்றாண்டு விழாவில் பங்கேற்க வந்து மேடையில் அமர்ந்திருந்த மா.பொ.சி, எம்.கல்யாணசுந்தரம் உள்பட யாரும் மைக் முன்பு வந்து பேசவே முடியவில்லை. அவர்கள் பேசத்துவங்கிய சில நிமிடங்களிலேயே "நிறுத்து, எம்.ஜி.ஆர் பேச வேண்டும் என்று பார்வையாளர்கள் கூச்சலிட்டனர். எம்.ஜி.ஆரால் கூட அமைதிப்படுத்த முடியவில்லை. இந்தச் சூழலில் குமரி அனந்தன் பேச அழைக்கப்பட்டார்.



மேடையில் எழுந்து ஒலி பெருக்கி அருகே குமரி அனந்தன் வரும்போதே கைதட்டல். அவர் ஏறத்தாழ 30 நிமிடங்கள் பேசினார். கூட்டத்தில் சிறு அசைவு கூட இல்லாமல் அமைதி. இடையிடையே கைதட்டல்கள், உற்சாகம். அங்கே குமரி அனந்தனுக்கு நாயகன் அந்தஸ்து. நானும் நிருபராக அங்கு இருந்தேன்.

இறுதியாக ஈரோடு மாவட்டம் எனும் அறிவிப்பை வெளியிட்டு முதல்வர் எம்.ஜி.ஆர் பேசினார். அரசியல் அணி குறித்துப் பேசும் போது குமரி அனந்தன் போன்ற நல்லவர் இப்போது எங்களுடன் என்ற பெருமையுடன் குறிப்பிட்டார். இது அவரது வாழ்நாளின் மிக உயரிய சான்றிதழ். இந்தச் செய்திகள் தினமலரில் மட்டும் மறுநாள் காலை முதல் பக்கத் தலைப்பு செய்தி. இலக்கியச் செல்வர் குமரி அனந்தனின் அரசியல் ஆளுமை பிரகாசித்த தருணம் அது.

சேலம் அரசு கலைக் கல்லூரியில் இன்னொரு சம்பவம். நினைவுக்கு வருகிறது. 1973காலம். குமரி அனந்தை சேலம் அரசு கல்லூரிக்குப் பேச அழைத்து இருந்தனர். அங்கே மாணவர்களிடையே ஒரு கேவலமான கலாச்சாரம். யார் பேச வந்தாலும் அங்கே இறுதி வரை பேச முடியாது. இடையிடையே மாணவர்கள் கூச்சல் போடுவார்கள். ஊளையிடுவார்கள். புகழ் பெற்ற எழுத்தாளர் ஜெயகாந்தன் கூட அங்கே பேச முடியவில்லை.

இந்த சேலம் அரசு கல்லூரியில் குமரி அனந்தன் பேச வந்தார். மேடையில் தோன்றிய அவர் பேசத் துவங்கியதும் கூச்சல் அரம்பித்தது. "இப்படி பல மேடைகளைப் பார்த்தவன் நான். கத்திப் பாருங்கள்., சில நிமிடங்கள் என் பேச்சைக் கேட்டுப் பாருங்கள். பிறகு தேவைப்பட்டால் கூச்சலிடலாம். நான் உங்களைச் சமாளிக்கும் துணிவுடன் தான் வந்திருக்கிறேன். என்னோடு எனது ஆதரவாளர்களும் இங்கே வந்திருக்கிறார்கள்" என எச்சரிக்கும் வகையில் பேசிவிட்டு, "நான் மனிதனைத் தேடுகிறேன்" எனும் தலைப்பில் அழகான உரையைத் தொடர்ந்தார். கூட்டத்தில் அமைதி. சிறிது நேரம் கேட்ட பின் மாணவர்கள் கைத்தட்டத் துவங்கினார்கள். முழுவதும் பேசி முடித்துவிட்டு விடை பெற்றார் குமரி அனந்தன்.

-தொடரும்.....


# S.பால்பாண்டியன் ஹார்டுவேர்ஸ்
# S.பால்பாண்டியன் டிப்போ



சிமெண்ட், செங்கல், ஜல்லி, கம்பி, பெயிண்ட் வகைகள், பி.வி.சி.பைப் வகைகள் கடப்பாக்கல், ஸிங்க் முதலியன மொத்தமாகவும் சில்லரையாகவும், தரமாகவும் கிடைக்கும்.



**உரிமையாளர்:** Lion S.பால்பாண்டியன்

20, புகழேந்தி தெரு, எம்.ஜி.ஆர்.நகர், சென்னை-78. போன்:24713885, 23716122.

# அருமை அண்ணாச்சி



## கலைமாமணி டாக்டர் வி.ஜி.சந்தோசம் தலைவர் வி.ஜி.பி.குழுமம்.

காற்றினிலே வரும் கீதம்

அன்புள்ள வசந்தனே.

பட்ட காலிலேபடும் என்பது போல் ஏற்கெனவே ஒரு முறை சொந்தக்காரர் ஒருவரால் ஏமாற்றப்பட்ட நாங்கள் மீண்டும் இரண்டாம் முறையாக வேறு ஒருவரால் ஏமாற்றப்பட்டோம். இம்முறை நாங்கள் அடைந்த ஏமாற்றம் எங்களைப் பெரிதும் சங்கடத்திற்குள்ளாக்கியது. காரணம், சென்ற முறை தையல் மிஷின் வாங்கக் கொடுத்த பணத்தைத் தான் ஒருவர் ஏமாற்றினார். ஆனால் இந்தமுறை ஒரு நல்ல காரியத்திற்குப்பயன்பட வேண்டும் என்று நாளும் நினைத்து சேர்த்தோம். அந்த காரியம் என்னவென்று கேட்கிறாயா?

அருமை அக்காள் மரியம்மாளின் திருமணம் தான் அது. அக்காளுக்கு அப்போது தான் மாப்பிள்ளை பார்த்துக்கொண்டிருந்தோம், நல்ல விதமாக திருமணத்தை நடத்தவேண்டும் என்பதற்காக தினமும் 2 ரூபாய் சீட்டு கட்டிவந்தோம், அப்படிக் கட்டிய பணம் ரூ.900/- வரை சேர்ந்தது. மிகுந்த மகிழ்ச்சியுன் இருந்த எங்கள் மனங்களில் வேதனைத் தீயை வீசிவிட்டு, அந்தச் சீட்டை நடத்திய கம்பெனிக்காரர்கள் கம்பெனியை மூடிவிட்டு எங்கோ சென்றுவிட்டார்கள். அருமைச் சகோதரியின் திருமணத்திற்காகச் சேமித்த பணம் போய்விட்டதே என்று எண்ணி அண்ணாச்சி பெரிதும் வருந்தினார்கள். வீட்டிலிருந்த எல்லோருமே மிகுந்த வேதனைக்கு ஆளானோம்.

எங்கள் வருத்தத்தையும் வேதனையையும் அதிகப்படுத்தும் விதத்தில் அருமை அப்பா அவர்கள் அந்தச் சமயத்தில் எங்களிடம் சொல்லாமலேயே மலேசியாவிற்குப் பயணம் ஆகிவிட்டார்கள். பெண் திருமணத்திற்காகச் சேமித்த பணம் பயன்படாமல் போய்விட்டதே என்ற கவலை தான் அப்பாவின் திடீர் பயணத்திற்குக் காரணம். கப்பலிலிருந்தபடியே அம்மாவிற்குக் கடிதம் எழுதிவிட்டுச் சென்றார் அப்பா. பெண்ணின் திருமணத்திற்குப் பணம் சேமித்து வரவே தான் மலேசியா செல்வதாகவும் அதனால், தான் செல்வதை நினைத்து யாரும் கவலைப்பட வேண்டாம் என்றும் அம்மாவிற்கு அப்பா எழுதியிருந்தார்கள்.

அப்பா எழுதிய கடிதம் ஒரு விதத்தில் ஆறு தலாக இருந்தாலும், மீண்டும் எங்களைப் பிரிந்து சென்றது எங்களுக்கு மிகுந்த வேதனையாகவே இருந்தது. இருந்தாலும் வேதனையை வெளிக்காட்டிக் கொள்ளாமல் எங்கள் கடமைகளைச் செய்ய முற்பட்டோம். அருமை அண்ணாச்சிக்குத்தான் இப்போது அதில் பொறுப்பும் கவலையும் சேர்ந்தன. அப்பா அருகில் இருப்பதால் சிறிது ஆறுதலாக நினைத்த அண்ணாச்சி இப்போது குடும்பத்தலைவராக அவரே மீண்டும் ஆக நேர்ந்ததை நினைத்து கடமையுணர்வுடன் பணிகளைச் செய்ய முற்பட்டார்.



இந்தச் சமயத்தில் சைதாப்பேட்டை ஜீனிஸ் ரோட்டில் வேறு ஓர் கடையையும் அருமை அண்ணாச்சி தோற்றுவித்தார். என்ன, பிற்காலத்தில் தான் பல தொழில்களைத் தொடங்கினார் என்றால், வறுமையுடன் போராடிய அந்த நாளிலும் பல கடைகளைத் தோற்றுவித்தாரா என்று நீ ஆச்சரியப்படலாம். அது தான் அருமை அண்ணாச்சியின் தனித் தன்மை. எப்போதும் எதையாவது சாதிக்கவேண்டும். புதிது புதிதாக எதையாவது தொடங்க வேண்டும் என்ற ஆர்வமும் துடிப்பும் இளமையில் இருந்தே அருமை அண்ணாச்சியிடம் காணப்பட்டது.

பிற்காலத்தில், அவ்வப்போது பல புதிய திட்டங்களை அவர் அறிமுகப்படுத்துவதை நினைத்து நானே ஆச்சரியப்பட்டதுண்டு. இப்படிப் பல திட்டங்களைத் தொடங்கினால் எப்படி எல்லாவற்றையும் முடிப்பது என்று நான் அவரிடம் கேட்பேன். அப்போது அருமை அண்ணாச்சி என்ன சொல்வார் தெரியுமா? “தொடங்கினால் தானடா முடிக்க முடியும்” என்று. அந்த வார்த்தைகளுக்குரிய அர்த்தத்தை இப்போது நினைத்து நான் வியப்படைகிறேன். இப்படிப்பட்ட உணர்வு அண்ணாச்சியிடம் இளமையிலேயே காணப்பட்டதால் தான் புதிய கடை ஒன்றும் உதயமானது. அது என்ன கடை என்று கேட்கிறாயா?

“இண்டியன் ஃபாரீன் நியூஸ் ஏஜென்ஸீஸ், என்பது தான் அந்தக் கடையின் பெயர். பெயரைப் பார்த்தவுடன் என்னமோ ஏதோவென்று மலைத்துவிடாதே. நம் நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் வெளியாகும் பத்திரிகைகளை வாங்கி விற்கும் கடை தான் அது. எதைச் செய்தாலும் சிறப்பாகச் செய்யவிரும்பும் அருமை அண்ணாச்சி கடையின் பெயரையும் பெருமையாக வைத்தார். தினத்தந்தி, பேசும்படம், குண்டூசி முதலிய தமிழ்ப் பத்திரிகைககளையும் ஹிந்து முதலிய ஆங்கிலப் பத்திரிகைகளையும் நாங்கள் ஏஜெண்ட் எடுத்து அக்கடையில் விற்பனை செய்யத் தொடங்கினோம்.

- தொடரும்....

**2வருடங்களுக்கு பிறகு மீண்டும் புது பொலிவுடன் நவம்பர் மாதம் முதல் ஆரம்பம். தொடர்புக்கு: 9840948727.**

# அமிர்தகனி
# திருமண தகவல் நிலையம்

**நாடார் சமூகத்திற்கு மட்டும்**

**இந்து நாடார், சி.எஸ்.ஐ, ஆர்.சி, மறுமணம், மாற்றுத்திறனாளி, உடல் ஊனமுற்றோர் உட்பட அனைவருக்கும்**

**18,13வது குறுக்கு தெரு, முத்தமிழ் நகர், கள்ளிக்குப்பம், அம்பத்தூர், சென்னை-53.**

# பசுமை நிறைந்த நினைவுகள்(அமெரிக்க பயணம்)

## கல்வி

-தென்னக சான்றோர் சங்க உறுப்பினர்.
எம்.கோவிந்தராஜ். செல்:9384605133



03-05-2011

நாங்கள் தங்கியிருந்த அடுக்குமாடி வீட்டிற்குப் பின்புறம் ரோடு, அதனையொட்டி, மறுபக்கத்தில் ஒரு ஆரம்பப் பாடசாலை உள்ளது. இதன் பெயர் Robert F.M.C. Dermot Elementary School ஆகும். இது 111 USA BLUD என்ற விலாசத்தில் இருக்கிறது.

காலை 8 மணிக்கு மணி அடிக்கும். மாணவர்களைப் பெற்றோர்கள் கார்களில் கொண்டு விடுகிறார்கள். பிறகு மாலை 3 மணிக்கு பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைக் காரில் வந்து கூட்டிச் செல்லுகிறார்கள்.

தமிழ்நாட்டைப் போன்று, சீருடை அங்கு இல்லை. புத்தகச் சுமை இல்லை. இரண்டு அல்லது மூன்று புத்தகங்களைத்தான் கொண்டு செல்கின்றனர். சந்தோஷமாகக் குழந்தைகள் சிரித்துக் கொண்டே பள்ளிக்கூடத்திற்குள் செல்வதைப் பார்த்தேன்.

"இந்த பள்ளி எவ்வாறு செயல்படுகிறது? ஆசிரியர்கள் எவ்வாறு சொல்லித் தருகிறார்கள்? அவர்களுடைய பாடத் திட்டம் என்ன?" என்பதைப் பற்றி அறிய ஆசைப்பட்டேன்.

முதலில், பள்ளியின் பார்வையாளருக்கு ஒதுக்கப்பட்ட அலுவலகத்திற்குச் சென்றேன். பெஞ்சில் உட்கார்ந்தேன். பெற்றோர்கள் குழந்தைகளைப் பள்ளியில் விட்டுவிட்டுச் சென்றனர். எனக்கு அங்குள்ளவர்களுடன் பேசத் தயக்கமாக இருந்தது. சிலர் என்னிடம், "போலீஸ்காரர் எங்கும் வருவார்கள். சந்தேகம் ஏற்பட்டால் காவல் நிலையத்திற்குக் கூட்டிக்கொண்டு போய் விசாரிப்பார்கள். எனவே, உங்களுடைய நடவடிக்கை சந்தேகப்படும்படியாக இருக்கக் கூடாது" என்றார்கள். யாரும் என்னிடத்தில் எதுவும் கேட்கவில்லை. வீட்டிற்குத் திரும்பினேன்.

வீட்டிலிருந்து ஒரு விண்ணப்பம் எழுதினேன். அதில் நான் ஒரு இந்தியன் என்றும், முதுகலைப் பட்டதாரி. அத்துடன் கல்வியியலில் பட்டமும் பெற்றிருக்கிறேன். நான் கல்வியாளர் என்றும், நான் சுற்றுலா விசாவில் வந்துள்ளேன் என்றும் குறிப்பிட்டு, எனது விசா எண் மற்றும் தற்சமயம் குடியிருக்கும் அடுக்குமாடி விலாசம், எனது மகனின் கைப்பேசி எண் எல்லாம் குறிப்பிட்டு உங்கள் பள்ளி எவ்வாறு செயல்படுகிறது? ஆசிரியர், மாணவர்களுக்கு எவ்வாறு சொல்லித் தருகிறார்கள் என்பன பற்றி அறிய விரும்புகிறேன் என்றும், எனக்கு உங்களது பள்ளியின் செயல்பாட்டை காண்பிக்குமாறு கேட்டு அந்தப் பள்ளியின் தலைமையாசிரியருக்குக் கடிதம் எழுதி வைத்திருந்தேன்.

அடுத்த நாள், சற்று தைரியத்தை வரவழைத்துக் கொண்டு பள்ளி அலுவலகத்திற்குச் சென்றேன். பள்ளி அலுவலகத்தின் முன்னால் 30 வயது மதிக்கத்தகுந்த ஒரு பெண் உட்கார்ந்திருந்தாள். அதற்கு 3 அடி தூரத்தில் ஒருவரும், கடைசியில் மற்றுமொரு பெண்ணும் உட்கார்த்திருந்தனர்.

முதலில் உட்கார்ந்த பெண் ஆப்பிரிக்க நாட்டைச் சார்ந்தவள். மீதி இருவருள் ஒருவர் மெக்சிக்கோ நாட்டைச் சார்ந்தவர் மற்றும் ஒருவர் அமெரிக்கா.

சற்று தயக்கத்துடன் நின்று கொண்டிருந்தேன். முதலில் உட்கார்ந்திருந்த பெண் வந்து, What do you want? என்று கேட்டாள். "நான் இந்தியன். உங்கள் பள்ளியின் செயல்பாட்டை அறிய விரும்புகிறேன். என்னிடம், 'டூரிஸ்ட் விசா' இருக்கிறது" என்றேன்.

நான் சொல்வதைக் கேட்டு, அப்படியே நின்றாள். 'நான் சொல்வது அவளுக்குப் புரியவில்லை' என்று நினைத்துத் திரும்பவும் சொன்னதையே சொல்லி, என் கையிலிருந்த விண்ணப்பத்தை அவளிடம் கொடுத்தேன்.

நான் கொடுத்த விண்ணப்பத்தைப் படித்துப் பார்த்துக் கொண்டு, ஒரு புன்முறுவல் செய்து கொண்டு, "எங்களால் முடியாது, எங்களுடைய மேல் அதிகாரிகளிடமிருந்து உத்தரவு பெற்றுத்தான் உங்களைச் சுற்றிக் காண்பிக்க முடியும்" என்று சொல்லிவிட்டு, "உங்களைத் தொலைபேசியில் தொடர்பு கொள்கிறேன்" என்று பதில் சொன்னாள். எனது கைப்பேசி எண்ணை குறித்துக் கொண்டார்.

நான், "தொலைபேசியில் தகவல் கொடுப்பார்கள்" என்று எதிர்பார்த்தேன். எனது மனைவியிடமும் "பள்ளியிலிருந்து தகவல் வரும்" என்று சொல்லி வைத்திருந்தேன்.

ஒரு வாரமாகியும் எந்தத் தகவலும் வரவில்லை. எனவே, மீண்டும் ஒருநாள், சரியாக நண்பகல் 1 மணிக்குப் பள்ளிக்குச் சென்றேன். அங்கு நான் கடிதம் கொடுத்த நபர் இல்லை. மற்றொரு அமெரிக்கப் பெண் நின்று கொண்டு, என்னை விசாரித்தாள். "நான் சென்ற வாரம் வந்திருந்தேன். விண்ணப்பம் ஒன்று கொடுத்துள்ளேன். உங்கள் பள்ளி மாணவர்களுக்குச் சொல்லித் தரும் முறையைப் பார்க்க வேண்டும்" என்று குறிப்பிட்டேன்.

இவளும் வெள்ளை நிறமாக இருந்தாள். கால்சட்டை அணிந்திருந்தாள். வெள்ளை கைப் பனியன் அணிந்திருந்தாள். ஆண்களைப் போல், கிராப் வெட்டியிருந்தாள். அவள் தான் தலைமை ஆசிரியை. என்னை சற்று உட்காரும்படி சொல்லிவிட்டு மற்றொரு அறைக்குச் சென்றாள். கிட்டத்தட்ட 20 நிமிடத்திற்குள் திரும்பி வந்து, "உங்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்ட பின்பு வந்தால் போதும்" என்று சொல்லி தற்சமயம் எங்களுக்கு தேர்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே, தேர்வு முடிந்ததும் என்னைத் தொலைபேசியில் தொடர்பு கொள்வதாகக் குறிப்பிட்டு என்னைத் திருப்பி அனுப்பிவிட்டார்.

"இன்று பள்ளியைப் பார்த்துவிடலாம்" என்ற ஆசையில் புறப்பட்டேன். மஞ்சள் நிற சார்ட் நன்றாக அயர்ன் பண்ணி, சிமெண்ட் கலரில் ஒரு பேண்ட்டும் அணிந்திருந்தேன். கண்ணாடி முன் நின்று எனது தலைமுடியைச் சீர் செய்து கொண்டேன். பிறகு, சென்ட்டும் அடித்துக் கொண்டேன். நல்ல பான்ட்ஸ் பவுடரும் முகத்தில் போட்டுக் கொண்டு, கையில் ஒரு துண்டு காகிதமும், பேனாவும், பாஸ்போர்ட், விசா நகல்களை ஒரு பேண்ட் பாக்கெட்டுக்குள்ளும் அடுத்த பாக்கெட்டுக்குள் கைக்குட்டை, கைப்பேசியையும் வைத்திருந்தேன். ஆனால், பள்ளியின் செயல்பாட்டை அறிய முடியவில்லை. இந்த முறையும் ஏமாற்றத்துடன் திரும்பி வந்தேன்.

வழியில் அந்தப் பள்ளியின் காவலாளியாக வேலை செய்யும், மெக்சிக்கன் ஒருவனுடன் பேசுவதற்கு வாய்ப்புக் கிடைத்தது. அவனுடன் இது சம்பந்தமாகப் பேசினேன். ஆனால், அவர் "தலைமை அலுவலகத்திலிருந்து அனுமதி வரவேண்டும். வந்தால்தான், உங்களை அனுப்புவார்கள்" என்றான்.

சோர்ந்த முகத்தோடு, வீட்டிற்குப் புறப்பட்டேன். வழியில் அந்தப் பள்ளியின் நோட்டீஸ் போர்டை உற்று நோக்கினேன். திங்கள் முதல் வெள்ளி வரை தான் கால அட்டவணை போட்டிருக்கிறார்கள்.

பிறகு, அரசு விடுமுறை நாட்கள் என்று குறிப்பிட்டு சில நாட்களையும் போட்டிருக்கிறார்கள். எனக்கு ஞாபகத்தில் இருப்பது இந்த மூன்று நாட்கள் தான். அக்டோபர் 10 கொலம்பஸ் நாள், ஜனவரி 16- மார்ட்டின் லூதர் நாள், மே28- தியாகிகள் நினைவு நாள்.

சனி மற்றும் ஞாயிறு ஆகிய இரண்டு நாட்களையும் இருட்டடிப்பு செய்திருக்கிறார்கள். இந்த இரண்டு நாட்களிலும் வகுப்புகள் நடக்காது. சென்னையில் கனத்த மழை பெய்தால் விடுமுறை விடுவார்கள். வேறு ஏதாவது காரணத்திற்காக விடுமுறை விட்டாலும், அதற்குப் பதிலாக அதனையடுத்து வரும் சனிக்கிழமை பள்ளி இயங்குமென்ற அறிவிப்பையும் கொடுத்து விடுவார்கள். ஆனால் இங்கு அப்படி கிடையாது.

சிறார்கள் வரிசையாக செல்கிறார்கள். இந்தச் சிறுவயதில் ஆசிரியர்கள் சொல்லிக் கொடுத்த, "வரிசை முறையை" அவர்கள் வாழ்நாள் முழுவதும் கடைபிடிக்கிறார்கள்.

கிட்டத்தட்ட 10 நாட்கள் காத்திருந்தேன். பள்ளி நிர்வாகத்திடமிருந்து எந்தப் பதிலுமில்லை. எனவே, 03.05.2011 அன்று காலை 10.30மணிக்கு "மெட்டி ஒலி, "மகள்" சீரியலும் பார்த்து, காபி அருந்திவிட்டு, "இன்று எப்படியும் பள்ளிக்குச் சென்று பார்வையிடவேண்டும்" என்ற எண்ணத்தோடு மறுபடியும் சென்றேன்.

- தொடரும்..........

# ஸ்ரீ பாலாஜி
# நாடார் திருமண தகவல் மையம்



நாடார் சமுதாயத்தின் கைராசியான திருமண தகவல் மையம் எங்களிடம் குமரி மாவட்டம், நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர் மற்றும் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நாடார்களுக்கும் (இந்து, கிறிஸ்தவர்) வட்டார பழக்கத்திற்கேற்ப வரன் பார்த்து தரப்படும்.



**ஒருமுறை பதிவு கட்டணம் ரூபாய்-3000 மட்டும்.**
**நகை ரொக்கத்திற்கு கமிஷன் கிடையாது.**

**முகவரி: எண்:389,** T.H.Road, (மெட்ரோ பில்லர் எண்-182), **திருவொற்றியூர், சென்னை-19.**

**நிறுவனர்- R.சத்தியவான், இருளப்பபுரம், நாகர்கோவில்- 9444247847.**

**தொடர்பு எண்: 044-43508080, 7299989798, 8056299454, 7092890830.**



## ஸ்ரீ சரவணா ஸ்டோர்ஸ்

**சூப்பர் மார்க்கெட்**

**ஈகை வியாபாரிகள் நல சங்கம் வி.சரவணராஜ் தலைவர்**
**செல்9445171819, 044-22253484.**

2/33, அம்பாள் நகர் மெயின் ரோடு, ஈக்காட்டுத்தாங்கல், சென்னை-32.





## REVATHI LABEL PRINTERS

**R.DHEVI 98414 41111, 99415 51111**

**Barcode Sticker, Multi Colour Sticker, Trolley Tags, Thermal Ribbons, Barcode Printers, Consumar Lables & Software Support.**

Revathi label printers, Taj Bhavan, H-3/340, TNHB A Road, Phase-3, Sholinganallur, Chennai-119. 9841441111.Emaill: dhevi_rlp@yahoo.co.in





**செல்:9444484977, 9962454977, 044-25980239.**

## ஸ்ரீ மகா கணபதி ஜோதிட நிலையம்



ஜோதிடர்.த.பெ.சுந்தர் நாடார்

ப.எண்:8, பு.எண்:15, நல்லப்பவாத்தியார் தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை-600 021.

**ஜாதகம் திருமண பொருத்தம் வாஸ்து பார்க்கப்படும்.** நேரம்:காலை8.00மணி முதல் மதியம்2.00 மணி வரை

# நாடார் நவீன சுயம் வரம்

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:Dr.தனலட்சுமி, சொந்தஊர்:தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-21.1.1995, உயரம்-5.2, நிறம்-சிவப்பு, ராசி-சிம்மம், நட்சத்திரம்-உத்திரம், படிப்பு-MBBS., Primany Health Centre, Kanchipuram, மாதவருமானம்-90,000 பெறும் இந்த மணமகளுக்கு, ஏற்ற நல்ல வசதியான, நல்ல குணமுள்ள, டாக்டர், இஞ்சினியர் அல்லது தொழில்புரியும் மணமகன் தேவை.

| | | | |
|---|---|---|---|
| லக் | கேது | | |
| சனி | இராசி | | |
| சூரிபு மாந் | | | செவ் சந் |
| | வியா சுக் | இராகு | |

| | | | |
|---|---|---|---|
| லக் சூரி | செ | புத | |
| ராகு | அம்சம் | | |
| | | | கேது |
| சனிசந் சுக் | வியா | | |

தொடர்புக்கு:9841414849, 9841415699.
File No:M-317-G.

## இந்து நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்:கள்ளிகுளம், திருநெல்வேலி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-31.8.1999, நிறம்-சிவப்பு, உயரம்-150செ.மீ, ராசி-மேஷம், நட்சத்திரம்-அசுபதி 3ம் பாதம், படிப்பு-B.E., (CSE), வேலை-சாப்ட்வேர் (சிறுசேரி), மாதவருமானம்-25,000 பெறும் இந்த மணமகளுக்கு, நன்கு படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை.8754317180, 9360032452, 9360032452. File No:M-254-G.

| | | | |
|---|---|---|---|
| | சந் விசனி | | |
| | இராசி | | ராகு |
| கேது | | | புகுரு சுக் |
| லக் | செவ் | | |

| | | | |
|---|---|---|---|
| | | சுக் கேது | சந் |
| | அம்சம் | | சூபுத வியா |
| | | | சனி |
| | ராகு | | லக் செவ் |

## இந்து நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்: ஆனைகுடி, திசையன்விளை அருகில் நெல்லை மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-14.7.1997, நேரம்:10:43pm., உயரம்-5.5, நிறம்-சிவப்பு, ராசி-துலாம், நட்சத்திரம்-விசாகம், படிப்பு-BCA., இந்த மணமகளுக்கு, டிகரி படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. 9841171411, 9087669555.File No:M-306-G.

| | | | |
|---|---|---|---|
| லக் சனி | | | சூரி |
| கேது | இராசி | | சுக் புத |
| வியா | | | ராகு |
| | | சந் | செவ் |

| | | | |
|---|---|---|---|
| | சந் | | சூரிகே செவ் |
| சுக் | அம்சம் | | லக் |
| புத | | | |
| ராகு சனி | | | வியா |

## இந்து நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்:திருச்செந்தூர் மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-19.9.1991, நிறம்-மாநிறம், உயரம்-5.4, ராசி-மகரம், நட்சத்திரம்-திருவோணம், படிப்பு-B.E., (ECE), Private Company, இந்த மணமகளுக்கு, நன்கு படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. 9600701927, 7358260567. File No:M-193-G.

| | | | |
|---|---|---|---|
| | | லக் | கே |
| | இராசி | | |
| சந் | | | சுக்பு குரு |
| சனி ராகு | | | சூரி செவ் |

| | | | |
|---|---|---|---|
| லக் | கேசந் சுக் | | குரு செவ் |
| | | | |
| சூரி | | | |
| சனி புத | | ராகு | |

## இந்து நாடார் மணமகன் தேவை.

பெயர்:R.கார்த்திகா, சொந்தஊர்:தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-5.11.1996, நிறம்-மாநிறம், ராசி-சிம்மம், நட்சத்திரம்-பூரம், படிப்பு-BCA., I.T., வேலை இந்த மணமகளுக்கு, நன்கு படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. 9444436383, 9840932494 File No:M-323-G.

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| சனி | இராசி | | லக் |
| | | | செவ் சந் |
| வியா | | சூரி புத | சுக் இரா |

| | | | |
|---|---|---|---|
| சூரி | இரா | சுக் | சனி செபுத |
| | அம்சம் | | |
| லக் | | | சந் |
| | | வியா கேது | |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:அஜிதா. சொந்தஊர்-நாதன்கிணறு, திருச்செந்தூர் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை-42, பிறந்ததேதி-24.6.1995, உயரம்-5.6அடி, நிறம்-மாநிறம், ராசி-மேஷம், நட்சத்திரம்-கார்த்திகை 1ஆம் பாதம், படிப்பு-B.Arch., M.Arch., வேலை-M.Arch., Management, Chennai, இந்த மணமகளுக்கு, நன்கு படித்து சென்னையில் பணிபுரியும், நல்ல வருமானம் பெறும் மணமகன் தேவை. தொடர்புக்கு:9444452749, 9444317372.9790805050 File No:P-519-G.

| | | | |
|---|---|---|---|
| | சந் கே | புத சுக் | சூரி |
| சனி | இராசி | | |
| | | | செவ் |
| | குரு | ராகு | லக் |

| | | | |
|---|---|---|---|
| | சனி | | கே |
| | அம்சம் | | புத சுக் |
| | | | |
| சூசந் ராகு | குரு | செவ் | லக் |

## இந்து நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்-காரிக்கோவில், குண்டல், திசையன்விளை அருகில், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-30.9.1995, வயது-27, நிறம்-மாநிறம், ராசி-விருச்சிகம், நட்சத்திரம்-கேட்டை, உயரம்-5.3, படிப்பு-M.E, வேலை-Assistant Professor., மாதவருமானம்-30,000 பெறும் இந்த மணமகளுக்கு நல்ல குடும்பம், நன்கு படித்த நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. 9445307067, 9445426581.File No:M-154-G

| | | | |
|---|---|---|---|
| | கேது | லக் | |
| சனி | இராசி | | |
| | | | |
| | சந் வியா | செவ் ராகு | சூபு சுக் |

| | | | |
|---|---|---|---|
| லக் சந் | சூசெ கேது | | |
| சனி | அம்சம் | | சுக் |
| புத | | | |
| வியா | | ராகு | |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:பார்வதி, சொந்தஊர்:ஆறுமுகநேரி, (மேலவீடு), தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, நிறம்-சிவப்பு, பிறந்ததேதி-4.6.2000, நேரம்:பகல்:1.07, உயரம்-5.2, ராசி-மிதுனம், நட்சத்திரம்-திருவாதிரை, படிப்பு-M.Sc., Maths., இந்த மணமகளுக்கு, நன்கு படித்து நல்ல வேலையிலுள்ள தூத்துக்குடி, நெல்லை மாவட்ட வரன்கள் தொடர்புக்கு:9841787884, File No: M-281-G.

| | | | |
|---|---|---|---|
| | சனி | சூசெ விசுக் | சந் புத |
| | இராசி | | ராகு |
| கேது | | | |
| | | | லக் |

| | | | |
|---|---|---|---|
| | | | சுக் |
| சந் | அம்சம் | | சூரி ராகு |
| புவியா கேலக் | | | |
| | சனி | | செவ் |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:P.சுதாஸ்ரீ, சொந்தஊர்:பண்டாரபுரம், சாத்தான்குளம், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, நிறம்-சிவப்பு, பிறந்ததேதி-27.01.1996, வயது-27, உயரம்-5.5, ராசி-மேஷம், நட்சத்திரம்-அசுவினி, படிப்பு-MBA., I.T., இந்த மணமகளுக்கு, வேலையிலுள்ள அல்லது சொந்ததொழில் செய்யும் மணமகன் தேவை. 9444497083, 6369211606, 9444497083., File No: M-324-G

| | | | |
|---|---|---|---|
| கேது | சந் | | |
| சுக்சனி மாந் | இராசி | | |
| லக்சூ செவ் | | | |
| புத குரு | | | ராகு |

| | | | |
|---|---|---|---|
| சுக் சனி | சூரி | சந் | |
| கேது | அம்சம் | | லக்கே குரு |
| | | | ராகு |
| | மாந் | | புத |

## இந்து நாடார் மணமகன்

பெயர்:P.விதயாஷாமிலி,சொந்தஊர்:நகனை அருகில், மெய்ஞ்ஞானபுரம், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை-94, நிறம்-சிவப்பு, பிறந்ததேதி-14.6.1991, உயரம்-5.2, ராசி-கடகம், நட்சத்திரம்-புனர்பூசம், படிப்பு-B.E., Computer Science., MBA வேலை-I.T., மாதவருமானம்-50,000 பெறும் இந்த மணமகளுக்கு, நன்கு படித்த சென்னையில் அல்லது பெங்களூரில் 80,000த்திற்கும் மேல் வருமானம் பெறும் ஐ.டி.கம்பெனியில் உள்ள மணமகன் தேவை. 9962924834, 9940074016. File No: M-67-G.

| | | | |
|---|---|---|---|
| மா | | சுக் புத | கேது |
| | இராசி | | சந்சு செவி |
| சனி லக் | | | |
| ராகு | | | |

| | | | |
|---|---|---|---|
| | சனி | | கே |
| | அம்சம் | | சந் லக் |
| | | | புத |
| சந்வி ராமா | சுக் | | சூரி |

# இலவச திருமணத் தகவல்

தொடர்புக்கு: 30, தேரடி தெரு,
சைதாப்பேட்டை, சென்னை-15.
போன்:23811087.

## மணப்பெண் பகுதி (பெண்) இந்திய நாடார் முரசு இலவச சேவை

இந்து நாடார் பகுதி

| எண் | ஊர் | வயது | கல்வித்தகுதி | தேவையான தகுதி | உயரம் | செல்நம்பர் | இராசி-நட்சத்திரம் | விவரம் | பெண் உரிமை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | ஆறுமுகநேரி | 27 | B.Tech | படித்துவேலை | 5.3 | 7667665855 | கன்னி-உத்திரம்2 | M41 | 70+3 |
| 2. | திருநெல்வேலி | 33 | M A | படித்துவேலை | 5.5 | 9022963660 | கடகம்-ஆயில்யம்3 | M43 | நேரில் |
| 3. | ஆறுமுகநேரி | 38 | B.Sc | படித்துவேலை | 5.2 | 8190848485 | கடகம்-பூசம் | M44 | மறுமணம் |
| 4 | திருச்செந்தூர் | 24 | B.Sc | படித்துவேலை/தொழில் | 5.3 | 9841391835 | கடகம்-ஆயில்யம் | M45 | 30பவுன் |
| 5 | தூத்துக்குடி | 28 | MCA | படித்துவேலை/தொழில் | 5.4 | 8428248243 | மேஷம்-அஸ்வினி2 | M47 | நேரில் |
| 6 | தூத்துக்குடி | 29 | B.Com | படித்துவேலை/தொழில் | 5.2 | 9840768977 | மீனம்-புரட்டாதி | M48 | 40பவுன் |
| 7 | உடையார்குளம் | 23 | B.Sc,MCA | படித்துவேலை | 5.2 | 9176850192 | மகம்-சிம்மம் | M49 | 100பவுன் |
| 8 | தூத்துக்குடி | 26 | B.Tech | படித்துநல்லவேலை | 5.11 | 9751238974 | மகரம்-திருவோணம் | M50 | நேரில் |
| 9 | விருதுநகர் | 27 | B.E | ஐ.டி.கம்பெனிவேலை | 5.2 | 9840593477 | கடகம்-பூசம்3 | M51 | 30பவுன் |
| 10 | தூத்துக்குடி | 33 | B.E | படித்துவேலை/தொழில் | 5.3 | 9677059837 | ரிஷபம்-மிருகசீரிஷம் | M54 | 40பவுன் |
| 11 | தூத்துக்குடி | 27 | B.E | நல்லபடித்தவேலை | 5.4 | 9790819077 | மகரம்-அவிட்டம் | M55 | நேரில் |
| 12 | தூத்துக்குடி | 28 | B.E | படித்துவேலை/தொழில் | 5.2 | 7200366727 | ரிஷபம்-மிருகசீரிடம் | M56 | 20பவுன் |
| 13 | திருச்செந்தூர் | 29 | M.A,B.Ed | படித்துவேலை/தொழில் | 5.5 | 9551969411 | கடகம்-ஆயில்யம்1 | M57 | நேரில் |
| 14 | விருதுநகர் | 28 | MCA | படித்துவேலை | 5.2 | 9566469703 | மேஷம்-பரணி | M60 | - |
| 15 | இராமநாதபுரம் | 27 | MBA | டிகிரிபடித்துவேலை | 5.4 | 9840278829 | கன்னி-சித்திரை | M61 | 25பவுன் |
| 16 | தூத்துக்குடி | 35 | 10th | தொழில் | 5.2 | 9840898947 | கும்பம்-அவிட்டம் | M62 | மறுமணம் |

## C.S.I.நாடார்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தூத்துக்குடி | 24 | B.Com | படித்துவேலை/தொழில் | 164 | சென்னை | 9380747220 | 450G | நேரில் |
| 2 | தூத்துக்குடி | 26 | BTP | பல்டாக்டர்/தொழில் | 5.3 | சென்னை | 9790743986 | 451G | நேரில் |
| 3 | திசையன்விளை | 38 | B.Sc | படித்துவேலை/தொழில் | 5.3 | சென்னை | 7299525999 | 453G | 30+2 |
| 4 | தூத்துக்குடி | 32 | BCA,MBA | கடவுள்பக்தியுள்ள | 169 | சென்னை | 9566198645 | 454G | நேரில் |

R.C.நாடார்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | கோவில்பட்டி | 26 | BE | ஐ.டிவேலையில்உள்ள | 5.2 | சென்னை | 9941859013 | 366G | 50பவுன் |
| 2 | சென்னை | 24 | M.Sc | படித்துவேலை | 164 | சென்னை | 9445010437 | 367G | நேரில் |
| 3 | தூத்துக்குடி | 27 | BE | IT/Govt வேலை | 5.3 | சென்னை | 8122835249 | 349G | நேரில் |
| 4 | திருநெல்வேலி | 23 | BA | படித்துவேலை/தொழில் | 5.4 | சென்னை | 8903461787 | 351G | 50+4 |

நாடார் வார்களுக்கான
நம்பிக்கையான இடம்

இமயம்
திருமண தகவல் மையம்

என்றென்றும் நமது பாரம்பரியத்தின் அடையாளம்....

இந்து / கிறிஸ்தவ நாடார்கள் தங்கள்
வட்டார பழக்க வழக்கத்திற்கேற்ப
வரன்கள் பார்த்து தருகிறோம்.
மறுமணமும் உண்டு.



மின்னல் H.ஸ்டீபன் உரிமையாளர்

எண்.1. ஸ்டேசன்ரோடு. சானடோரியம். சென்னை - 600 047.

தொடர்புக்கு: 7299 55 65 91 / 8939 500 381 / 955 16 16 103

## இந்து நாடார் மணமகன்

பெயர்:K.பிரியதர்ஷினி,சொந்தஊர்:சித்தவதாயக்கன்பட்டி, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை-52, நிறம்-மாநிறம், பிறந்ததேதி-14.9.2002, உயரம்-5அடி, ராசி-தனுசு, நட்சத்திரம்-மூலம், படிப்பு-B.Com., MBA., Meridian Hospital, மாதவருமானம்-15,000 பெறும் இந்த மணமகளுக்கு, நன்கு படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு: 9677272072, 6382805657. File No: M-337G.

| | | | |
|---|---|---|---|
| | | ராகு | சனி |
| | இராசி | | குரு |
| | | | சூரி செவ் |
| சந் | கேது | சுக் | லக் புத |

| | | | |
|---|---|---|---|
| | சந் | | புத ராகு |
| | அம்சம் | | லக் |
| சுக் | | | செவ் |
| சூரி கே | குரு சனி | | |

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-28.10.1995, உயரம்-5.5, நிறம்-மாநிறம், ராசி-விருச்சிகம், நட்சத்திரம்-கேட்டை, படிப்பு-B.Com., HCL., மாதவருமானம்-30,000பெறும் இந்த மணமகளுக்கு, படித்து நல்ல குணமுள்ள நல்ல வேலையில் இருக்கும் சென்னையில் சொந்தவீடு உள்ள மணமகன் தேவை. 9789875251., File No:M-335-G.

| | | | |
|---|---|---|---|
| | கேது | | |
| சனி (வ) | இராசி | | |
| | | | லக் |
| | குருசெ சந் | சூசுக் ராகு | புத |

| | | | |
|---|---|---|---|
| சந் | லக் கேது | சனி | சுக் |
| | அம்சம் | | |
| சூரி குரு | | | புதன் |
| | | செவ் ராகு | |

## மறுமணம் இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:U.திவ்யாராணி, சொந்தஊர்:விருதுநகர்-626001, இருப்பிடம்-சொந்தவீடு, நிறைவாழ்வு நகர், சிவகாசி ரோடு, விருதுநகர், பிறந்ததேதி-30.6.1993, உயரம்-5.3, நிறம்-மாநிறம், ராசி-துலாம், நட்சத்திரம்-விசாகம், படிப்பு:-BCA., படித்த இந்த மணமகளுக்கு, படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:9842199066, 9363557862. File No:M-329-G.

| | | | |
|---|---|---|---|
| | | கேது சுக் | புதன் சூரி |
| | இராசி | | லக் |
| சனி | | | செவ் |
| | ராகு | சந் | குரு |

| | | | |
|---|---|---|---|
| லக் | | சந்கே செகுரு | |
| சூரி | அம்சம் | | |
| புத சுக் | | | |
| | ராகு | | சனி |

நேரம்:9மணி15நிமிடம்
வியாழ திசைஇருப்பு:வருடம்8மீ10நாள்14
கேதுபுத்திஇருப்பு:-வருடம்-மீ8நாள்28.




**நாடார் வரன்கள்:** R.C, CSI, **இந்து நாடார்களுக்கு அனுகவும்,** IAS, IPS, IFS, IRS, MD,MS, B.E, M.E, MBA, MCA., **மற்றும் தொழிலதிபர்கள், கம்பெனி, பில்டர்ஸ், கல்லூரி மற்றும் அரசு பணி மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் ஆண் பெண் வரன்களும், வி.ஜ.பி. டாக்டர் வரன்கள் ஏராளமாக உள்ளன**

தொடர்புக்கு: K.K.M.மரிய ஜாண்சன் போன்: வாட்சப் எண்: 7373627729, 8148887767.

**முகவரி:எம்.மரியஜாண்சன், எண்:8/3பி, கீழ்தளம், நேரு தெரு, சீனிவாசன்நகர், பாடி, சென்னை-600 050,**

Ayya Thunai

# MUTHU CONSULTANCY

# M.Jayaselvam (33AMAPJ1834H2ZH)

ALL BUSINESS REGISTRATION, INCOME TAX, GST, TDS FILINGS & LOAN ARRANGEMENTS.

NO:14, V.V.GIRI SALAI, JAFFERKHANPET, CHENNAI-83,
INFO@MUTHUCONSULTANCY.COM
8807333334, 8778720020.

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:R.வள்ளி சுமர்சினி

சொந்தஊர்:நெல்லை மாவட்டம், வடலிவிளை, இருப்பிடம்-சென்னை, நிறம்-சிவப்பு, பிறந்ததேதி-30.4.1998, வயது-25, உயரம்-5.3, ராசி-ரிஷபம், நட்சத்திரம்-மிருகசீரிஷம், படிப்பு-B.Tech., IT., Software Engineering Infosys., படித்த இந்த மணமகளுக்கு, ஐ.டி.கம்பெனியில் வேலையிலுள்ள சொந்தவீடு உள்ள மணமகன் தேவை.

| | | | |
|---|---|---|---|
| சுக்புத சனி | சூரி செவ் | சந் | |
| லக் விகே | இராசி | | |
| | | | ராகு |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| | | லக் வியா | |
| சனி | அம்சம் | | சுக் ராகு |
| புத கேது | | | சூரி |
| | | | செவ் சந் |

தொடர்புக்கு:9176144877, 7448622077, File No: M-325-G.

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:மணக்காடு, திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-22.3.1998, வயது-25, ராசி-தனுசு, நட்சத்திரம்-பூராட்டம், நிறம்-மாநிறம், உயரம்-5.9, படிப்பு-B.Sc.,M.Sc., B.Ed., Teacher, மாதவருமானம்-20,000/- பெறும் இந்த மணமகளுக்கு, நன்கு படித்த நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. 9176878473, 9176878497, File No:M-156-G.

| | | | |
|---|---|---|---|
| லக்சூ செசனி புத | | | |
| குருகே | இராசி | | |
| சுக் | | | ராகு |
| சந் | | | |

| | | | |
|---|---|---|---|
| குரு | | | |
| கே | அம்சம் | | சுக் |
| செவ் | | | சூரி சந் |
| புத சனி | கே | | சனி |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:பா.ரேவதி, சொந்தஊர்-விளாத்திக்குளம் வட்டம், ஜமீன் கரிசல்குளம், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-நெமிலிவட்டம், பனப்பாக்கம் இராணிப்பேட்டை மாவட்டம்-631052, நிறம்-சிவப்பு, பிறந்ததேதி-20.5.1997, உயரம்-5.5, ராசி-துலாம், நட்சத்திரம்-சுவாதி, படிப்பு-M.Sc., Bio Tech., Diploma in Montessori., இந்த மணமகளுக்கு, டிகிரி படித்து நல்ல வேலையில உள்ள மணமகன் தேவை.

| | | | |
|---|---|---|---|
| சனி கே | புத | சூரி சுக் | |
| | இராசி | | |
| குரு | | | செவ் மாந் |
| | | லக் சந் | ராகு |

| | | | |
|---|---|---|---|
| | | | சுக் |
| சூரி | அம்சம் | | மாந்தி கேது |
| சந்தி ராகு | | | புத |
| | சனி செவ் | லக் | குரு |

தொடர்புக்கு:9943027898, 9787004133File No:M-293-G.

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:மு.சோபனாதேவி, சொந்தஊர்-இராமநாதபுரம், இருப்பிடம்-காட்டுப்பாக்கம், சென்னை-56, நிறம்-சிவப்பு, பிறந்ததேதி-31.1.1993, உயரம்-5.2, ராசி-மேஷம், நட்சத்திரம்-பரணி, படிப்பு-B.E., Software Engineer., மாதவருமானம்-75,000 பெறும் இந்த மணமகளுக்கு, டிகிரி படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:9944887061, 9840934500, File No:M-333-G.

| | | | |
|---|---|---|---|
| சுக் | சந் | கேது | செவ் |
| புதன் | இராசி | | |
| சூரி சனி | | | |
| | லக் ராகு | | குரு |

| | | | |
|---|---|---|---|
| | | | சூரி சனி |
| செவ் ராகு | அம்சம் | | குரு சுக் |
| | | | கேது |
| | | லக் புத | சந் |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:ஜி.தேவிகா, சொந்தஊர்:நடுகாலங்குடியிருப்பு, உடன்குடி, இருப்பிடம்-சென்னை, ஆவடி, பிறந்ததேதி-9.6.1988, உயரம்-152செ.மீ, நிறம்-மாநிறம், ராசி-மீனம், நட்சத்திரம்-ரேவதி, படிப்பு-ITI., Computer Programming., Sales (Transmart)., மாதவருமானம்-10,000 பெறும் இந்த மணமகளுக்கு, நன்கு படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்பு எண்: 9940692213.File No: M-332-G.

| | | | |
|---|---|---|---|
| சந் | குரு | சூரி | சுக்(வ.) புத வ |
| செவ் ராகு | இராசி | | |
| லக் | | | கேது |
| சனி (வ) | | | |

| | | | |
|---|---|---|---|
| சந் செவ் | | லக்சனி ராகு | |
| | அம்சம் | | |
| | | | சூரி |
| குரு | கேது | சுக் புத | |

# CSI. கிறிஸ்துவ நாடார் மணமகன் தேவை.

பெயர்:A.சில்வியா, சொந்தஊர்:திருநெல்வேலி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-30.6.1996, உயரம்-5.5, நிறம்-மாநிறம், படிப்பு-M.Sc., B.Ed., மாதவருமானம்-25,000 பெறும் இந்த மணமகளுக்கு, டிகிரி படித்த மணமகன் தேவை. தொடர்புக்கு:9380463288, 8939032701 File No:CSI-462-B.

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:P.ஜெகஜோதீஸ்வரி, சொந்தஊர்:தொட்டியன்குடியிருப்பு, (ஏரல்,குரங்கனி அருகில்) தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, நிறம்-மாநிறம், பிறந்ததேதி-13.8.1993, உயரம்-5அடி, ராகு/கேது தோசம் உள்ளது. ராசி-ரிஷபம், நட்சத்திரம்-மிருகசீரிஷம், படிப்பு-B.E., Accenture (Teamlead)., மாதவருமானம்-80,000 பெறும் இந்த மணமகளுக்கு, படித்து நல்ல வேலையிலுள்ள சொந்தவீடு உள்ள ராகுகேது தோசம் உள்ள மணமகன் தேவை. 9940363719, File No:M-200-G

| | | | |
|---|---|---|---|
| | | சந் கேது | சுக் |
| சனி | இராசி | | சூரி புத |
| | | | |
| | லக் ராகு | | குரு செவ் |

| | | | |
|---|---|---|---|
| செவ்சூ சுக் | | கேது | குரு |
| | அம்சம் | | |
| | | | |
| | லக்ரா சனி | புத | சந் |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:ம.பவித்ரா,சொந்தஊர்:திருநெல்வேலி இருப்பிடம்-சென்னை, நிறம்-மாநிறம், பிறந்ததேதி-22.6.1997, உயரம்-5.4., ராசி-தனுசு, நட்சத்திரம்-பூராடம், படிப்பு-B.Sc., (Maths)., பள்ளி அலுவலர், இந்த மணமகளுக்கு, படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:9080600739, 9171616267, File No:M-330-G

| | | | |
|---|---|---|---|
| சனி | | | சூபுத சுக் |
| கேது மாந் | இராசி | | |
| வியா | | | ராகு |
| சந் | | | லக் செவ் |

| | | | |
|---|---|---|---|
| லக் | | சுக் | கேது |
| கேபு (வ) | அம்சம் | | |
| | | | |
| சூரி சனிரா | சந் | | |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:ஜெ.கலைவாணி, சொந்தஊர்-காரங்காடு, பிச்சிவிளை, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-காஞ்சிபுரம் மாவட்டம், நிறம்-மாநிறம், பிறந்ததேதி-3.4.1998, உயரம்-5.4, ராசி-மிதுனம், நட்சத்திரம்-திருவாதிரை 2ம் பாதம், படிப்பு-M.Sc., (Computer Science)., P.hD., I.T Company., இந்த மணமகளுக்கு, டிகிரி படித்து நல்ல வேலையில உள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:9444808977. 7010368842. File No:M-320-G.

| | | | |
|---|---|---|---|
| சூரிபுத சனி | செவ் | | சந் |
| குருசுக் கேது | இராசி | | |
| | | | லக் ராகு |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| | செவ் குரு | | |
| கேது | அம்சம் | | |
| சந் சனி | | | லக் ராகு |
| சூரி மாந் | | சுக் | புதன் |







# கேள்வி? பதிலில்?...... முதியோர் நல மருத்துவம்

பத்மஸ்ரீ டாக்டர்.வி.எஸ்.நடராஜன், மூத்த முதியோர் நல மருத்துவம்.044-26412030.

**மூளை, நரம்புகளின் நலம்:**

**கேள்வி:** மறதி நோய் யாருக்கெல்லாம் வரலாம்?

**பதில்:** ஏழை பணக்காரன், ஆண், பெண், சாதி, மதம் என்று பேதம் பார்க்காமல் யாருக்கு வேண்டுமானாலும் இந்நோய் வரலாம். ஆனால், ஒரு சிலருக்கு மறதி நோய் வர வாய்ப்பு அதிகம் உண்டு. அவர்கள்:

- ❖ பாரம்பரியம்: குடும்பத்தில் யாருக்காவது மறதி நோய் ஏற்பட்டு இருந்தால்.
- ❖ இளம் வயதில் தலையில் காயம் அடைந்தவர்கள்
- ❖ மனச்சோர்வு உள்ளவர்கள்.

**கேள்வி:** மறதி நோய் ஒரு பாரம்பரிய நோயா?

**பதில்:** அல்ஸைமர் நோய் பாரம்பரிய நோயல்ல. ஆனால், 10 சதவீத நோயாளிகளுக்கு அவர் குடும்பத்திலேயே யாருக்காவது இந்நோய் வந்திருக்கக் கூடும் எனக் கருதப்படுகிறது.

**கேள்வி:** மறதி நோய் உள்ளவர்கள் வாகனங்கள் ஓட்டலாமா?

**பதில்:** மறதி நோய் உள்ளவர்கள் சுற்றுச் சூழலை உணர்ந்து செயல்படும் தன்மை குறைந்தவர்களாக இருப்பதால் வாகனங்களை ஓட்டுவது ஆபத்தை விளைவிக்கும். ஆகவே, இதை தவிர்க்கவும்.

**கேள்வி:** டிமென்சியா நோயாளியைப் பற்றி மற்றவர்களிடம் தெரிவிக்கலாமா, வேண்டாமா?

**பதில்:** நோயாளியுடன் அதிகமாக நெருக்கமாக பழகுபவர்களிடம் மட்டும் தெரிவிக்கலாம். மற்றவர்களிடம் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை.

**கேள்வி:** மறதி நோயை ஆரம் நிலையிலேயே கண்டறிய என்ன செய்ய வேண்டும்?

**பதில்:** இது சற்று சிரமம்தான். வீட்டிலே உள்ள உறவினர்கள் மற்றும் நண்பர்கள் தங்களிடம் இருக்கும் பெரியவர்களின் நடை, உடை, பாவனைகளில் ஏதாவது சிறிது மாற்றம் தெரிந்தால் கூட அது டிமென்சியாவாக இருக்கலாம் என்று உடனே சிறப்பு மருத்துவர்களை அணுக வேண்டும். 70வயதைக் கடந்தவர்கள் தாங்களாகவே ஒரு தடவையாவது சிறப்பு மருத்துவரிடம் சென்று மறதி நோயைக் கண்டறியும் பரிசோதனையை செய்து கொள்வதன் மூலம் ஆரம்ப நிலையிலேயே உள்ள மறதி நோயைக் கண்டு கொள்ள முடியும். குடும்பத்தில் யாருக்காவது மறதி நோய் இருந்திருந்தால் அல்லது சிறு வயதில் தலைக்காயம் ஏற்பட்டிருந்தால், 50-60 வயதிலேய மறதி நோயைக் கண்டறியும் பரிசோதனையைச் செய்து கொள்ள வேண்டும்.

**கேள்வி:** மறதி நோய்க்கத் தடுப்பூசி உண்டா?

**பதில்:** இது பற்றிய ஆராய்ச்சி நடந்து வருகிறது. எலிகளுக்கு பிறந்தவுடனேயே தடுப்பூசி போட்டால் அது வளரும் பொழுது அவற்றின் ஞாபக சக்தி குறைவதில்லை என்பது ஆராய்ச்சியின் கருத்து. மனிதர்களுக்கு இன்னும் இது ஆராய்ச்சி நிலையிலேயே உள்ளது.

**உதறுவாதம் என்கிற பார்க்கின்சன்ஸ் நோய்:**

**கேள்வி:** என் தாத்தாவிற்கு பார்க்கின்சன்ஸ் நோய் உண்டு. அதற்கு தவறாமல் மருந்து சாப்பிட்டு வருகிறார். பூரண குணமடைந்து விட்டார் என்று சொல்ல முடியாது. எனினும், தனது வேலையைத் தானே செய்து கொள்கிறார் எனக்கு ஒரு சந்தேகம். இந்நோய் ஒரு பரம்பரை நோயா? எனக்கு அது வர வாய்ப்பு உண்டா?

**பதில்:** தாத்தாவுக்கு உதறுவாதம் இருந்தால், கட்டாயம் பேரனுக்கும் வரும் என்று சொல்ல முடியாது. ஆனால், சில மரபணுக்கள் மாற்றம் ஏற்பட்டால் அடுத்து வரும் தலைமுறைக்கு உதறுவாதம் வர வாய்ப்பு உள்ளது, பெரும்பாலும் இது அரிதாகவே நிகழ்கிறது. ஆகையால், அதைப் பற்றி நீங்கள் அதிகம் கவலைப்படத் தேவையில்லை.

**கேள்வி:** பார்க்கின்சன்ஸ் நோய் வரக் காரணம் என்ன?

**பதில்:** மூளையில் உள்ள டோபாமைன் எனும் திரவம் குறைவதால் இந்நோய் ஏற்படுகிறது. ஆனால் எதனால் இத்திரவம் குறைகிறது என்பது பற்றி சரியாக தெரியவில்லை. இந்நோய் சுமார் 80%அளவிற்கு திரம் குறைந்த பின்னர் தான் இந்நோயின் அறிகுறியே தோன்றும்.

**தொகுப்பு: - எல்மாமதி..**


ஸ்ரீ அருஞ்சுனை காத்த அய்யனார் துணை.

G.முத்துகனி நாடார், முத்துகனி பிரதர்ஸ் G.பால்ராஜ் நாடார் G.தங்கராஜ் நாடார்

**ஜோதி ஸ்வீட்ஸ் பேக்கரி** 9789427171 7397152711

**வளர்மதி பேன்சிஸ் ஸ்டோர்ஸ்**

கோல்டு கவரிங், பொம்மை, குழந்தைகள் விளையாட்டுப் பொருட்கள் இங்கு கிடைக்கும்.

**ஸ்ரீ பவானி அம்மன் பாத்திரக்கடை**

எங்களிடம்: பித்தளை, அலுமினியம் பாத்திரங்கள் கிடைக்கும்.

நெ.132, பஜார் வீதி, பெரியபாளையம், ஊத்துக்கோட்டை வட்டம், திருவள்ளூர்மாவட்டம்-601102.



**விருதுநகர் இந்து நாடார் வியாபாரிகள் சங்கம் திருமண தகவல் மையம்**

**இந்து நாடார்களுக்கு மட்டும்.**(மணமகன்/மணமகள்) செயல்படும் திருமண தகவல் மையம் பதிவு கட்டணம் 200 மட்டும். வேறு எந்தவித கட்டணமும் கிடையாது. மணமகன்/மணமகள் தேவைப்படுவோர் பதிவு செய்து பயன்பெறும்படி கேட்டுக்கொள்கிறேன். (வசதி குறைவானவர்களுக்கு பதிவுகட்டணம் கிடையாது).

**மா.பட்டாணி நாடார் நினைவு டிரஸ்ட்,** 156,மெயின்பஜார், விருதுநகர், செல்:9486555373, 8610212126.

# உறவுகள்!

**90.புதியதொரு உலகம் செய்திட உறவுகளின் அவசியம்**

இன்னும் 50 ஆண்டுகளில் புதியதொரு உலகம் படைக்கச் சபதம் ஏற்க வேண்டும் இல்லாதோர் இல்லையென்ற நிலை உருவாக்கவேண்டும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதற்கிணங்க, உலகின் ஏற்றதாழ்வு என்ற நோய் நீங்க உலகப் பணக்காரர்கள். அறிஞர்கள், சமூக விஞ்ஞானிகள் ஒன்று திரள வேண்டும். உண்மையான பணி உலகை மாற்றி அமைப்பதுதான் என்பதை மெய்ப்பிக்கச் சமூக ஆர்வலர்கள் அனைவரும் ஓரணியில் திரளவேண்டும். மனமிருந்தால் மார்க்கம் உண்டு. மக்கள் திரண்டால் விடிவுண்டு என விண்ணதிர முழங்குவோம். எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும் என்ற தமிழ்க் கவிஞனின் கனவு நனவாக வேண்டும்.

முல்லாவின் கதைகள் பற்றிக் கேள்விப்பட்டிருப்போம். மக்கள் அதிகம் கூடும் சந்தைக்கு ஒருநாள் அவர் சென்றாராம். ஓரிடத்தில் நின்றுகொண்டு அனைவர் கவனத்தையும் ஈர்க்கும் வகையில் சத்தமாகப் பேசினாராம். உழைக்காமலே பணக்காரர் ஆக விரும்புகிறீர்களா? என்று மக்களைப் பார்த்துக் கேட்டாராம். "ஆம்" என்று ஒரு பகுதியினர் சொன்னார்களாம். படிக்காமலேயே அறிவாளிகள் ஆக விரும்புகிறீர்களா? என்ற மீண்டும் கேட்டாராம். அதற்கும் சிலர் "ஆம்" என்றனராம் இதுபோலவே இன்னொரு கேள்வியையும் கேட்க பலரும் "ஆம்" என்றார்களாம். இப்போது முல்லா சொன்னாராம். நானும் இதுபோலல்லாம் குறுக்கு வழியில் முன்னேறத்தான் ஆசைப்படுகிறேன். அதற்கான வழிமுறைகளைத்தான் தேடிக் கொண்டிருக்கிறேன். அவை கிடைத்ததும் உங்களை மீண்டும் வந்து சந்திக்கிறேன் என்று சொல்விட்டு அங்கிருந்து நகன்றாராம். அறிவு ரீதியாக, விஞ்ஞானபூர்வ அணுகுமுறை ரீதியாக, நடைமுறை சாத்தியம் அடிப்படையில் உலக அமைப்புகளின் ஆராய்ச்சி சகிதமாக, மனித உறவுகளை, தொடர்புகளை மூலதனமாக்கி இவைகளைச் சாதிக்க முடியும் எனக் காட்டியிருக்கிறோம். இதனை இவன் வழி இப்படிச் செய்ய வேண்டும் என உணர்த்தி இருக்கிறோம். கனவு காணுங்கள் என்ற முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் சொன்னதற்கு ஏற்ப நம் கனவு நனவாக வேண்டும் எனப் பேசியிருக்கிறோம். உறவுகள் என்னும் சிறகுகளை விரித்துச் சிகரங்களைத் தொடுவோம் என்ற கூறியிருக்கிறோம்" ஊர் கூடித் தேர் இழுப்போம் புதியதோர் உலகம் செய்வோம் என உறவுகள் பாறப்பட்டச் சேதியைச் சொல்லியிருக்கிறோம்.

# நாடார் மறுமலர்ச்சி

**நாடார்களின் ஒற்றுமையும், அரசியல் ஈடுபாடும்**

சாணார் என்பது நாடாருக்குரிய மற்றொரு பெயர். ஆனால், சாணார் என்ற சொல்லானது, பல வருடங்களாக பனைத்தொழில் செய்து கஷ்டப்பட்டுக் கொண்டு, சமூகத்தின் அடி நிலையிலிருந்த மக்களுக்கு வழங்கி வந்தது. அதனால், சாணர் என்றால் இழிவாக நோக்கிய காலம் அது. நாடார் என்றால் கல்வி, பொருளாதாரத்தில் முன்னேறியவர்கள் என்று உயர்வாக நோக்கிய காலம் அது. அதனால், சாணார் என்ற சொல்லை நீக்குவதற்கு சங்கம் பாடுபட்டது. நாடார்களுக்கு ஷத்திரியர் அந்தஸ்து வேண்டும் என்று கோரியது. எல்லா நாடார்களையும் சங்கத்தில் சேரும்படி கோரிக்கை விடுத்தது. 1921ஆம் வருடத்திய மக்கள் தொகை கணக்கெடுப்பில் நாடார்களை ஷத்திரியர் என்று போடும்படி கேட்டுக்கொண்டது. சாணார் என்ற சொல் தாழ்வாகக் கருதப்படுவதால், அச்சொல்லை நீக்கி எல்லோரையும் நாடார் ஷத்திரியர் என்று போடவேண்டுமென வேண்டுகோள் விடுத்தது. இதே போன்ற கோரிக்கையை பி.வி.பாண்டியனும் விடுத்தார். அரசு இதை ஏற்றுக்கொண்டது.

**நாடார்களின் அரசியல் ஈடுபாடு**

காலங்காலமாக தமக்கு எதிராக நிலைபெற்றிருந்த பல சமூகச் சீர்கேடுகளை நாடார்கள், ஆங்கிலேய அரசின் உதவிகொண்டு களைந்தார்கள். ஆங்கிலேய அரசினால் நாடார்கள், வர்த்தகம், கல்வி, பொருளாதாரம், சமூக அந்தஸ்து போன்ற எல்லா துறைகளிலும் முன்னேற்றம் பெற்றனர். அதனால், ஆங்கிலேய அரசுக்கு ஆதரவான தீர்மானங்களை நிறைவேற்றி, அரசுடன் ஒன்றிப்போக நாடார் மஹாஜன சங்கம் தீர்மானித்தது. இச்சங்கத்தின் மூலமாக நாடார்கள் அரசியலில் ஈடுபட ஆரம்பித்தனர்.

1916இல் தென்னிந்திய மக்கள் சங்கம் அமைக்கப்பட்டது. இதன் செயலாளராக பி.தியாகராஜ செட்டியார் பொறுப்பேற்றார். பின்னாளில் இச்சங்கமானது, நீதிக்கட்சி என்று பெயர் பெற்றது. நீதிக்கட்சியில் பிராமணர்கள் இல்லை. பிராமணர்களற்ற மற்ற ஜாதியினரால் ஆரம்பிக்கப்பட்ட தென்னிந்திய மக்கள் சங்கமே இந்த நீதிக்கட்சியாகப் பரிணமித்தது. இந்த கட்சியில் நாடார்கள் பெரும்பான்மையாகச் சேர்ந்தனர். இதே காலத்தில் அகில இந்திய அளவில், காங்கிரஸ் கட்சி இயங்கி வந்தது. இதில் பிராமணர்கள் நிறைய இருந்தனர். ஆங்கிலேய ஆட்சிக்கு இக்கட்சி ஒத்துழைப்பு நல்கவில்லை. ஆனால் நீதிக்கட்சி, ஆங்கிலேய அரசுக்கு ஆதரவு நல்கியது.

1919இல் ஏற்பட்ட மொன்டாகு-செம்ஸ்போர்டு உடன்பாட்டுக்குப் பின், 1920இல் அமோக வெற்றி பெற்று நீதிக்கட்சி சென்னையில் ஆட்சிக்கு வந்தது. ஜாதிப் பிரிவினைகள் தீவிரமாக இருந்த அந்தக் காலத்தில் ஜாதியின் அடிப்படையில்தான் தொகுதிகளில் வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டனர். இன்றும்கூட, அதே நிலை நீடிப்பதைக் காணகிறோம். இருந்தும், நீதிக்கட்சியில் நின்ற நாடார்களில் ஒருவர்கூட வெற்றி பெறவில்லை. வாக்காளர் பட்டியலைத் தயாரித்த அதிகாரிகளில் நாடார்கள் அதிகம் இடம் பெறவில்லை. சாணார், நாடார் என்ற குழப்பம் இருந்தது. மற்ற ஜாதியினரின் நாடார் விரோதப் போக்கு முற்றிலுமாக நீங்கவில்லை. அதனால் வாக்காளர் பட்டியலில் நாடார்கள் அனைவரும் இடம் பெறவில்லை. நாடார்களைப் பொறுத்தவரையில் அது முழுமை பெறாமலிருந்தது. 1920இல் நாடார் எவரும் வெற்றி பெறவில்லையென்றாலும், நீதிக் கட்சியின் வெற்றிக்கு நாடார்களின் உழைப்பு மற்றும் வோட்டின் பங்கைப் பாராட்டி, நாடார்குலத்தின் டபிள்யூ.பி.ஏ.சௌந்திரபாண்டியனாரை எம்.எல்.சி.யாக நியமிக்கக்கோரி நீதிக்கட்சியின் தலைவர் பி.டி.ராஜன் பரிந்துரை செய்தார். ஆங்கிலேய அரசு பரிந்துரையை ஏற்றது. 1922 ஜனவரியில் எம்.எல்.சி.யாகப் பொறுப்பேற்ற இவர், 1937வரை அப்பதவியில் நீடித்து, நாடார்குலத்துக்கும், மற்ற ஜாதியினருக்கும் பெருந்தொண்டாற்றினார். நாடார்கள் அதிகம் வாழ்ந்த நகரங்களின் கவுன்சில்களுக்கு 1921இல் நடந்த தேர்தலில் பல நாடார்கள் வெற்றி பெற்றனர். 1929இல் நாடார் மஹாஜன சங்கத்தின் தலைவராக டபிள்யூ.பி.ஏ.சௌந்திரபாண்டியனார் பதவி ஏற்றார். சங்க தலைமையகத்தை, தம் சொந்த ஊரான பட்டிவீரன்பட்டிக்கு தற்காலிகமாக, திறம்பட செயல்புரியும் நோக்குடன் மாற்றினார். இவர் காலத்தில் பல நடார் நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. (தொடரும்)




S.K.இராகவன் இராஜா ஏஜென்சி

Dealers in: Hardwares, Paints, Cements, Steel, Sanitarywares & All Building Materials

asianpaints

பிளாட் எண்:1, ஆண்டவர்நகர், பாரதிசாலை மெயின் ரோடு, இராமாபுரம், சென்னை-89

Ph:044-22491790, 22492340 ,Cell: 9841169098, 70100 00824

# பாஞ்சாலி

எஸ்.விஜயராஜ்

**54.இந்திர பிரஸ்தம்........**



பாண்டவர்களுக்கு பாதி ராஜ்ஜியம்... இந்த முடிவை திருதராஷ்டிரன் எடுத்துவிட்டான்...

அதற்கு பாண்டவர்கள் மீது அவனுக்கு இருந்த பாசம் காரணம் அல்ல.... பயமே காரணம்..

பாண்டவர்களுக்கு இன்று கிடைத்திருப்பது சாதாரண சம்பந்தம் அல்ல.... பெரிய இடத்து சம்பந்தம்... அதுமட்டுமல்ல..

பழைய ரத்த உறவான கிருஷ்ணனோடும் இன்று அவர்கள் நெருக்கமாகி விட்டார்கள்...

இவை போக துருபதனுக்கும்.. கிருஷ்ணனுக்கும் நட்பு நாடுகளின் ஒத்துழைப்பும் இன்று இருக்கிறது..

ஆகவே இவைகளையெல்லாம் வைத்து ஒரு கணக்கை போட்டான்... அவர்கள் பலசாலிகளே...

என்றாலும் கூட... பாண்டவர்களை அடக்குவது என்பது திருதராஷ்டினுக்கு முடியாத ஒரு காரியம் அல்ல...

கர்ணன் கூறியதைப்போல்... யுத்தத்தை தொடங்கலாம்.. ஆனால்... இன்னொன்றையும் திருதராஷ்டிரன் யோசித்து பார்த்தான்... எதற்காக இந்த யுத்தம்... யாராவது அவனிடம் கேட்டால்.... அவன் என்ன பதில் சொல்லுவான்.

என் தம்பியின் பிள்ளைகள்.. ஆட்சியில் பங்கு கேட்டார்கள்... கொடுக்கமனமில்லை...

அதனால்தான் யுத்தம்.. அவர்களை அழிக்கப் போகிறேன்... இப்படியா சொல்லுவான்..

அப்படி சொன்னால் கேட்பவர்கள் என்ன கூறுவார்கள்.

பாண்டுவும் உனது உடன்பிறந்த தம்பிதானே.. அவனும் கொஞ்ச காலம் அஸ்தினாபுரத்தை ஆண்டவன் தானே...

அவனுடைய பிள்ளைகளும்.. தங்களுக்கு ஆட்சியில் பங்கு வேண்டும் என்று கேட்டால்... அது ஒரு தவறா...

உன் தம்பியின் பிள்ளைகள் உனக்கும் பிள்ளைகள் தானே... அவர்களை அழிக்க இப்படி ஒரு யுத்தம் தேவையா..

இப்படித்தானே கேட்பார்கள்.. அந்த கேள்விக்கு பயந்தான் திருதராஷ்டிரன்...

அதனால்தான் அந்த உத்தரவு.,... பாண்டவர்களை அழைத்து வா என்ற உத்தரவு..

விதுரன் பாஞ்சாலம் போய் சேர்ந்தான். . ஏராளமான பரிசுப் பொருட்களோடு வந்து இறங்கிய விதுரனுக்கு...

துருபதனும் பாண்டவர்களும் சிறப்பான வரவேற்பை கொடுத்தார்கள்.

என்றாலும் கூட... அஸ்தினாபுரத்துக்கு பாண்டவர்களை அனுப்பி வைக்க... அவர்கள் யாருக்குமே விருப்பமில்லை....

ஏனென்றால் திருதராஷ்டிரன் மீதோ... அல்லது துரியோதனன்... சகுனி மீதோ... கடுகளவு நம்பிக்கையைக் கூட... அவர்களால் வைக்க முடியவில்லை.

கடந்த காலங்களில்... எவ்வளவு தொந்தரவுகளை... பாண்டிவர்களுக்கு அவர்கள் கொடுத்தார்கள்... மறந்துவிட முடியுமா...

ஆனாலும் விதுரனை அவர்கள் நம்பினார்கள்.. ஆபத்து இருந்தால்... நிச்சயமாக விதுரன் வந்திருக்க மாட்டான்... நம்பினார்கள்.

எனவே... அனைவருமாக சேர்ந்து போய் வரலாம் என்ற முடிவை எடுத்தார்கள். .. அஸ்தினாபுரத்திலும் கூட...

பாண்டவர்களை வரவேற்க... மிக சிறப்பான ஏற்பாடுகளை திருதராஷ்டிரன் செய்திருந்தான்.. துரியோதனனும் கூட ஒதுங்கி நிற்கவில்லை..



மக்களை பெரும் அளவுக்கு திரட்டினான். பலத்த ஆரவாரத்தோடு அவர்களை வரவேற்றான்...

பாண்டவர்களோடு சேர்ந்து திரவுபதியும் அஸ்தினாபுரம் வந்திருந்தாள்... அதுபோலவே... துருபதனும்... திருஷ்ட துய்ம்மனும் சிகண்டியும் வந்திருந்தனர்...

கிருஷ்ணனும்... குந்தியும் கூட வந்திருந்தார்கள்.

பல நாட்களாக தொடர்ந்து நடந்த உபசரிப்புகளால் வந்திருந்தவர்கள் அனைவருமே திக்கு முக்காடிப் போனார்கள்... அந்த நிலையில் ஒருநாள்... பாண்டவர்களை தனது அரண்மனைக்கு அழைத்தான் திருதராஷ்டிரன்... அவர்களோடு பேசினான்.

என் பிள்ளைகள் உங்களோடு நல்ல உறவில் இல்லை என்பது எனக்கு தெரியும் யுதிஷ்டிரா... ஆனால் இதே நிலை மேலும் நீடிக்கக் கூடாது..

ஆகவே... நான் ஒரு முடிவை எடுத்திருக்கிறேன். அஸ்தினாபுரத்தை இரண்டாக பிரித்து விடுவோம்... நீங்கள் காண்டவ பிரஸ்தத்தை தலை நகரமாக வைத்து ஆட்சியை நடத்துங்கள்...

துரியோதனன்.... அஸ்தினாபுரத்தை தலைநகராக கொண்டு...அவனது ஆட்சியை நடத்தட்டும் என்றான்.

உடனே துருபத தேசத்திலிருந்து வந்திருந்த அனைவருமே ஒன்று கூடினார்கள்... யோசித்தார்கள்... ஒப்பு கொண்டார்கள்...

உடனே...பாகப்பிரிவினை நடந்தது... பெரிய ஒரு விழாவாகவே நடந்தது.... பின்னர் பாண்டவர்கள்... தகுந்த பரிவாரங்களோடு புறப்பட்டு சென்றார்கள்.

ஆனால்.. காண்டவ பிரஸ்தத்தை அவர்கள் பார்த்தத போதோ... மிகப்பெரிய ஒரு ஏமாற்றத்தை உணர்ந்தார்கள்... காரணம்... சம தரைகளே அங்கே இல்லை... அவளவும் காடும் கட்டாந்தரையும்... தரிசு நிலங்களாகவும் இருந்தன...

அதை பார்த்ததும்... திரவுபதி மனச் சங்கடத்துடன் சொன்னாள்... இதை வாங்கியதற்கு பதிலாக நாம் பாஞ்சாலத்திலேயே இருந்திருக்கலாம் என்றாள்...

ஆனாலும் யாரும் மனம் தளர்ந்து போகவில்லை...

கிருஷ்ணன் ஏற்கனவே புது நகரம் ஒன்றை உருவாக்கி அனுபவப்பட்டவன் தானே...

எனவே... அவனது வழி காட்டுதல்.. பாண்டவர்களுக்கு மிகவும் ஒத்தாசையாக இருந்தது.

அவன் தேவலோக கட்டிடக்கலை நிபுணரான விஸ்வகர்மாவை அழைத்தான். அவனிடம் பொறுப்பை ஒப்படைத்தான்...

ஒரு நல்ல நகரத்தை உருவாக்கிக் கொடுங்கள் என்று அவனை கிருஷ்ணன் கேட்டுக் கொண்டான்.

உடனே புது நகரம் ஒன்று உருவாக்கப்பட்டது. பெரிய பெரிய கோட்டைகளும் கட்டப்பட்டன...

அதுபோல மாட மாளிகைகளும்.. மாடி வீடுகளும் கூட உருவாக்கப்பட்டன. வீதிகள் சிறப்பாக அமைக்கப்பட்டன... புதிய வீடுகள் பல வடிவமைக்கப்பட்டன...

மிகவும் குறைந்த காலத்துக்குள் மிகப்பெரிய ஒரு நகரம் ஒன்றை உருவாக்கி விட்டான் விஸ்வகர்மா...

அதை தொடர்ந்து நல்ல நாள் ஒன்றும் குறிக்கப்பட்டது....

காண்டவ பிரஸ்தம் என்ற அந்த காட்டுப்பகுதிக்கு.. இப்போது இந்திர பிரஸ்தம் என்று பெயர் சூட்டப்பட்டது...

திரவுபதியும் யுதிஷ்டிரனும் அரியணை ஏறினார்கள்.

- தொடரும்......




N.R.P.செந்தில் நாடார், செல்:9841038856,

**N.R. பட்டுராஜன் டிரேடர்ஸ்**

எங்களிடம் சிமெண்ட், மணல், ஜல்லி, தள ஓடு, கடப்பா கல், சுண்ணாம்பு, M.Sand, P.Sand. கிடைக்கும். **Email: senthilnrp@gmail.com**

4, ஆற்காட் ரோடு, கணபதி நகர், போரூர், சென்னை-116.

கலைமாமணி விருது பெற்ற திரு.தாமரை செந்தூர்பாண்டி எழுதும் சமூக தொடர்கதை.

# நிலவுக்குத் தென்றல் பகையானால்!

கலைமாமணி தாமரைசெந்தூர்பாண்டி, செல்:8838477377.



24. இரவு பத்து மணி சுமாருக்குத்தான் மளிகை கடைப் பையன் வந்தான்.

"என்ன ஆனது தம்பி...? வீடெதும் கிடைத்ததா?" பரபரப்புடன் கேட்டாள் சாவித்திரி.

"கிடைத்தது அக்கா. ஆனால் வாடகை கொஞ்சம் ஜாஸ்தியாகச் சொல்கிறார்கள்."

"எவ்வளவு வாடகை?"

"நாலாயிரம் ரூபாய்?"

....."ஆனால் வீடு வசதியாயிருக்கிறது."

"பரவாயில்லை அட்வான்ஸ் எவ்வளவு?" "மூன்று மாத வாடகை.."சரி கொடுத்துவிடுவோம். வீடு பாதுகாப்பான இடத்தில்தானா?" "ஆமாம். கிண்டியில். எப்பொழுதும் ஆள்நடமாட்டமுள்ள இடத்தில், அனாவசியமாய் யாரும் வரமாட்டார்கள்."

"இந்த சத்திய வேந்தன்... அவன் ஆட்கள்?"

"தைரியமாய் அங்கு வரமாட்டார்கள். காவல்நிலையம் அங்கிருந்து கூப்பிடும் தூரத்தில் தானிருக்கிறது."

"சரி தம்பி. ஏற்பாடு செய்துவிடு இன்றைக்கு இரவே வீட்டைச் சுத்தப்படுத்தி... நாளைக்குக் குடிபோய் விடலாமா?"

"இன்றைக்கு ஒண்ணும் முடியாது. நாளைக்கு நீங்கள் அலுவலகம் போய் வரும்பொழுது நான் எல்லா ஏற்பாடுகளும் செய்து வைத்துவிடுகிறேன். சாயங்காலமே ஒரு வேன் ஏற்பாடு செய்து ஜாமான்களுடன் அங்கு குடியேறிவிடலாம்."

"நாளைக்குள் முடியுமா?""முடியும். அது என் பொறுப்பு".

"தம்பீ...!"

"நீங்கள் நம்மூர்க்காரர்கள். துணையில்லாமல் நீங்கள் கஷ்டப்படும்போது நான் உதவாமலிருந்தால் என்னக்கா அர்த்தம்? நீங்களே என் கூடப் பிறக்காத தம்பி தான்! எனக்கு இனி என்றென்றும் நீதான் தம்பி!

ரொம்ப சந்தோச மக்கா! நீங்கள் நிம்மதியாய் வீட்டில் தூங்குங்கள். இன்றைக்கு நான் சிலரிடம் சொல்லி வைத்திருக்கிறேன். வருவார்கள். அவர்களோடு என் கடைத் திண்டிலேயே நாங்கள் படுத்துக் கொள்வோம். எவனும் இங்கே வந்தால் அடித்து விரட்டி விடுவோம். "வெளியே கொசு கடிக்கும்... குளிரடிக்குமே எப்படியப்பா படுப்பீர்கள்?"

"அட... அதுபற்றியெல்லாம் நீங்கள் கவலைப்பட வேண்டாம். நாங்கள் பார்த்துக் கொள்வோம்."

விடைபெற்றுப் போய்விட்டான்.

இரவு முழுவதும் தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்த சாவித்திரிக்குள் அந்த ரகுவரன் வந்தான். "என்னடி... உன்னை விலைபேசி கூட விற்றுவிட்டேனே... இனி நீ என்ன செய்யப் போகிறாய்?" என்று எக்காளமிட்டுச் சிரித்தான்.

அவளுக்குள் நெருப்பு மூண்டது போலிருந்தது.

"இரு... இரு...! என்றாவது ஒருநாள் நீ என் கண் முன் வந்து சொறிநாயிலும் கேவலமாய் நிற்காமல் போகமாட்டாய்....! அப்படி நிற்கும்போது முகத்தில் உமிழ்ந்து, நிலத்தில் தள்ளி.,காலால் மிதிப்பேன்!" மனம் சங்கல்பித்துக் கொண்டது. தூக்கம் பிடிக்கவில்லை. எழுந்தாள். விளக்கைப் போட்டுக் கொண்டு படுக்கை மீதமர்ந்திருந்தாள். எதிரே பாரதியார் கவிதைகள் பளபளப்பான அட்டையுடன் மினுங்கியது.

எழுந்து போய் எடுத்தாள். பிரித்துப் படித்தாள்.

"விட்டு விடுதலையாகி நிற்பாய் இந்தச் சிட்டுக்குருவியைப் போலே..." திரும்பத் திரும்ப அதையே படித்தாள். மனம் ஒருமுகப்படுவது போலிருந்தது.

விட்டுவிட வேண்டும்...............

உறவுகளை...............

பிடிப்புகளை..........

எல்லாமே சமம் என்ற நிலைக்கு வந்துவிடவேண்டும்! மனம் ஏதோ ஒரு மூலையில்....ஏதோ ஒரு தடத்தில் கால்பதித்தது போல் இருந்தது.

பாரதியார் கவிதைகளை மூடி வைத்தாள்.

விளக்கணைத்துப் படுக்கையில் வீழ்ந்தாள்.

தூக்கம் தழுவியது.

காலையில் எழுந்து வெளியே வந்து தெருக்கோடி மளிகைக் கடையைப் பார்த்தாள். அங்கு படுத்திருந்தவர்கள் அதிகாலையிலேயே எழுந்து போயிருப்பார்கள் எனத் தெரிந்தது. காலைக் கடன்கள் முடித்து... வீட்டு வேலைகள் செய்தாள். சமைக்கத் தோன்றவில்லை. மாலையில் வந்ததும் வீட்டைக்காலி செய்வதற்கான ஆயத்தங்களாய் ஜாமான்களைக் கட்டினாள்.

அலுவலகம் போகும் சமயம் வந்தது. வீட்டைப் பூட்டிக் கொண்டு நடந்தாள்.

அலுவலகத்திற்குள் போனதும் திக்கென்றது. ஒரு வேளை சப்-இன்ஸ்பெக்டர் எம்.டிக்கு தகவல் கொடுத்திருப்பாரோ....?

அப்படிக் கொடுத்திருந்தால்... எம்.டி.என்னைக் கூப்பிட்டு ஏதாவது பேசுவாரோ? சட்டென சப்-இன்ஸ்பெக்டர் எம்.டி.ஐப் பற்றிச் சொன்னது நினைவிற்கு வந்தது.

"அவர்தான் என்னைக்கூட இந்த அளவுக்கு உயர்த்திய உத்தமர். திருமணமே செய்து கொள்ளாத அந்த நல்ல மனிதரால் வாழ்ந்தவர்கள் எத்தனை பேர் தெரியுமா? மேடம்... நீங்கள் அங்கே வேலை பார்ப்பதே உங்களின் அதிர்ஷ்டம்!" சப்-இன்ஸ்பெக்டரே இப்படி சான்றிதழ் வழங்கிவிட்டாரென்றால் எம்.டி.உண்மையிலேயே நல்லவர்தான். அவர் என்னை... என் மனம் அறிந்து கூப்பிடாமல் விட்டுவிடுவார் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. தன் இருக்கைக்குப் போனாள்.

அனிதாவின் ஆலோசனைப்படி "அண்ணி... உங்கள் அனிதா சென்னையில் உங்களைத் தேடி அலைகிறேன். உங்களைக் காணாமல் நான் அழுத கண்களோடு இருக்கிறேன். உங்களைக் காணாமல் நான் போகமாட்டேன்! உங்கள் அப்பாவும், அண்ணாவும் கூட வந்திருக்கிறார்கள். தயவு செய்து உங்கள் அனிதாவைப் பார்க்க வாருங்கள்!"

என்று எல்லா தினசரிகளிலும் விளம்பரம் கொடுத்து, அந்த மெடிக்கல்ஸ் திருவேங்கடத்தின் அண்ணன் வீட்டு முகவரியையும், தொலைபேசி எண்ணையும் அறிவிப்பதென்ற முடிவுடன் புறப்பட்டுக் கொண்டிருந்தபோது தொலைபேசி அழைத்தது.

பேராசிரியை தொலைபேசியை எடுத்தார்.

"ஹலோ... யாரது?....?"

"நான்தான் பாலன்..." பாங்க் அதிகாரி.

"என்னங்க விசயம்?"

"ஊரிலிருந்து வந்திருப்பவர்கள் தேடிக்கொண்டிருந்த சாவித்திரியின் முகவரியைப்

போலீசார் கண்டுபிடித்து விட்டார்களாம்...!

"நிஜமாகவா...?!

"ஆமாம்! எஸ்.பி.இப்பொழுதுதான் தொலைபேசியில் சொன்னார்!"

"ரொம்ப சந்தோசம்!"

"ஹேய்... நீ மட்டும் சந்தோசப்பட்டால் போதுமா? அவர்களெங்கே? விளம்பரம் கொடுக்கப் போய்விட்டார்களா?"

இப்பொழுதுதான் புறப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

"விளம்பரம் வேண்டாம் என்று சொல்."

"இதோ சொல்கிறேன்."

"போனை வைக்கட்டுமா?"

"வைக்காதீர்கள். அந்தப் பெண் எங்கே இருக்கிறதென்று சொல்லவில்லையே....?" "ஓ...சாரி...! ஆலந்தூரில் இருக்கிறாளாம். அவள் வீட்டில் யாரோ ஒருவன் போய் தகராறு செய்திருக்கிறான். அவள் அவனைப்பிடித்து போலீசில் ஒப்படைத்திருக்கிறாள். சப் -இன்ஸ்பெக்டர் எஸ்.பிக்கு சொன்னாராம். உடனே அவர்களை பழவந்தாங்கலருகேயுள்ள ஆதம்பாக்கம் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகச் சொல். அவர்களே அவள் வீட்டைக் காட்டுவார்கள்."

"சரி. சொல்கிறேன். உடனே போகச் சொல்கிறேன்."

"உடனே வேண்டாம். சாயங்காலம் போனால் போதும்."

"ஏன்?"

"அவள் எங்கோ ஒரு அலுவலகத்தில் வேலை செய்கிறாளாம். அலுவலகத்திலிருந்து வந்த பின்பு போகச் சொல்.

"சரி. சொல்கிறேன்." தொலைபேசியைத் தாங்கியில் மாட்டிவிட்டுத் திரும்பினாள்.

பத்திரிகைக்கு விளம்பரம் கொடுப்பதற்கென புறப்பட்டுக் கொண்டிருந்த அனிதாவையும், மற்றவர்களையும் வாயிலில் தடுத்து நிறுத்தினாள்.

"அம்மா... நீங்கள் சொல்வது நிஜம்தானா.... அல்லது எங்களை ஆறுதல்படுத்தச் சொல்லும் எதிர்பார்பு வார்த்தையா...?" சாவித்திரியின் அப்பா நம்பிக்கையும் அவநம்பிக்கையும் ததும்பக் கேட்டார்.

"உண்மைதான்! இப்பொழுதுதான் அவர் தொலைபேசியில் சொன்னார்! உங்கள் பெண் ஆலந்தூரில் இருக்கிறாளாம். எங்கோ ஒரு அலுவலகத்தில் வேலை செய்கிறாளாம். சாயங்காலமாய் ஆதம்பாக்கம் போலீஸ் ஸ்டேசனுக்குப் போனீர்களானால் அவள் வீட்டிற்குப் போலீஸ்காரர்களே அழைத்துச் செல்வார்காளம் உங்களை!"

"கடவுளே... முருகா...! என் வயிற்றில் பால்வார்த்தாயப்பா...!" அனிதாவின் அப்பா வாய்விட்டுச் சொன்னார்.

அப்பொழுதே போய் அண்ணியை பார்க்கவேண்டுமென அனிதா தவித்தாள். அன்று மதிய உணவு யாருக்குமே கொள்ளவில்லை. எல்லோர் மனதிலும் சாவித்திரியை எப்பொழுது பார்ப்போம் என்ற பரபரப்பே மிஞ்சி நின்றது.

## பிரபல ஈகிள் டைரி நிறுவனர் எம்.ஜே.பிரதாப்சிங் மறைவு - எர்ணாவூர் ஏ.நாராயணன் அவர்கள் Ex.MLA இரங்கல்



பிரபல ஈகிள் டைரி நிறுவனர் எம்.ஜே.பிரதாப்சிங். வயது-93. இவர் உடல்நலகுறைவின் காரணமாக (28.1.2024 அன்று) காலை காலமானார். 1931ம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டம் வடக்கன்குளத்தில் பிறந்த இவர், பள்ளி படிப்பு முடித்துள்ளார். 1949ஆம் ஆண்டு சென்னை வந்து தனியார் அச்சகத்தில் பணியாற்றினார். அதன்பின் 1954ம் ஆண்டு ஈகிள் அச்சகத்தை தொடங்கி புகழ்பெற்ற ஈகிள் டைரியை வெளியிட்டார். ஆசிய கண்டத்திலேயே மிகப்பெரிய அச்சகமாக நடத்தி வந்தார். இவரது அச்சகத்தில் ஈகிள் டைரி உள்ளிட்ட பல்வேறு வங்கி காசோலைகள் தயார் செய்யப்படுகிறது. 1975ல் பூம்புகார் பதிப்பகத்தை தொடங்கினார். இந்த பதிப்பகத்தின் மூலம் இதுவரை 1300 தலைப்புகளுக்கு மேலான நூல்களை வெளியிட்டுள்ளார். பதிப்பகத்தில் வெளியிடப்பட்ட 3நூல்களுக்கு சாகித்திய அகடாமி விருது கிடைத்துள்ளது. சமுதாயத்தின் மீது அதிக பற்று கொண்டவர். வயது முதிர்ந்த தனது கடைசி காலத்திலும் பதிப்பக தொழிலில் முழு கவனத்துடன் அக்கறை செலுத்தி வந்தார். உழைப்பால் உயர்ந்தவர்களுக்கு இவர் ஒரு உதாரணமாக திகழ்பவர்.

அவரது மறைவு செய்தி கேட்டு நான் மிகுந்த அதிர்ச்சி அடைந்தேன். இருபது ஆண்டுகளுக்கு மேலாக அவருடன் நெருக்கமாகவும், நட்புடன் பழகி வந்தேன். அவர்கள் பழகிய நாட்களை என்னால் மறக்க முடியாது. அவர் நம்மை விட்டு மறைந்தாலும் அவரது புகழ் என்றும் நிலைத்து நிற்கும். அன்னாரைப் பிரிந்து வாடும் குடும்பத்தினர்கள், உறவினர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் சமத்துவ மக்கள் கழகம் சார்பாக ஆழ்ந்த இரங்கலையும் வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.




வடவைத் தாயின் தவப்புதல்வரும், அகில உலக புகழ் பெற்ற
"ஈகிள்" டைரி தயாரிப்பாளரும், "பூம்புகார்" பிரசுரத்தின் உரிமையாளருமான
அமரர் M.J.பிரதாப் சிங்
FOUNDER CHAIRMAN OF EAGLE GROUP - CHENNAI.
அவர்கள் மறைவிற்கு எங்களின் கண்ணீரை காணிக்கையாக்குகிறோம். அன்னார் நமது ஊருக்கும், சமுதாயங்களுக்கும், பள்ளிகளுக்கும், ஏழை எளிய மக்களுக்கும், மாணவர்களுக்கும் ஆற்றிய சேவைகளையும், பொருளுதவிகளையும், நினைவு கூறுகிறோம்.
இவண் : LION T.M.ராஜபால் B.Sc., P.M.J.F.,
(AGENT FOR EGALE DIARIES) வடக்கன்குளம் - 627 116.

# வெற்றிப்படிக்கட்டு

வசந்த் & கோ H.வசந்தகுமார்M.A., Ex.MP (Member of Parliament)

**எளிமையும் வலிமை தரும்!**



வாழ்க்கையில் மிக எளிமையாக இருங்கள் என்று காஞ்சி மகாப் பெரியவர் சொல்லியிருக்கிறார். ஆடம்பரமான வாழ்க்கை, ஆடம்பரமான உணவு, ஆடம்பரமான உடைகள் இவையெல்லாம் ஒரு கட்டத்தில் அத்தியாவசியமாகும் பொழுது மனிதனின் நிதி நிலை நெருக்கடியாகிறது. எளிமையாக இருக்கும் மனிதன் இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழத் தன்னைப் பழக்கிக் கொள்வான்.

தன்னைப் போல் பிறரையும் மதிக்கும் எண்ணம் இருந்தால், மற்றவர்களின் சிரமங்களை, கஷ்டங்களை உணர்ந்து செயல்பட்டால் சமுதாயத்தில் அந்த மனிதனின் மதிப்பு உயரும். மனதில் எழும்புகிற பலதரப்பட்ட ஆசைகளுக்கு அடிமையானால் வீண் செலவு. நிறைய வருமானம் இருந்தால் முடியும். இல்லாத போது கஷ்டப்பட வேண்டும். எதற்காக இப்படி ஒரு நிலை, மனதைக் கட்டுப்படுத்தி எளிமையாக வாழ்ந்தால், இருந்தாலும் இல்லாவிட்டாலும் கஷ்டம் வராது. விலைவாசி ஏற்றத்தைப்பற்றிக் கூடக் கவலைப்படாமல் வாழலாம் என்று காஞ்சி மகாப் பெரியவர் தமது ஆன்மிக அருளுரையில் கூறியுள்ளார்.

காஞ்சி மகான் கூறியதைப் போல் நடைமுறைப்படுத்தி எளிமைக்கு முக்கியத்துவம் கொடுத்தவர் நமது மகாத்மா காந்தி. ஆசிரம வாழ்க்கையில் தொண்டர்களை எளிமையாக வாழ வழிநடத்தினார். வாழ்க்கையில் மற்றவர் ஆடம்பரமாக வாழ்வதை அண்ணாந்து பார்த்து ஏக்கப்பெருமூச்சு விடுவதை விடக் கவிஞர் கண்ணதாசனின் பாடலில் குறிப்பிட்டது போல

"உனக்கும் கீழே
உள்ளவர் கோடி
நினைத்துப் பார்த்து
நிம்மதி நாடு" - என்று அற்புதமாக எழுதியுள்ளார்.

இப்படித்தான் 1951ஆம் ஆண்டு தெலுங்கானாப் பகுதியில் விவசாயத் தொழிலாளர்களுக்கும், நிலச்சுவான்தார்கள் மற்றும் பண்ணையார்களுக்கும் இடையே பயங்கரமான கலவரம் நடந்து கொண்டிருந்தது. உழுபவனுக்கே நிலங்கள் சொந்தம் என்பதுதான் தொழிலாளர்கள் போராட்டம். ஏழை விவசாயத் தொழிலாளிகள் பெரியளவில் பாதிக்கப்பட்டனர். அப்போது வினோபாஜி அவர்கள் தெலுங்கானாப் பகுதியில் நடைப்பயணம் மேற்கொண்டார். சமுதாய நல்லிணக்கத்திற்காக அவர் இந்த நடைபயணம் செய்தார். தெலுங்கானாக் கலவரத்திற்கு முக்கியக் காரணமே விவசாயத் தொழிலாளர்களுக்கு நிலம் கிடைக்காததுதான். போச்சம்பள்ளி என்ற கிராமத்தில் வினோபாஜி தங்கி இருந்தபோது பிரார்த்தனைக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டார். அப்பொழுது சில விவசாயத் தொழிலாளர்கள் மேடையிலிருந்த வினோபாஜியிடம் வந்து "நாங்கள் விவசாயத் தொழிலை நம்பி வாழ்பவர்கள். கலவரம் காரணமாக பண்ணைகளில் கூலி வேலை பார்க்க முடியவில்லை. உழைத்துப் பிழைக்கத் தங்களுக்குச் சொந்தமாக சிறிதளவு நிலம் கூட இல்லை என்று கூறி வருத்தப்பட்டார்கள்.

வினோபாஜி அவர்கள் உடனே கூட்டத்தில் இருந்த மக்களைப் பார்த்து "இந்த ஏழை விவசாயத் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் இப்படி கேள்விக்குறியாகிவிட்டதே? உங்களில் யாராவது இவர்களுக்கு வழி சொல்லக்கூடியவர்கள் இருக்கிறீர்களா?" என்று கேட்டார்.

உடனே ஒரு நில உரிமையாளர் எழுந்து நின்று, "எனக்குச் சொந்தமான ஏராளமான நிலங்கள் இருக்கின்றன. அதில் 100 ஏக்கர் நிலத்தை உடனடியாகத் தானமாக வழங்கத் தயார்" என்று சொன்னார். வினோபாஜிக்கு மிகுந்த சந்தோஷமாகிவிட்டது. உடனடியாக அவரிடமிருந்து நிலங்களைப் பிரித்துத் தந்தார்.

வினோபாஜியின் இந்த திடீர் யோசனை பெரிய அளவில் கைகொடுத்தது. விவசாயத் தொழிலாளர்கள் தங்களுக்கு வாழ்வாதாரம் கிடைத்த மகிழ்ச்சியில் திளைப்பதைப் பார்த்தார் வினோபாஜி அன்று அவர் மனதில் உதித்த திட்டம் தான். "பூமிதான இயக்கம்" அது உருவாகி நாடெங்கும் பரவியது. இருப்பவரிடம் இருந்து வாங்கி இல்லாத மக்களுக்கு வழங்கும் இந்த பூமிதானத் திட்டம், இந்தியா முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. வினோபாஜியின் திட்டம் வெற்றி பெற்றது. எனவே வாழ்வது என்பது முக்கியம். அதில் அத்தியாவசியமா? ஆடம்பரமா? என்பதைச் செயல்படுத்துவதில் சிறப்பான வாழ்க்கை அமைகிறது.

(தொடரும்)

## ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

## M.ஜாண் கென்னடி B.Com.,

ஊராட்சி மன்ற தலைவர்

வடக்கன்குளம் ஊராட்சி மன்றம், வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், திருநெல்வேலி மாவட்டம்

தொலைபேசி : 9443280846 ☎ 04637 - 231888



வடக்கன்குளம் ஊராட்சி, வடக்கன்குளம் ஊரைச் சார்ந்த உயர்திரு.பிரதாப்சிங், த/பெ.கி.மு.மரிய அந்தோணி நாடார் என்பவர் வடக்கன்குளம் ஊர் மக்களுக்கு நல்லது செய்திடும் வகையில் பாட்டு இசக்கி அம்மன் கோயில் அருகில் உள்ள கிணற்றிலிருந்து பஞ்சாயத்து வரை பைப்லைன் அமைத்து தண்ணீர் பிரச்சனை தீர உதவி செய்தார். பள்ளிகளுக்கு காம்பவுண்ட் கட்டுவதற்கு நிதி உதவியை அருட்திரு.ஆஸ்வால்ட் அடிகளால் அவர்களிடம் கொடுத்து உதவினார். புனித தெரசாள் மேல்நிலைப்பள்ளி கட்டிடம் கட்ட ரூ.35,00,000/- நிதி உதவியாக ரூ.25,00,000/- அருட்திரு.ஜாண்பிரிட்டோ அடிகளால் அவர்களிடம் கொடுத்து உதவினார். 15வருடமாக ஏழை எளிய மக்களுக்கு அன்பளிப்பாக ஆகஸ்ட் மாதம் 15ஆம் தேதி 100ஆண்கள், 100பெண்களுக்கு வேட்டி சேலை வழங்கினார். 18.1.2024 அன்று உயர்திரு.பிரதாப்சிங் அவர்கள் இயற்கை எய்தினார். அன்னாரின் பிரிவிற்கு வடக்கன்குளம் ஊராட்சிமன்ற அலுவலகத்தில் வைத்து ஊராட்சி மன்ற தலைவர் திரு.எம்.ஜாண்கென்னடி அவர்கள் தலைமையில் 26.1.2024ஆம் நாளில் நடைபெற்ற குடியரசு தினவிழா கிராமசபை கூட்டத்தில் இரங்கல் மௌவுன அஞ்சலி செலுத்தப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்படடது.



# உன் சிந்தனை உனது வெற்றி

- முனைவர் சா.தா.நோவா செல்:9443303456,

### கடமையின் பசி



ஏனைய மனிதர்களால் கவனிக்காமல் விட்டுவிடப்படும் நிகழ்ச்சிகள், ஆர்வமுடையவர்கள் கவனத்தை ஈர்த்து அவற்றைப் பற்றிச் சிந்திக்கச் செய்யும்.

"உதாரணமாக இயற்பியல் விஞ்ஞானி நியூட்டன் வாழ்க்கையில் நிகழ்ந்ததாக கூறப்படும் ஒரு சம்பவத்தைக் குறிப்பிடலாம். அவர் ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருந்த போது ஓர் ஆப்பிள் பழம் மரத்திலிருந்து அவர் அருகில் விழுந்தது" மரக்கிளையிலிருந்து விழுந்த பழம் மேலே செல்லாமல் ஏன் தரையை நோக்கி வந்தது? என நியூட்டன் ஆராயத் தொடங்கினார்.

அதன் விளைவே 'புவி ஈர்க்கும் சக்தி' என்னும் தத்துவம் உலகிற்கு கிடைத்தது. இதன்மூலம் இன்றைய அறிவியல் பூத்துக் குலுங்குகிறது.

"ஒரு விஞ்ஞானி ஆராய்ச்சி செய்து கொண்டிருந்த போது, திடீரென மயங்கி விழுந்துவிட்டார். மறுபடியும் அவருக்கு நினைவு திரும்பியபோது தடைபட்ட ஆராய்ச்சியை தொடராமல், தான் மயங்கி விழுந்ததற்கானக் காரணம் என்ன? என்று சிந்திக்கத் தொடங்கினார். அதனால் குளோரோஃபார்ம் என்ற மயக்க மருந்து உலகிற்கு கிடைத்தது"

ஏதோ ஒரு புதுமையை தேர்ந்தெடுத்து, அதையே வாழ்க்கையின் இலட்சியமாக்கிக் கொள்ளும் மனப்பாங்கினால் அவர்கள் தங்கள் வாழ்வில் வெற்றி பெற்றார்கள்.

நீச்சல் வீராங்கனை ஒருத்தி ஒரு தீவிலிருந்து, முப்பது கிலோமீட்டர் நீந்திக்கடந்து மற்றொரு தீவின் கரையை அடைய முயற்சி செய்தாள்.

கடலில் இறங்கி, நீந்த ஆரம்பித்த சில மணி நேரத்தில் குளிரால் நடுங்கினாள். பத்துமணி நேரத்திற்குப் பின்பு கை கால் எல்லாம் மரத்துப் போயின. "இனி நீந்தி முடியாது; என்னைக் கரையேற்றி விடுங்கள்?" என்றாள்.

"கரை ஏற்றப்பட்டாள். கரை ஏறிய பின்தான் தெரிந்தது. இன்னும் சில அடிகள் தாக்குப்பிடித்து நீந்தியிருந்தால், அடுத்த கரையை அடைந்து இருக்கலாம் என்று! பிறகு அவள் நினைத்தாள். கரை மட்டும் கண்ணுக்குத் தெரிந்திருந்தால் இந்தக் கடும் குளிரையும், பனிப்படலத்தையும் கடந்து கரையை எட்டிப் பிடித்திருப்பேன் என்று!"

இந்த எண்ணத்துடன் மறுபடியும் துணிவுடன் கடலில் இறங்கினாள். இம்முறை சோர்வை பொருட்படுத்தவில்லை. கடுங்குளிரையும் பனிப்படலத்தையும் கடந்து கரையை அடைந்தாள்.

அது மட்டுமல்ல இதற்கு முன் இவ்வளவு நீண்ட தூரத்தை நீந்திக் கடந்தவர்களை விட குறைந்த நேரத்தில் நீந்திச் சாதனை புரிந்தாள்.

எனவே நம்பிக்கையுடன் முயன்றால் வாழ்வில் முடியாதது எதுவுமே இல்லை.

பிரம்மாண்டமான ஆகாய விமானம் பறந்து செல்வதைப் பார்ப்பதற்கு வியப்பாக இருக்கிறது.

"ஒருமுறை அடிக்கடி விமானத்தில் செல்லும் ஒருவருக்கு அருகில் புதிதாக பயணம் செய்யும் ஒருவர் அமர்ந்திருந்தார்.

விமானம் பூமியை விட்டுக் கிளம்பி விரைந்து மேலே செல்லும் போது, காலநிலைக் கோளாறு காரணமாக, விமானத்தின் இறக்கைகள் படபடவென அடித்துக் கொண்டு தாழ்ந்தும் உயர்ந்தும் தோன்றின. புதியவர் பதறிப் போனார்."

விமானம் விரைவில் நொறுங்கி விழப்போகிறது எனப் பயந்து கூக்குரலிட்டார்.

"அது கண்ட முன் அனுபவம் உள்ளவர் 'பயப்படாதீர்! விமானத்தின் அமைப்பே அப்படிப்பட்டதுதான்.

பெருங்காற்று வீசும்போது, இறக்கைகள் இறுக்கமாக இருக்கக்கூடாது. காற்றின் போக்குக்கு ஏற்றவாறு அசைந்து கொடுக்க வேண்டும். இல்லையென்றால் பேராபத்து நேரும். அதற்காகத்தான் அப்படி நெகிழ்ந்து கொடுக்குமாறு இறக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன என்றார்."

மனித வாழ்க்கையும் இப்படிப்பட்டது தான். சில நேரங்களில் விட்டுக்கொடுத்தும், சகிப்புத் தன்மையோடும், நடந்து கொண்டால் எடுத்துக்கொண்ட செயலில் முழுமையான வெற்றியைப் பெற்று இலக்கை நீ அடையலாம்.

உதவி செய்பவருக்கு உடனே நன்றி கூற வேண்டும். அத்தகைய வாய்ப்பை ஒவ்வொருவரும் பரிமாறிக் கொள்ள வேண்டும்.

நெஞ்சார்ந்த நன்றி என்று கூற ஒரு மணித்துளிக்கூட ஆகாது.

அமெரிக்காவின் புகழ் வாய்ந்த ஜனாதிபதியான ஆபிரகாம் லிங்கன், ஒரு வினாடியைக் கூட வீணாக்குவது கிடையாது. அவ்வாறு செயல்படும் தன்மை வாய்ந்தவர். எவ்வளவு பணிகளையும் ஒவ்வொரு நாளும் மேற்கொண்டு செயல்பட்ட போதிலும், நின்று நிதானத்துப் பிறருக்கு நன்றி கூறத் தவறவேமாட்டார்.

மிக நீண்ட தூர ரயில் பயணத்தின்போது, அவசர அவசரமாக இறங்கிச் செல்ல நேர்ந்தாலும், சிறிது நேரம் நின்று ரயில் டிரைவருக்கு நன்றி சொல்லிவிட்டுத்தான் செல்வார்.

ஒரு குடியரசுத் தலைவரே நன்றி சொல்லி நிற்கும்போது, நமக்கு உதவி செய்தவர்க்கு நாம் நன்றி கூற வேண்டாமா?

ஒருவரிடம் உதவி பெற அவரிடம், ஆயிரம் முறை செல்கிற நாம், உதவி அடைந்ததும் அவரைப் பார்த்து நன்றி சொல்லி நமக்கு நேரமே இருப்பதில்லை என்றும் இப்படிப்பட்ட நிலையை நாம் மாற்றிக்கொள்ள வேண்டும்.

உதவி செய்தோர்க்கு நன்றி கூறுவது நான் நமது பண்பாடு. எனவே வாழ்வின் இலக்கை அடைய நன்றி மறப்பது நன்றன்று.

"இறகுகளைப் பறவைகள் பாரமாக கருதலாமா?" பொறுப்புகளே உங்களை உயர்த்தும் இறகுகள். எனவே உங்கள் பொறுப்புகளை பாரமாகக் கருதாதீர்கள்.

"கஷ்டம் வந்தால் புலம்பாதீர்கள் "அதிர்ஷ்டம் அவ்வளவுதான்" என்று அலுத்துக்கொண்டு உலகை இருட்டாக்காதீர்கள். மனித முயற்சியும், கடவுளின் கருணையும் இணைந்தால் வாழ்வில் மகிழ்ச்சி எனும் ஒளி உண்டாகும்."

"நம்பிக்கையில் முழுமையாக இருக்க வேண்டும். அரைகுறை நம்பிக்கைகள் ஆபத்தானவை.

கடவுள் நம்பிக்கையை நாம் முழுமையாகக் கொண்டு பக்தி செலுத்த வேண்டும்.

தன்னம்பிக்கை தாரம் மாதிரி! கடவுள் நம்பிக்கை தாய் மாதிரி. இரண்டோடும் இருப்பதுதான் சரியான வாழ்க்கை.

தன்னம்பிக்கை ஆணவமாகி, கடவுள் எதிர்ப்பு பிதற்றலாக மாறுகிற போது தாரத்திற்காகத் தாயை கொல்கிற பாதகர்களாக நாம் மாறுகிறோம்.

நாம் செய்யவேண்டிய வேலைகளைச் செய்யாமல், கடவுள் செய்யட்டும் என்ற சோம்பிக் கிடப்பது, கட்டிய மனைவியை கட்டிலில் பட்டினி போடும் பேடித்தனம்.

எனவே தன்னம்பிக்கை மற்றும் கடவுள் நம்பிக்கை இரண்டும், முன்னேற்றத்திற்கு நம் இலக்கை அடைவதற்கு அவசியம்.

"என்னால் முடியும் என்ற தன்னம்பிக்கையும் இறைவன் துணை நிற்பான்" என்ற கடவுள் நம்பிக்கையும் கொண்டு செயல்படுவோம்.

நல்லன நடக்கும் என்ற பொது நம்பிக்கையும் இருந்தால் வாழ்க்கை நிச்சயம் வளமடையும் - ஆங்கிலக் கவிஞர் ஜீன்ஸ்.

"தன்னால் அடையமுடியாத நன்மை ஒன்றை மற்றவர்கள் அடைந்தால், அதைக்கண்டு சகியாத மனநிலைக்குப் பொறாமை" என்று பெயர்.

ஒரு மனிதனுடைய மேன்மையை எல்லாம் பொறாமை தேய்த்து விடுகிறது.

மற்றவர்களது முன்னேற்றத்தைக் கண்டு மகிழ்கின்ற அளவே ஒரு மனிதன் தானும் முன்னேற்றம் அடைகின்றான். - பகவத்கீதை. (தொடரும்)

# காமராஜர் ஒரு சகாப்தம்

### விடுதலை வேள்வியில் காமராஜ்

காமராஜ் எவரையும் ஒருமுறை பார்த்துப் பேசினால் அவர்களை மறக்காமல் நினைவில் வைத்துக் கொள்வார். பிற சமூகத்தவர்களுடன் நல்ல பழக்கம் வைத்துக் கொண்டதால், காமராஜூக்குப் பிற சமூகத்தவரும் நல்ல நண்பர்களாக இருந்து பல காரியங்களில் துணை நின்றார்கள். தெப்பக் குளத்தின் மேற்குக் கரை கைப்பிடிச்சுவர் அருகில் நண்பர்களுடன் இருந்து பேசும் காமராஜ், வடக்குக் கைப்பிடிச் சுவர் அருகில் இருந்து பேசும் ஜஸ்டிஸ் கட்சியினரின் பேச்சையும் கூர்ந்து கவனிப்பது உண்டு. காலையில் உடல்பயிற்சி, கடைவேலை, மதிய உணவுக்குப் பின் ஓய்வு, மாலை உலாவல், வாசகசாலை சென்று படித்தல், இரவு தெப்பக் குளம் கைப்பிடிச்சுவர் அருகில் நண்பர்களுடன் விவாதம் எனக் காமராஜ் செயல்பட்டுக் கொண்டிருந்தான். ஞானம்பிள்ளை கடைப்பக்கம் செல்லத் தவறுவதில்லை.

அப்படி ஒரு நாள் சென்றபோது ஞானம்பிள்ளை "இந்த முறை பம்பாய் அண்ணாச்சி கதர் உடை உடுத்தி வருவார்" என்று கூறிக் கொண்டிருந்தார். காமராஜ் அதைக் கேட்டுக் கொண்டே ஆர்வமாகத் திண்ணையின் ஒரு பக்கமாக அமர்ந்தான். அந்தக் காலத்தில் பெரியவர்கள் மட்டுமே அங்குத் திரண்டு, பேசப்படுவதை ஆர்வமுடன் கேட்பார்கள். இளைஞன் காமராஜைக் கண்டதும், அவன் ஆர்வத்தை எண்ணி மகிழ்ந்து, "தம்பி! நல்லா உட்காரேன்" என்றார் ஞானம்பிள்ளை. அங்கே காந்தியடிகளின் செயல்பாடுகள் குறித்தும் கதர் இயக்கம், மதுவிலக்கு, தீண்டாமை ஆகியன பற்றி நாடு முழுவதும் காந்தியடிகள் பரப்பி வரும் கொள்கை விளக்கங்கள் பற்றியும் விவாதித்தார்கள். காமராஜ் கடைக்குச் செல்ல வேண்டும் என்பதை மறந்தான். வீடு திரும்பும்போது, தன் மாமாவின் மனம் வருந்தாதிருக்கக் கடைப்பக்கம் தலையைக் காட்ட எண்ணினான். ஞானம்பிள்ளையும் வீட்டிற்குப் புறப்பட்டார். அவரோடு பேசிக்கொண்டே புறப்பட்டவன், அவர் வீடுவரை சென்று விட்டான். ஞானம்பிள்ளை அதிகமாக வற்புறுத்தவே, அவர் வீட்டிலேயே இரவு சாப்பாட்டை முடித்துவிட்டு, இரவு பதினோரு மணிக்கு, சற்று மனநடுக்கத்தோடு வீடு திரும்பினான். குடும்பத்தவருடன் காத்திருந்த தாய்மாமன், 'இவனை விட்டுத்தான் பிடிக்க வேண்டும்' என எண்ணி, "என்ன தம்பி? இன்றைய கூட்டத்தில் யார் பேசியது?" என்று கேட்டார். அவர் குரலில் கடுமையோ கண்டிப்போ இல்லை!

காமராஜ் அரசியலில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கினான். அதனால் அவன் தோழர்களும் கூட்டமாகக் காங்கிரஸ் இயக்க நடைமுறைகளில் அக்கறை கொள்ளத் தொடங்கினார்கள். காமராஜின் மிக நெருங்கிய நண்பர்களுள் ஒருவனான தங்கசாமியின் மிளகாய் மண்டிக்கு அருகில் இருந்த சங்கிலி கருப்பன் கோயில் அருகில், காமராஜும் தோழர்களும் கூடி அரசியல் விவாதம் நடத்துவது வழக்கமாயிற்று. காங்கிரஸ் செயல்பாடுகளில் அதிக ஈடுபாடு கொண்டபின் ஜஸ்டிஸ் கட்சிக் கொள்கைகளை எதிர்த்து வெளியிடும் நோட்டீஸ்களில் 'இப்படிக்கு சங்கிலி கருப்பசாமி' என்று போடுவதையும் வழக்கமாகக் கொண்டார்கள். இரவு வேளைகளில், தன் வீட்டை அடுத்திருந்த முதியவர்கள் தேடிவந்து உள்நாட்டு, வெளிநாட்டு நடப்புகள் குறித்துக் கேட்டு, விவாதிக்கின்ற அளவுக்குக் காமராஜின் அறிவும் ஆற்றலும் வளர்ந்திருந்தன. காந்தியடிகள் "எல்லாரும் கதர் அணிய வேண்டும்" என வற்புறுத்திக் கொண்டிருந்த நேரம் அது! பம்பாய் அண்ணாச்சி இந்த முறை விருதுபட்டி வந்தபோது கதர் உடுத்தி வந்தார் எதிர்க்கட்சியினரும் பாமரர் சிலரும் "கோணிச் சாக்கு டோய்...! கோணிச் சாக்கைப்போட்டுக்கிட்டு வெள்ளைக்காரனை விரட்டப் போறாங்களாம் டோய்......!" என்று கேலி பேசினார்கள். அதை எல்லாம் பொருட்படுத்தாத பம்பாய் அண்ணாச்சி, ஞானம்பிள்ளை பொடிக்கடைத் திண்ணையில் வந்து உட்கார்ந்தார். கதர் இயக்கம், அன்னியரின் ஆதிக்கவெறி, ரௌலட் சட்ட மசோதா, சத்தியாக்கிரக சபை அமைப்பு குறித்தெல்லாம் விரிவாக விளக்கினார். ஆர்வ மிகுதியோடு அவற்றை எல்லாம் கேட்ட காமராஜ், அன்று இரவு வீடு திரும்பிச் சாப்பிட்டுப் படுக்க ஒரு மணியாகிவிட்டது.

ரௌலட் சட்டத்தை எதிர்த்து, நாடெங்கும் நடைபெற்ற கிளர்ச்சிகள் குறித்த செய்திகளைக் காமராஜ் பத்திரிகைகளில் உன்னிப்பாக படித்து அறிந்தான். சுதேசமித்திரன் பத்திரிகையில் முக்கால் பக்கத்தை அடைத்துக் கொடிருந்த ஜாலியன் வாலாபாக் படுகொலை குறித்த செய்தியை ஞானம்பிள்ளை பொடிக்கடை திண்ணையில் படித்தபோது வழக்கத்திற்கு அதிகமாகக் கூடிய பெருங் கூட்டம் கொந்தளிப்பு அடைந்தது.

தொடரும்...............




அரிசி மொத்த வியாபாரம்.

செல்:9840994451, 26380752 / 73.



**சிவசக்தி ரைஸ் டிரேடர்ஸ்**

286, சி.டி.எச்.ரோடு, செல்வராஜ் காம்ப்ளக்ஸ், ஆவடி, சென்னை-54.

**செல்வராஜ் சூப்பர் மார்கெட்**

286/1, சி.டி.எச்.ரோடு, ஆவடி, சென்னை-600 054.selvarajsupermarket@gmail.com







சிறுநாடார் குடியிருப்பு தெய்வத்திரு.சு.ராஜகனி நாடார் அவர்களின் மனைவியும் எனது தாயாரும் ஆன திருமதி.ரா.ரதி. அம்மாள் (எ) ரதிகுண ஜெயநாயகி அம்மாள் 31.1.2024 அன்று மதியம் 1மணியளவில் இறைவனடி சேர்ந்தார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.
செய்தி. ஆர்.எஸ்.பாண்டியன் (எ) ஆர்.சுந்திரபாண்டியன் 7200989111.



திரு.கி.மு.மரியந்தோணி பூம்புகார் நூலாசிரியர் பூநூல் அணி கிராமணியார், நில அளவு தொழிலுடையார் மற்றும் திருநிறை மங்கை ஜேசுமரியாள் பொறுமையின் சிகரம். ஏழ்மையின் எழிலகம். இவர்களின் கனிஸ்ட்ட புதல்வன் திருநிறைச் செல்வன்.

**திரு.ஈகிள் பிரதாப்சிங்** இலக்கண வாழ்வு, இலக்கையின் கூர்மை, கூர்மையில் ஈகிள் டைரி தொழிலதிபர்! வடவை மாநகர மண்ணின் மைந்தர், வடவை வளர்ச்சியில் கொடை வள்ளல் மனித மாணிக்கம்! உழைப்பில் உயர்ந்த உத்தமர், தன்நம்பிக்கையில் தனித்துவர். பாப்பி என்ற திருமங்கையை மணந்து மலர்ந்தவர், அரும்பெரும் இரு இராஜ மகன்களையும் அன்பு மருத்துவ ராணி மகளையும் பெற்று வளர்த்த மாபெரும் உத்தம செல்வந்தர், குணவதிகளான இருமருமகள்கள், குணவதனான அருமை மருமகன் செல்லப் பேரன்கள், பேத்திகளையும் கொண்ட திருவருள் கி.மு.ம.பிரதாப்சிங் எங்கள் கிராமணியார் குடும்ப குலமகன், அழியா மாணிக்கம், எங்கள் இரண்டாம் பெரியண்ணாச்சி, **பிரிவை**

**என்றும் நினைவில்!**

**அருமை தங்கை பெரியப்பா மகள் கிராமணியார்**

**ஜெயசீலிஸ்டீபன்.**

**ஜெயசீலி ஸ்டீபன் மற்றும் மகன் மகள்கள்.**




வடவைக்கே பெருமை, ஆலயமாம் திருக்குடும்பம்!
வடவையோர் அருமை, முதல் முனிசீப் எனுங்குடும்பம்!!!
காமராஜ் புகழின் மகுடமே,
நாடேறும் கல்விக்கு உமது புகழ் உச்சியே அதுதான் அச்சுக்கூடம்.
கல்விக்கண் திறக்கும் ஆயிரமாம் புத்தகம்!
பூம்புகார் பதிப்பகமோ, அவற்றிலே மணி மகுடம்!!
அதுதான் எங்கள் பிரதாப் சிங் அண்ணா!!
உம்புகழ் கூற ஒருயுகம் போதா!!
வடவையின் பெருமையொன்று தெரசாள் உயர் நிலைப் பள்ளி!
துணைக்கட்டடம் எழும்பவே கொடுத்தாயே அள்ளி!!
வடவையிலே பிறந்து சேர்த்தாய் புகழ் தென்கோடி!!
நூலாயிரம் சென்றதோ உலகின் மறுகோடி!!
பலநூறு மக்கள் தேடி வந்தார் உமை நாடி!
தொழில் வளம் வழங்கி சேர்த்த புகழ் பல கோடி!!
வடவையின் நிழற்குடை உம்புகழ் பாடுது!
ஏழைகள் உதவியால் உம் புகழ் கூடுது!!
உலகம் உள்ளவரை உம் புகழ் நிலைத்திடும்!
எங்களின் மனங்களோ அதனால் திளைத்திடும்!!

**வடவை.சந்திரகுமார். மாதவின் குரல் வடவை.**




# கண்ணீர் அஞ்சலி



வடவைக்கன்குளம்
எம்.எம்.தாசன்
அவர்கள்
பிறப்பு:18.5.1941
இறப்பு:2.1.2024

### 7.அமெரிக்கா:ஓர் இனிய அனுபவம்

## யுனிவர்சல் ஸ்டூடியோ:

அடுத்து மறுநாள் யுனிவர்சல் ஸ்டூடியோ புளோரிடாவுக்குச் சென்றோம். இங்கே சினிமாவில் தந்திரக் காட்சிகள் எப்படி எடுக்கிறார்கள் என்பதை விளக்கினார்கள். பிறகு 3D கண்ணாடி அணிந்து திரைப்படம் பார்த்தோம் கத்தியால் குத்துவது, விளக்கை வீசி எறியும் போது நம்மை நோக்கி விளக்கு வருவது. புறாக்கள் நம் தலையில் அமர்வது, அதன் இறக்கைகள் நம் தலையில் அமர்வது போலவும் தோன்றியது. படம் பார்க்கும் போது வீட்டு விலங்குகளை எப்படி பழக்குகிறார்கள் என்பதையும் வேடிக்கைப் பார்க்க வந்த ஒரு பையனையும் பெண்ணை வைத்து செய்து காட்டினார்கள். மிக நன்றாக இருந்தது. நட்சத்திரக் கூட்டங்களையும் பேய்களையும் இருட்டில் பார்க்க வைத்தார்கள். மேலும் பரபரப்பான பல காட்சிகளையும் பார்க்க முடிந்தது. நில நடுக்கம் எப்படி ஏற்படுகிறது என்பதையும் திரைப்படத்தில் காண்பித்தார்கள்.

எங்களை ரயிலில் அமர வைத்து நிலநடுக்கம் ஏற்பட்டால் எப்படி இருக்கும் என்பதைக் காண்பித்தார்கள். பஸ் கவிழ்ந்து எங்கள் ரயிலை நோக்கி வருகிறது. இருபுறம் தீ எரிகிறது கடல் நீர் வெள்ளம் போல் பெருகி ரயிலில் இருப்பவர்கள் மீது தெறிக்கிறது. வண்டி சற்று திடீரென்று பள்ளத்துக்குள் விழுவது போல் செய்தார்கள். திகிலாக இருந்தாலும் திரில்லாக இருந்தது.

மறுநாள் அட்லாண்டா சென்றோம். முரளியின் மாமனார் சேகர் மூர்த்தியின் குடும்பத்தினர் எங்களை தங்கள் இல்லத்திற்கு அழைத்துச் சென்று விருந்தளித்தனர்.

அட்லாண்டா தூய்மையான நகரம். வீதிகளில் மேடு பள்ளம் இல்லை. வீடுகள் தோறும் நிறைய பூச்செடிகள் காணப்பட்டன. கறுப்பின மக்களும் வெள்ளையர்களும் இங்கே கலந்து வாழ்கிறார்கள். "ஒரு மலையில் நடந்த லேசர் ஷோ (ஒலி-ஒளி நிகழ்ச்சி) பார்த்துவிட்டு 11மணி முதல் வீட்டை அடையும் வழி தெரியாது. சுற்றித் திரிந்து விட்டு அவர்கள் வீட்டை அடையும் போது இரவு 1மணி ஆகிவிட்டது.

மறநாள் காலை 8 மணிக்கு மீண்டும் எங்கள் சுற்றுலா ஆரம்பமானது. பின்னர் சிகாகோ வந்தோம். அங்கே காத்திருந்து, இன்னொரு விமானம் ஏறி சால்ட்லேக் சிட்டியை வந்தடைந்தோம். பிறகு இரவு 8 மணிக்கு லாஸ்ஏஞ்சல்ஸ் வந்தோம். இருள் சூழாத நேரம். ஒரு ஜப்பானிய ஓட்டலில் தங்கினோம். நண்பர் பாலாஜியும் அவரது மனைவியும் எங்களை அழைத்துச் சென்று ஏர்போர்ட் பார்க் வியூ ஹோட்டலில் தங்க வைத்தனர். அது ஒரு ஜப்பான்காரர் நடத்தும் ஹோட்டல். 4 நாட்கள் அங்கே தங்கினோம். லாஸ்ஏஞ்சல்ஸ் நகரம் கலிபோர்னியாவின் தலைநகரம். வாடகைக் காரில் ஊரை சுற்றிப் பார்த்தோம். ஸ்டூயோக்கள் அதிகம் உள்ள ஊர். நடிகர் நடிகைகளும் இங்கே அதிகம். ஒரு பக்கம் மலையும் மறுபக்கம் கடலாகவும் உள்ள நகரம். சுத்தமாக இருந்தது. மரங்கள் அதிகம். துப்புரவு வேலை பார்ப்பவர்கள், கூட்டி பெருக்குபவர்கள் பேண்ட், சட்டை, கோட்டு அணிந்து கொண்டு உண்மையாக வேலை பார்க்கின்றனர். கழிப்பறைகள் மிகவும் தூய்மையாக இருந்தன. பல வகையான குழாய்களில் தண்ணீர் வந்தது.

லாஸ்ஏஞ்சல்ஸ் நகரைச் சுற்றிப் பார்க்கும் போது சாந்தா மாளிகா எனும் பகுதியையும் காட்டினார்கள் சுற்றுலா ஏற்பாட்டாளர்கள். லாஸ்ஏஞ்சல்ஸ் கடற்கரை சுத்தமாக இருந்தது. மக்கள் ஞாயிற்றுக் கிழமைகளில் கடலில் குளிக்கிறார்கள். மாலையில் சூரியக் குளியலும் கடற்கரையில் உண்டு. காலில் சக்கரம் உள்ள ஷூ அணிந்து ஆணும் பெண்ணும் வேகமாகச் சாலையில் செல்கிறார்கள் அல்லது சைக்கிளில் செல்கிறார்கள். பின்னர் அரிஸ்ட்டோ கிராட்டிக் ஏரியாவுக்குச் சென்றோம். எலிசபெத் டெய்லர், புரூனை இளவரசர், சார்லி சாப்ளின் போன்றோர் வாழ்ந்த மாளிகைகளைப் பார்த்தோம். ஜூராஸிக் பார்க் படம் எடுத்தவரின் மாளிகையையும் காட்டினார்கள். திரைப்பட நடிகரும், அமெரிக்க ஜனாதிபதியும் ஆன ரொனால்ட் ரீகன் வீட்டையும் பார்த்தோம்.

நம்மூரில் இல்லாத அளவுக்கு பூச்செடிகள், பூக்கள் காணப்பட்டன. ஒரு ரோஜா செடியில் 100பூக்களை பார்க்க முடிந்தது. சாலையை எவரும் அசுத்தம் செய்வதில்லை. காக்கைகளை காண முடியவில்லை. ஆங்காங்கே சிட்டுக் குருவிகளும் அணில்களும் காணப்பட்டன. புறாக்கள் நிறைய காணப்பட்டன. மக்கள் புறாக்களிடம் பெரிதும் அன்பு காட்டுகிறார்கள். இன்னும் பல இடங்களைப் பார்த்தோம். சட்டை வாங்கச் சென்றோம். விலை 12 ஆயிரம், 14,400 ரூபாய் என்றார்கள்.




ஒரு தெருவில் சவுக்கு மரம் இருபுறங்களிலும் என்றால் வெவ்வேறு தெருக்களில் வெவ்வேறு மரங்கள் வளர்க்கப்பட்டிருந்தன. குழந்தைகளும் ஆணும் பெண்ணும் கொழு கொழுவென்று ஆரோக்கியமாக, அழகுடன் இருந்தார்கள். பெரும்பாலான பெண்கள் பேண்ட், சட்டையிலும், பேண்ட் ஜாக்கெட்டிம், பேண்ட் பிராவுடனும் இருந்தனர். யாரும் அடுத்தவர்களைக் கண்டு கொள்வதில்லை.

- தொடரும்............



# சித்ரா வாட்ச் கம்பெனி

# CHITHRA WATCH COMPANY



SALES & SERVICE TITAN. SONATA, AJANTA
Expert repairers of world Famous Rolex, Rado, Omega Seiko, Citizen and other Indian Watches, Til

Shanthi Complex, No:63/26, Ranganathan Street, (Very Near Mambalam Railway Station (opp.to Rameswaram Road), T.Nagar, Chennai-17. Ph:24348524.

திருமணப்பட்டு
ஜவுளிகளுக்கு.........

# ராஜ்மஹால்

வெங்கலக்கடைத் தெரு,
மதுரை-1. போன்: 2622647, 2666666.
தொட்டுத் தொடரும் ஒரு
பட்டுப் பாரம்பாரியம்.

# EAGLE PRESS

**Ph:25952694**

**"DIARY HOUSE"**

35, M.S. Koil Street, Chennai-13.
Tamil Nadu
email:
eagle@giamd01.vsnl.net.in
www.eaglepressgroup.com



எங்கள் பாசமிகு அண்ணன்
இன்னும் பல நூற்றாண்டு
பிறந்த நாள் காண எங்கள்
குழுமம் சார்பாக வாழ்த்துக்கள்

**Prop. N.R.Anthonydass**

# RATHINAM HARDWARDES & ELECTRICALS

69, Valluvarkottam High Road,
Nungambakkam, Chennai-34 Ph: 2827 8619, 28215768



# ஒப்பற்ற அண்ணாச்சி ஜோசப் பிரதாப்சிங். அவர்கள்

## இரங்கல்: அன்னக்கிளி ராசையா.. மலேசியா.

எப்படி மறப்போம் உமை நாங்கள்
ஒப்பில்லா மாணிக்கமே!
வடவையின் பாரம்பரிய கிராம முனிசீப்
வாரீசல்லவா நீங்கள்! நமதூரின்
கிராமணியார் குலத்துக்கோபுர கலசமாய்
அல்லவா ஒப்பரிகையில் இருந்தீர்!

அச்சித் தொழிலை நிறுவி, ஆயிரக்கணக் கானோரைத் தேடித் தேடி பரிவுடன் வேலைக்கழைத்து பிழைப்பைக் கொடுத்த நீங்கள், உங்கள் புத்திக்கூர்மையால் பல தரத்தில், டைரிகளை அச்சிட்டு தாய்நாடு முழுவதுமின்றி நாடுகள் நாற்றிசையினரிடையேயும் புழங்கவிட்டு அதன் வழி உலகப் புகழ் பெற்றீர்களே!

தாய் மொழியாம் தமிழ் மேல் கொண்டப் பற்றுதலினால் அரும்பெரும் நூல்கள் பதித்து வெளியீடு செய்தவற்கென பூம்புகார் எனும் பிரசுரம் அமைத்து அறிதான பல நூறு நூல்களைச் சமைத்தளித்தீரே தமிழ்கூறு நல்லுலகிற்கு!

நமதூரில் பேருந்து நிற்கும் இடமதிலே கடும்வெளியில் மக்கள் காத்து நிற்க மனம் கொள்ளா நீங்கள் அவ்விடத்திலே உமது தந்தையும் எனது சின்னைய்யாவுமான மரியந்தோணி நாடார் அவர்களின் பெயரால் நிலையான நிழல் குடையொன்று கட்டிவைத்துள்ளீரன்ரே! பெற்ற தாயும் பிறந்த பூமியும் நற்றவ வானினும் நனிச் சிறந்ததென்பதை உறுதியாய் உள்ளத்தில் பதித்து உங்களுக்கிருந்த பொருட்ச் செல்வத்தால் நமது, ஊரிலும் தமிழகத்தில் பல இடங்களிலும் நீங்கள் செய்திருக்கும் அருந்தொண்டுகள் தான் எத்தனை எத்தனை?

அண்ணாச்சி நாமெல்லாம் இளமையாய் இருந்த போது உங்கள் அம்மா சேசுமரியாயி சித்தியும் உங்கள் அக்காள் தங்கப்பழம் அக்காளும் வீட்டின் கஷ்ட நிலையில் காட்டிலும் வீட்டிலும் கடுமையாக உழைத்து உங்களை படிக்கவைத்து ஆளாக்கியதை பாசத்தோடு மனதில் பதித்து, நீங்கள் மேல்நிலைக்கு வந்தபோதும் உங்கள் வீட்டின் முதல் வரவேற்பறையின் நடுவிடத்தில் தடையக் காதோடிருந்த உங்கள் அம்மாவின் படத்தையல்லவா முக்கியத்துவம் வாய்ந்ததாய் அணிந்திருந்தீர்கள்!

அண்ணாச்சி நமது கிராமணியார் குடும்பங்களுக்கு மட்டுமல்லாது தமிழக மக்கள் எல்லோருக்குமே எடுத்துக்காட்டாய் வாழ்ந்து,

இவ்வுலகை விட்டு பிரிந்து செல்லும் நேரம் வந்ததும் சென்றுவிட்டீர்கள்!

உங்கள் விசுவாசத்தை நல்லவிதமாய் காத்துக் கொண்டீர்கள்.

உங்கள் ஆன்மா இறை அரசில் நித்திய இளைப்பாற்றிலிருக்க இறைவன் அருள்புரிய மன்றாடுகிறேன்.

அன்னக்கிளி ராசையா.. மலேசியா.


விலைகுறைவு! R.Suresh Ph: 2226 6961, 22266962 மனநிறைவு!

AMUTHA & CO



Sony, L.G, TCL, SamSung, Onida,Sun sui, Akai, Philips, Panasonic, IFB, WhirlPool, Godrej, Kenstar,Kelvinator,Hitachi, Carrier, Voltas, Videocon, Electrolux, Tatasky, Big Tv, Aritel, Sun Direct, ULTRA, Sowbaghya, Amirtha, Akshaya, Lakshmi, Preethi, ButterFly, Usha, Khaitan, Crompton, Orient, Almonard, Havells



1, Venkatesan Street, Shanmugam Road, Tambaram West, Chennai-45.





GSTIN:33ATNOJ914691ZY

ஸ்ரீ முத்துமாலை அம்மன் துணை

போன்:044-45004771, செல்: 8610104055

JAYA SANKAR FANCY STORES



NO: 440.
Thiru.Vi.Ka.Nagar,
Sembiam,
Chennai-600 011.

# மானாடும் மானாட்டாரும்: கி.பி.1600 விடியலிலிருந்து-10

கி.பி.17ஆம் நூற்றாண்டின் நடுவில் தென்பாண்டி நாட்டு நிலவுடைமைச் சமூக நாடன்களிமிருந்து அவர்கள் நிலங்கள் மேல்வரிப் பளுவை ஏற்படுத்தி அந்நிலங்களை அன்றைய காலகட்டத்து மூவர் கூட்டணியான நாயக்கர், பிள்ளைமார், மறவர் இவர்களில் பிள்ளைமார் வசம் மாற்றிக் கொடுத்த ஆவணங்கள் சில பதிவாகி உள்ளன.



அவற்றுள் கி.பி.1642ஆம் ஆண்டில் கொற்கைப் பகுதி வெள்ளைக் கோவில் வலங்கை உய்யக்கொண்ட நாடன்களின் நிலங்களை அடிமைகளுடன் விலைக்குத் திருவைகுண்டம் கள்ளபிரான் கோவில் சீபண்டாரக் காரியம் செய்வார் சிலருக்கு அப்போதைய திருமலை நாயக்கனின் தென்பாண்டி நாட்டுச் சார்பாளனான வடமலையப்பபிள்ளை மாற்றிக் கொடுத்ததை இந்தியன் நாடார் முரசின் 2024ஆம் ஆண்டு ஜனவரி மாத இதழில் எழுதியிருந்தேன்.

தொட்டடுத்த 1646 ஆம் ஆண்டு இதே வடமலையப்ப பிள்ளையன் திசையன்விளை அருகிலுள்ள மடத்து அச்சம்பாடு என்ற ஊரையே திருவைகுண்டம் ஊர் கயிலாயநாத சுவாமி கோவிலுக்குச் கிரையம் செய்து கொடுத்தது மடத்து அச்சம்பாடு தேவபிச்சை என்பாரின் தோட்டத்தில் நாட்டப்பெற்றுள்ள கல்வெட்டில் பதிவாகியுள்ளது.

இந்தக் கல்வெட்டு ஆவணம் சின்னநாடான் குடியிருப்பு ஜகநாதனால் கண்டறியப்பட்டு, தொல்லியல்துறை அறிஞர் ஐயா சீ.இராமச்சந்திரன் அவர்களால் படி எடுக்கப்பட்டு, படிக்கப்பட்டு என்னிடம் ஒரு பிரதியை அவர் கொடுத்ததின்பேரில் நான் 2001ஆம் ஆண்டில் ஆங்கிலத்தில் வெளியிட்ட என் நூலான மானாடு-மான வீர வளநாட்டுச் சமூக வரலாறு என்பதில் 110,11ஆம் பக்கங்களில் அச்சிட்டு வெளிப்படுத்தினேன்.

2021இல் நான் எழுதி வெளியிட்ட நிலமைக்காரர் எனும் பிற்கால மூவேந்தர் எனும் நூலின் இரண்டாம் தொகுதி பக்கம் 152முதல் 156வரை அச்சிட்டு அடுத்துவரும் பக்கங்களில் ஆராய்ந்துள்ளேன். அக்கல்வெட்டு வருமாறு:-

மடத்து அச்சம்பாடு கல்வெட்டுகள்:

முதல் கல்வெட்டு:-

1.சீவைகு, 2.ந்தம்கயி, 3.லயா னா, 4.தர்சுவா, 5.மி திருவி, 6.ளை யா(ட்டம்).

இரண்டாம் கல்வெட்டு:- முன்புறம்.: 1.சகாத்தம் 1568ன்செ 2.மற்செல்லாநின்ற கொல்லம்,3.821ஸ்ரீசர்வ சித்த ஸ்ரீ கார்த்திகை 4.க மீயக உஅபர பக்கிசத்து துரதிகை, 5.சயும் சுக்கிர வாரமும் அமுதயோக, 6.மும் தியா...கரணமும் பெற்ற மிருக, 7.சீரிடத்து நாள் செய்த உத, 8.க பூற்வ தானப் பிறமாணப்பட், 9.டையமாவது திருவழுதி வளநாட்டுச், 10.சீவைகு (ந்தமு) டைய சுவாமி கயி, 11.லாய நாதர்.... கால சந்தி, 12..... திரு, 13.மாலையன்...கும்படிக்கு, 14.சுவாமி கயிலாயனாதர் கோவில்(ச்) 15.சீபண்டார காரியஞ்செய்வார்களு 16.க்கு மானவீர வளநாட்டுத் தென் பற்றா 17.ன கு(ல)லசேகரன் பட்டிண மாகாணி 18.சேனையுகந்தான் பட்டணத்து உத 19.ய மார்த்தாண்டன் பெருந்தெருவில் 20.குமார சுவாமியா பிள்ளை மூப்பனா 21.ரும் பள்ளக்குறிச்சி முதலி நயினாபிள் 22.ளையும் அரசி மீண்டான் கிணறு மாத் 23.தாண்ட பிள்ளையும் கூத்தாடி நல் 24லூரிலிருக்கும் கரையாளனும் 25.வீர மார்த்தாண்ட நல்லூர் அடை 26.க்கலங் காத்தா பிள்ளையும் மற்று 27.ம்உண்டான நாட்டாரும் குட்டம் 28.சந்திராதிச்ச னாடானும் கொம்ம 29.டிக்கோட்டை திருப்பாப்பு னாடா 30.னும் படுகைப்பற்று அருதகுட்டி 31.ஆதிச்சனாடானும் மாதவன்குறி 32.ச்சி திருக்கைவேலாதிச்ச னாடா 33.னும் பெரிய கண்டன் வடலி வீர 34.மாத்தாண்ட னாடானும் மற்றும் உ 35.ண்டான நாடாக்களும்மோம் நிறை 36.றவற நிறைந்த குறைவறக் கூடிக் 37.கிறைய உதகபூர்வ தானப் பிறமா 38.ணப்பட்டய மெழுதிக் குடுத்த 39.. தில் நான்கெல்கைக்குட்பட்ட 40.குடியும் கீழ் நோக்கின கிணறும் 41.மேல்நோக்கின மரமும் நத்தமும் 42.நத்தைப்பாடும் தேன்படு பொழு 43.துவும் மீன்படு பள்ளமும்நிதிநிட்ட 44.டுசெயமும் மற்றும் யெப்பெயற்ப 45.ட்ட சொற்பதார்த்தமும் உள்படக் கிை 46.றய உதக பூறுவ தானப்பிறமாண 47........

பின்புறம்:-

1.ண்டு இந்தக் கிறாமத்திலே நாலிகுச 2.ாதியும் பல

டாக்டர் ஆ.தசரதன் 9444169603.

பட்டடையும் கடையும் க 3.டைத்தெருவும் வைத்து செக்கும் 4.போட்டுக் கொண்டு வெகு குடியேத்த 5.வளம பண்ணிக் கொள்ளுவாராக 6.வும் இந்தக் கிறாமத்திலே வருகிற 7.பகுதி மேடை விலாட மென்று அரம 8.னையார் கூட்டின இறைகளும் சில்வரி 9.பெருவரி ஊழியப்பாளியும் ஆள் அ 10.மஞ்சி இஞ்சது வரிஞ்சது சகலமும் ந 11.ாங்களே மேல் வைத்து இறுத்துக் கொடுப் 12.போமாகவும் இந்தக் கிறாமத்தை இ 13.யாதாமொருவர் பரிபாலனம் பண்ணி 14.நடத்தி வந்த பேர்கள் சாலோக சாமீ 15.ப சாரூப சாயுச்சிய பதவியும் கெங் 16.கைக் கரையிலே அசுவ மேத யாக 17.மும் பண்ணின பலனும் பெறக்கடவா 18.ராகவும் இந்தக் கிறாமத்துக்கு அகுதம் 19.பண்ணின பேர்கள் கெங்கைக் கரையி 20லே காராம் பசுவைக் கொன்ற தோ 21.ஷத்திலும் சன்னியாசியள் தலையிலே 22.நெருப்பிட்டெரித்த தோஷத்திலும் தன் 23.மாதாபிதாவை தன் கய்யினாலே 24.அடித்துக் கொன்ற தோஷத்திலும் பே 25.கக் கடவாராகவும் இப்படி சம்மதித்து 26.கிறய உதக பூர்வ தானப் பிறமாண 27.பபட்டைய (ம்) எழுதிக் குடுத்தோம் சு 28.வாமி கைலாய நாதர் கோவில் (ச்)சீப 29.ண்டார காரியமம் செய்வார்களுக் 30.க்கு குல சேகரன் பட்டணம் மாகாணி 31.னாட்டார் குமார சுவாமியாபிள்ளை மூப் 32.பனாரும் முதலி நயினா பிள்ளையும் 33.மாத்தாண்ட பிள்ளையும் பெற்ற 34.கட்டி கரையாளனும் அடைக்க 35.லம் (ங்) காத்தா பிள்ளையும் மற்றும் 36.உண்டான நாட்டாரும் சந்திராதிச் 37.சனாடானும் திருப்பாப்பு னாடா 38.னும் அருத குட்டி ஆதிச்சனாடானு 39.ம் திருக்கைவேல் ஆதிச்ச னாட 40.னும் குளந்தை வீரமாத்தாண்ட நா 41.டனும் மற்றும் உண்டான நாடாக்களு 42.ம்மோம் இப்படிக்க பட்டய(ம்) எழு 43.திக் கொடுத்தோம் இப்படிக்கு குமாரசு 44.வாமி எழுத்து வெளிநின்ற பெருமாள் எ 45.முத்து முதலி (ந)யினான் பெற்றகுட்டி எழு 46.த்து செண்பகராமன் அடைக்கலங்காத் 47.தான் சந்திராதிச்ச நாடவான் எழுத்து 48.வீரமாத்தாண்ட நாடன் எழுத்து 48.அருதகுட்டி ஆதிச்ச நாடவான் எழுத்து 50.திருப்பாப்பு நாடவான் எழுத்து இப்படிக்கு 51.இவர்கள் சொல்ல இ 52.ந்தப்பட்டயம் எழுதிநேன் ம 53.ருதூர் வேளாளன் எழுத்து

இக்கல்வெட்டில் வரும் ஐந்து நிலைமைக்கார நாடன்கள்:-

மடத்துஅச்சம்பாடு ஊரைக் கிரையம் செய்து கொடுத்த பத்துப்பேர்களில் ஐந்து பேர்கள் ஐந்து நிலைமைக்கார ஊர்த்தலைவர்கள் ஆவர். நிலைமைக்காரர்கள் அரச குடியினர் ஆதலால் அரசன், அரையன், நாடாள்வான் போல நிலங்ளைத் தானமாக அளிக்கும் இயல்பு உள்ளவர் ஆவர். அதன்படி இந்த ஊரைப் பிற ஐந்து ஊர்த் தலைவர்கள் மற்றும் ஊர்க்காரர் சிலருடன் சேர்ந்து இந்த ஊரை இவர்கள் விலைக்கு வாங்த் தானம் அளித்துள்ளதாக அறியலாம்.

ஐந்து நிலைமைக்கார ஊர்த்தலைவர்கள் வருமாறு:-

1.குட்டம் சந்திராதிச்ச நாடான் (குட்டத்து உராரின் சமூக - வரலாற்றுச் செய்திகள் இந்த நூலின் 37ஆம் இயலில் விரிவாக உள்ளன).

2.கொம்மடிக்கோட்டை திருப்பாப்பு நாடான் (திருப்பாப்பு அரசர் வமிசமாயிருந்து, நாடாள்வான் நிலையை எட்டி, நாடான் நிலைக்கு வந்து, நிலைமைக்காரராக அமைந்தவர்களின் சமூக- வரலாற்று விளக்கம் இந்த நூலில் இயல் 28இலும் இயல் 35இலும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது).

3.படுகைப்பற்று அருத(ன)க்குட்டி ஆதித்த நாடான் (படுக்கப்பத்து நிலைமைகளின் தலைவராக இருந்த இந்த ஆதித்த நாடான் பற்றி 27ஆம் இயலில் விளக்கப்பட்டுள்ளது.)

4.மாதவன்குறிச்சி திருக்கை வேலாதித்த நாடான் (இந்த நூலின் இயல் 26இலும் இராசாங்கோவில் வழிபாட்டுக்காரர்கள் பற்றிய 42ஆம் இயலிலும் நிலைமைக்கார ஊர் பற்றியும் அது தொடர்பான வரலாற்றுச் செய்திகளும் இடம் பெற்றுள்ளன.)

5.பெரியகண்டன் வடலி)ஊரை உருவாக்கியவரும் வள்ளியூர் குலசேகரபாண்டியனின் தாயாதியுமான இந்நிலைமைக்கார நாடானைப் பற்றி 26ஆம் இயலிலும் 42ஆம் இயலிலும் விளக்கப்பெற்றுள்ளது.

6.மற்றும் உண்டான நாடாக்களும்" எனக் கல்வெட்டில் (24ஆம் 25ஆம் வரிகள்) வருவோர் மடத்து அச்சம்பாடு ஊர் வட்டாரத்தில் உள்ள நாடாக்கள் சிர் ஆவர்.

மடத்து அச்சம்பாட்டில் தொழில்சாதிகள்: இந்தக்

கல்வெட்டில் (கல்வெட்டின் பின்பக்கம் வரிகள் 1,2) இந்தக் கிராமத்திலே நாலிகு சாதியும் பலபட்டடையும் இக்கல்வெட்டில் குறிப்பிடும் ஐந்து ஊர்களின் தலைவர்களான நிலைமைக்கார நாடன்களைத் தவிர்த்து வேறு ஐந்து ஊர்களின் தலைவர்களான மானவீர வளநாட்டு வெள்ளாம் பற்றாரும் இடம்பெற்று உள்ளனர். தொழில் சாதிகளும் பலபட்டடைகளும் குறிப்பிடப்பட்டுள்ளனர். மடத்து அச்சம்பாட்டினர் மதுரை அரண்மனையாருக்குச் செலுத்த வேண்டிய வரிகளும் அவற்றை வசூலிப்போரும் இடம்பெற்றுள்ளன.

## என் தந்தை ஈகிள் எம்.ஜே.பிரதாப்சிங் அவர்கள்

## ஈகிள் ராஜாசுந்தர் சிங் அதிபர் ஈகிள் பிரஸ்.

திரு.ம.ஜோ.பிரதாப்சிங் நவம்பர் 20, 1931 திருநெல்வேலி மாவட்டம் வடக்கன்குளத்தில் திரு.மரிய அந்தோணி திருமதி.ஜேசு மரியம்மாளுக்கு மகனாகப் பிறந்தார். அவர் தூய தெரசா பள்ளி வடக்கன்குளத்தில் பள்ளிப்படிப்பை முடித்தபின் விவசாயம் செய்தார். அவரது தகப்பனார் “கிறிஸ்து வெண்பா” என்ற நூலை எழுதியுள்ளார். திரு.பிரதாப்சிங்அவர்களுக்கு புத்தகம் படிப்பதில் நாட்டம் உண்டு.



1949ஆம் ஆண்டு சென்னையில் அச்சகப் பணியில் சேர்ந்தார். 1954ஆம் ஆண்டு இவர் ஈகிள் பிரஸ் ஒரு Treadle இயந்திரத்துடன் தொடங்கினார். இது ஒரு வெகு சாதாரணமான தொடக்கம். கடைகளுக்கு பில்புக் அச்சிட்டுக் கொடுத்தார். பின் டைரிகள் அச்சிட ஆரம்பித்தார்.

கடவுள் பக்தி அதிகம் உண்டு கடவுளின் ஆசியும் கூடவே அவர்களின் பிரயாசப்பட்டதால் கைமேல் பலன் கண்டது. 1959ஆம் ஆண்டு அக்டோபர் 5ஆம் தேதி திருமதி பாப்பி அம்மையாரை கரம் பிடித்தார். அன்னார் அவர்களுக்கு உறுதுணையாக அச்சகத்தின் வளர்ச்சிக்கு உதவினார். திரு.பிரதாப்சிங் அவர்களின் கடின உழைப்பு. விடாமுயற்சியால் நல்ல தரமான டைரிகளை அச்சிட ஈகிள் பிரஸ் ஈகிள் டைரிகள் பிரசித்திப் பெற்றது.

1975 ஆம் ஆண்டு பூம்புகார் பதிப்பகம் தொடங்கி 1300 புத்தகத்திற்கு மேல் பதிப்பிட்டுள்ளார். திரு.முருகு தனுஷ்கோடி எழுதிய காமராஜர் ஒரு சரித்திரம் அவரது முதல் நூல் பதிப்பிக்கப்பட்டுள்ளது. அறிஞர் அண்ணா, கலைஞர் ஆகிய முன்னாள் முதல்வர்கள் இன்றைய முதல்வர் வரை அநேக நூல்கள் அச்சிட்டு பதிப்பகத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

ஈகிள் பிரஸ் கடவுளின் கிருபையால் நிறைய வளர்ச்சியடைய அநேக அச்சு எந்திரங்களை இறக்குமதி செய்தார். டைரிகளை அநேக மத்திய மாநில பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தார்.

ஈகிள் பிரஸ் தாய் கம்பெனியாக இருக்க மெட்ராஸ் செக்யூரிட்டி பிரிண்டர்ஸ் மற்றும் ஈகிள் பிரஸ் பிரைவேட் லிமிடெட், ஈகிள் சாப்ட்வேர், ஹில்ட் எனர்ஜி பிரைவேட் லிமிடெட் ஹில்ட் டிவென்ஸ் மற்றும் ஏரோஸ்பேஸ் மற்றும் ஹில்ட் லைப்சயின்ஸ் பிரைவேட் லிமிடெட் ஆகிய கம்பெனிகளை தொடங்கி வெற்றிகரமாக நடத்தினார்.

2010 ஜூலை 29ல் திருமதி.பிரதாப் சிங் அம்மையார் காலமானார். கோவிட் 19 தொடர்ந்து கடைசி வரை வீட்டில் இருந்து தனது நேர்மை கடின உழைப்பு, விடாமுயற்சி ஆகிய கொள்கையோடு அலுவல்களை வீட்டில் இருந்து கவனித்து வந்தார் கடந்த 18.1.2024 அன்று இறைவனின் நித்திய இளைப்பாறுதலுக்குள் இளைப்பாறுகிறார்.

அன்னாரை இழந்து வாடும் அவரது மூத்த மகன் திரு.ராஜா சுந்தர்சிங் மகன் டாக்டர் ஷீலா சத்தியகுமார் இளைய மகன் திரு.பிரசாத் மற்றும் மருமக்கள் பேரக்குழந்தைகள் கொள்ளு பேரக் குழந்தைகளுக்கு ஆண்டவர் தாமே சமாதானம் தருவாராக.

# மனித நேயம் மிக்கவர் திரு.பிரதாப் சிங் அவர்கள்.

-ஜி.கே.தாஸ்



ஈகிள் அச்சக உரிமையாளரும் மனித நேயம் மிக்கவரும் ஏழைகளுக்கு உதவும் கருணை உள்ளம் படைத்தவருமான திரு.பிரதாப் சிங் அவர்கள் இயற்கை எய்திய செய்தி மிகவும் அதிர்ச்சி அளிக்கிறது.

தனது 92வயதில் வயது மூப்பின் காரணமாக மரணம் அடைந்தாலும், அவருடைய இழப்பு மறக்க முடியாதது.

1986-ஆம் ஆண்டு மறைந்த முன்னாள் பிரதமர் வி.பி.சிங் அவர்கள் தமிழகத்தின் ஜூன் மோர்ச்சா இயக்கத்தை ஆரம்பித்த போது அதன் மாநில பொது செயலாளராக இருந்த நான் முதல் முதலில் திரு.பிரதாப் சிங் அவர்களை சந்திக்க நேர்ந்தது.

பின்னர் ஜன் மோர்ச்சா இயக்கம் ஜனதாதளமாக இணைந்து செயல்பட்ட போது அதன் மாநில தலைவர் தியாகி ஜி.ஏ.வடிவேலு அவர்களும், மாநில துணைத்தலைவர் M.C.டேவிட் அவர்களும் மாநில பொது செயலாளராகிய நானும் அவரை அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. எங்களுடைய நட்பு அரசியலை கடந்து சமூக சேவையிலும் தொடர்ந்து நீடித்தது. 1997ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பினரான மதர் தெரசா சாரிட்டபிள் டிரஸ்ட் ஆரம்பித்தபோது அதற்கு அவர் பல வகைகளிலும் உதவி புரிந்தார்.

திரு.ஜி.ஏ.வடிவேலு அவர்கள் எழுதிய வரலாற்று புதினம் “செம்மியர் திலகம்” என்ற நூல் இரண்டாம் பதிப்பு ஈகிள் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

திரு.பிரதாப் சிங் அவர்கள் சமூக நீதி கொள்கையில் அசைக்க முடியாத நம்பிக்கை உள்ளவராக இருந்தார்.

பெருந்தலைவர் காமராஜர், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் கருணாநிதி ஆகியோருடன் நெருங்கிய நட்பு வைத்திருந்தார்.

18.1.2024அவருடைய இல்லத்தில் வைத்திருந்த அவருடைய பூத உடலுக்கு அஞ்சலி செலுத்திய போது உண்மையிலேயே என் கண்களில் கண்ணீர் மல்கியது. பல பெரிய தலைவர்களின் இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில் கலந்து கொண்ட போது கூட எனக்கு இப்படிப்பட்ட துயரம் ஏற்பட்டதில்லை. அப்படி என்னிடம் அவர் நெருக்கமாக பழகி வந்தார்.

அவரை இழந்து வாடும் அவருடைய குடும்பத்தாருக்கும், நண்பர்களுக்கும் எனது இதய பூர்வமான அஞ்சலியை தெரிவித்துக் கொள்கிறேன்.






## ஈகிள் பிரஸ் நிறுவனர் பிரதாப்சிங் மறைவு
## என்.ஆர்.தனபாலன் இரங்கல்

நாடு விடுதலை பெறுவதற்கு முன்னரே, அதாவது 1931-ம் ஆண்டு நெல்லை மாவட்டம் வடக்கன்குளத்தில் பிறந்தவர் திரு.பிரதாப்சிங் அவர்கள். தனது பள்ளிப்படிப்பை முடித்த கையோடு தனது 18-வது வயதில் சென்னையில் உள்ள தனியார் அச்சகத்தில் வேலைக்கு சேர்ந்தார். வேலைக்கு சேர்ந்த இடத்தில் தனது கடின உழைப்பாலும், வேலை மீது கொண்ட அதீத ஆர்வத்தாலும் மிகக்குறுகிய காலத்திலேயே அச்சகப்பணிகளை மிக எளிதாக கற்றுத்தேர்ந்தார்.

5 ஆண்டுகளில் அச்சக வேலைகளை கற்று தேர்ந்த பிரதாப்சிங் அவர்கள், 1954-ம் ஆண்டில் ஈகிள் அச்சகத்தை தொடங்கினார். ஈகிள் அச்சகத்தில் ஆண்டு டைரியை வெளியிட்டார். நாளடைவில் ஈகிள் டைரி மிகவும் புகழ்பெற்று விளங்கியது. டைரி விற்பனையும் அமோகமாக நடைபெற்றது. அதனால் வருமானமும் பெருகியது. அதன் மூலம் அச்சகத்தை விரிவுபடுத்தி ஆசியா கண்டத்திலேயே மிகப்பெரிய அச்சகமாக உருவாக்கினார்.

அதோடு நிறுத்தி விடாமல், 1975-ம் ஆண்டு பூம்புகார் என்ற பெயரில் பதிப்பகம் ஒன்றை தொடங்கினார். அந்த பதிப்பகத்தின் மூலம் இதுவரை 1300 தலைப்புகளுக்கு மேலான நூல்களை வெளியிட்டு சாதனை படைத்துள்ளார். அவரது பதிப்பகத்திலிருந்து வெளியான 3 நூல்களுக்கு "சாகித்திய அகாடமி" விருது கிடைத்துள்ளது கூடுதல் பெருமையாகும்.

தனது விடாமுயற்சியாலும் கடினமான உழைப்பாலும் உயர்ந்த நிலைக்கு தன்னையும் தனது குடும்பத்தையும் உயர்த்திக் கொண்ட திரு.பிரதாப்சிங் அவர்கள், அதிகமான சமூக சிந்தனையும் அக்கறையும் கொண்டவராக விளங்கினார். அதனால் தான் அன்றைய கால கட்டத்திலிருந்து சில அரசியல் தலைவர்களிடம் பழகும் பக்குவத்தையும் பண்பையும் பெற்றிருந்தார்.

நானும் அவரோடு கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக பழகும் வாய்ப்பை பெற்றவன். எங்களிடையேயான உறவு மிகவும் அன்பும் கனிவும் நிறைந்த உறவு. நான் அவரை பார்ப்பதற்காக எந்த நேரம் சென்றாலும் சிரித்த முகத்தோடு ஆரத்தழுவி வரவேற்று மகிழ்வார். நான் பலமுறை அவரிடம் நம் சமுதாயத்திற்காகவும், சமூகத்திற்காகவும் உதவிகள் கேட்டபோதெல்லாம் இல்லை என்று சொல்லாமல் உதவிகள் பல செய்து எங்களை உற்சாகப்படுத்தினார்.

ஏராளமான சாதனைகளுக்கு சொந்தக்காரராக வாழ்ந்த திரு.பிரதாப்சிங் அவர்களின் மறைவு ஈடு செய்ய முடியாத இழப்பாகும். அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலையும் வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

உழைப்பின் அடையாளமாக வாழ்ந்த திரு.பிரதாப்சிங் அவர்கள் விட்டு சென்ற சமூகப்பணியை நாமும் தொடர்ந்து செய்து நாட்டிற்கும் சமூகத்திற்கும் பெருமை சேர்ப்பதோடு அன்னாரது புகழை நிலைநாட்டுவோம் என்று உறுதி ஏற்போம் வாரீர் !

நன்றி !


நாடார் திருமணச் சேவையில் 19 ஆம் ஆண்டில் கைராசியான

## நாடார் விவாகம் திருமணத் தகவலகம்



36, காந்தித்தெரு, பூவரசூர், ஆறுமுகனேரி-628 202
செல்:9176051116, 9360539833. 04639-282222. 04639 296108.
nadar vivaham matrimony / www.nadarvivaham.in /
புரோக்கர் கமிசன் இல்லை. காலை:9:30 -12.30 மாலை 3.00 -6.00 ஞாயிறு விடுமுறை.
இணையதளத்தில் பதிவுக்கட்டணம் இலவசம்.

### தென்றல் திருமணத் தகவலகம்

பதிவுக் கட்டணம்:ரூ.3000 /சேவை கட்டணம் உண்டு.
முனைவர் த.த.தவசிமுத்து M.A., Phd.,



## ஜெயம் ரியல் எஸ்டேட் & ஜெயம் ஸ்வீட் ஸ்டால்

வீடு மனை வாங்க விற்க அணுகவும்.
கே.கே.நகர் அனைத்து வியாபாரிகள் முன்னேற்ற சங்கம் பதிவு எண்:473
கே.கே.நகர். எஸ்.தேவதாஸ் செயல் தலைவர்.
நெ.20/1, திரு.ராமசாமி ரோடு, கே.கே.நகர், சென்னை-78. செல்:9840369569. 9600005458

# வா...வியாபாரி ஆகலாம்

## 11.நெஞ்சிலே இடம் பிடிப்பது....?

அமுதா B.பாலகிருஷ்ணன்



"குமரி பெண்ணின் உள்ளத்திலே..
குடியிருக்க நான் வரலாமா...
குடியிருக்க நான் வருவதென்றால்
வாடகை என்ன தரவேண்டும்...?"
"குமரிப் பெண்ணின் கைகளிலே
காதல் நெஞ்சைத் தரவேண்டும்.
காதல் நெஞ்சைத் தந்துவிட்டு
குடியிருக்கவே நீ வரவேண்டும்"

எங்க வீட்டுப் பிள்ளை-யின் பாடல் நம் எல்லோருக்குமே தெரியும்.

உள்ளத்திலே குடியிருக்க- என்ன வேண்டும்?

காதல் நெஞ்சைத் தரவேண்டும் என்கிறாள் காதலி.

முதலாளி நெஞ்சிலே இடம் பிடிக்க என்ன வேண்டும்?

அதுவேதான், அந்த அன்புதான் (காதல் என்றால் அன்பு) வேண்டும்.

"இது எங்க முதலாளி, இது எங்க கடை"- அப்படிங்கிற பாசம், உரிமை, அன்பு எல்லாமே உங்கள் உள்ளத் தோடும், உணர்வோம் ஒன்றிப் போக வேண்டும்.

அங்கு வேலை பார்க்கிற வரைக்கும் அதுதான் நமக்குத் தாய்வீடு, நமக்கு எல்லா பொறுப்புகளும் உண்டு, எல்லாக் கடமைகளும் உண்டு.

இன்னும் சொல்லப் போனால், பெற்றோருக்கு ஒரு பெண் பிள்ளைபோல், பொறுப்பான பிள்ளைபோல் நாம் இருக்கவேண்டும்.

அங்கு இருக்கிறவரை அது நம் வீடு, இங்கிருந்து வெளியே வந்து சொந்தத் தொழில் தொடங்கியபின், அது பிறந்தவீடு -தாய் வீடு அப்படிங்கிற பாசமும் மரியாதையும் தொடர வேண்டும்.

அதாவது அங்கு வேலை பார்க்கிறபொழுது நாம் முழுக்க முழுக்க நம்மை அங்கே அர்ப்பணித்துக் கொள்ளவேண்டும்.

நூற்றுக்கு நூறு அல்ல..

நூற்றுக்கு இருநூறு, முன்னூறு அதற்கும் மேலேயே நாம் உழைக்கவேண்டும், விசுவாசமாக இருக்கவேண்டும்.

முதலாளி எள் என்பதற்குள் நாம் எண்ணையாக நிற்க வேண்டும்.

ஒருவர் தன் குமாஸ்தாவைப் பற்றி பெருமையாகத் தனது நண்பரிடம், "இந்தப் பய மாடசாமி இக்காம் பாரு, "எள்"ளுங்கிறதுக்குள்ள எண்ணையா வந்து நிப்பான்"- னாரு.

"அப்போ... அவன் ஏட்டிக்குப் போட்டியாத்தான் செய்வாங்கிற..."

"புரியலியே..."

"நீ என்ன சொன்னியோ அதைத்தான அவன் செய்யணும்... நீ "எள்" ளுன்னு சொன்னா அவன் எள்ளத்தான எடுத்துட்டு வரணும், எண்ணையோடு வந்தா என்ன அர்த்தம்...? நீ "ரவை"ன்னு சொன்னா அவன் உப்புமாவோடயா வருவான்..?னு கேட்டாரு.

"எப்பா... சாமி.. தெரியாமச் சொல்லிட்டேம்பா... நீ சாமான வாங்கிட்டுச் கிளம்பு"-ன்னு முதலாளி, நண்பரைப் பார்த்து கும்பிட்டாரு.

சரி... நம்ம கதைக்கு வருவோம்.

எள்ளுங்கிரதுக்குள்ள எண்ணையா வந்து நிற்பான்னா என்ன அர்த்தம்...?

அதாவது முதலாளி என்ன எதிர்பார்க்கிறாரோ அதற்கு மேலேயே நமது செயல்பாடு இருக்கணும்னு அர்த்தம்.

அவர் கோடு போட்டால் நாம ரோடு போடணும்.

அது பெரிய பெரிய விஷயமாத்தான் இருக்கணுங்கிறதுல்ல,

சின்னச் சின்ன விஷயங்கள்ல கூட நமது முத்திரையைப் பதித்துக் கொண்டேயிருக்கலாம், இருக்கணும்.

உதாரணமாக,

"எடே... நம்ம மாவட்டத் தலைவர் தேவராஜூக்கு போன் பண்ணணும், அந்த டெலிபோன் புக்க தா"ன்னு முதலாளி கேட்டால்...

"அண்ணாச்சி..., செல்லுக்கா இல்லை வீட்டுக்கா"- ன்னு நாம கேட்டகணும்.

"செல்லுக்குத்தான் போடணும்."

"அண்ணாச்சி அது 98400- 55366.. நான் போட்டுத் தாரேன்"-னு டக்குன்னு நாம டயல் பண்ணி, "யாரு.. தலைவரா பேசுறீங்க, நாங்க "இந்த" கடையிலயிருந்து பேசுறோம். எங்க முதலாளி பேசணுமாம்" -என்று சொல்லி போனை முதலாளிகிட்ட கொடுக்கணும்.

அதுலயும் முக்கியமா ஒண்ணக் கவனமாச் செய்யணும்- "அண்ணாச்சி மாவட்ட தலைவர் லைன்ல இருக்காங்க" - ன்னு சொல்லிக் கொடுக்கணும்.

காரணம்...

அந்த ஒரு நிமிஷத்துக்குள்ள முதலாளி இரண்டு மூணு சிந்தனைகளில் இருப்பாரு -யாருக்கு போன் பண்ணச் சொன்னாம்ங்கிறது கூட சமயத்துல மறந்து போயிருக்கும்.

"அண்ணாச்சி இந்தாங்க"- ன்னு மொட்டையாக் கொடுத்தால்,

"யாரு லைன்ல"-ன்னு கேட்க வேண்டிய சூழ்நிலை வரும், எதிர்முனையில இருக்கிறவங்களுக்கு சற்றே நெருடல் வரும், முதலாளியும் அசடு வழிய வேண்டியது இருக்கும்.

ஆப்பரேஷன் தியேட்டர்ல, டாக்டர் கையை நீட்டியதும், டக், டக்குன்னு நர்ஸ் கத்தி, கத்திரி, கிளிப் பஞ்சு முதலானவற்றை எப்படி குறிப்பறிந்து கொடுக்கிறாங்களோ, அந்த மாதிரி,

முதலாளி எட்டிப் பார்க்கும் பார்வையிலேயே அவர் எதைத் தேடுகிறார், "பென்னா, பென்சிலா, வண்டிச் சாவியா"-ன்னு நாம புரிஞ்சிகிட்டு டக்குன்ன எடுத்துக் கொடுத்துடணும்.

இப்படிச் சின்னச் சின்ன விஷயத்தையும் துல்லிய மாகக் குறிப்பறிந்து செய்தால்.. முதலாளி நெஞ்சில் இடம் பிடிப்பது கஷ்டமல்ல!!



செல்: 98405 57997, 98415 49955

V.S.குமார் ரியல் எஸ்டேட்

வீடு, மனை, வாங்க விற்க அணுகவும், வீடு, ஆபிஸ், கடை, குடோன் கம்பெனி வாடகைக்கு அணுகவும்.

டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை, வளசரவாக்கம், சென்னை-87

Owned at Published by K.M.JULIAN from 21, Krishnappa Naickan Street, Mettupalayam, Chennai-33 and Printed by K.M.JULIAN at "NEW MERIT PRINTERS" No: 14/51, Reddykuppam Road, Saidapet, Chennai-15. Editor K.M.JULIAN.


WE'RE BIG ON FUN
Reach levels of fun and fantasy never before experienced. Regale in a holiday experience filled with high energy entertainment at one of India's largest amusement park.
THRILLING INTERNATIONAL RIDES
WATER RIDES, WAVE POOL & WATER FALLS
MARYWORLD FOR KIDS
AMPHITHEATRE AND ENTERTAINMENTS
AMPLE CAR PARKING, RESTAURANTS AND POWER BACK-UP
MGM
Dizzee World
East Coast Road, Muttukadu
M.G. Muthu Group
FOR DETAILS CALL
+91-44-27472129 / 27472131
9790955554 / 9500063716 / 17
www.mgmdizzeeworld.com

Regd.No.TN/CC(S) DN/112/2024-2026
Registered Newspaper RNI 55354/1992
Posted at Egmore RMS-1, Partrika Channal Posted on 7.2.2024
PUBLISHED ON FIRST OF EVERY MONTH WPP Licence No.TN/PMG(CCR)/WPP 315/24-26

If underlivered please return to INDIAN NADARMURASU
21,Krishnappa Naiyakan Street,
Mettupalayam, Chennai-600 033.

# ஐந்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி

"நேர்மையாய் நடந்தவர்கள் சமாதானத்துக்குள்
பிரவேசித்து தங்கள் படுக்கைகளில் இளைப்பாறுகிறார்கள்".., ஏசாயா:57-2

## P.செல்வகுமாரி (வயது-53)

தோற்றம்:
07.04.1966

மறைவு
04.02.2019



உழைப்பு! உபசரிப்பு! உண்மை!!!
என வாழ்ந்து காட்டிய அன்பு தெய்வத்திற்கு எங்களது கண்ணீர்
அஞ்சலியை சமர்ப்பிக்கிறோம்.!

## அன்பு கணவர் J.பிருதிவிராஜ்

எபனேசர் ஸ்வீட்ஸ் சந்தி நாசரேத்
எண்:19, களஞ்சியம் தெரு, நாசரேத்,
பிள்ளைகள் மருமக்கள், பேரப்பிள்ளைகள்
மற்றும் குடும்பத்தினர்
செல்: 9578905831.